பக்கங்கள: பதினாறு + IV= 20

# உதயன்

விலை ரூபா 15.00

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 ஆடி 30 சனிக்கிழமை (15.08.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 262

## வன்னியில் 3 மணி நேரம் கடும் மழை

# இரண்டு முகாம்களுக்குள் வெள்ளம்

# அகதிகள் வேறு இடங்களுக்கு மாற்றம்

## சுமார் 10,000 மக்கள் பாதிப்புக்குள்

வவுனியா, ஓகஸ்ட் 15

வன்னி அகதிகள் தங்க வைக்கப்பட்டிருந்த செட்டிக்குளத்தில் உள்ள இராமநாதன், அருணாசலம் முகாம்களின் சில பகுதிகளுக்குள் வெள்ளம் புகுந்ததால் சுமார் 10,000 அகதிகள் வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டனர்.

வீதிகள் நீரில் மூழ்கி உள்ளதால் வாகனங்கள் அங்கு செல்ல முடியாத நிலையில், நேற்று அகதிகளுக்கான உணவு மற்றும் குடிதண்ணீர் விநியோகங்கள் பாதிக்கப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டது.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## நேபாளப் பிரஜை நேற்று கல்கிசையில் சடலமாக மீட்பு

கொழும்பு, ஓக. 15

நேபாள நாட்டுப் பிரஜை ஒருவரின் சடலம் கல்கிசைக் கடற்கரையோரத்தில் நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளது என கல்கிசைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். சடலமாக மீட்கப்பட்ட நேபாளப் பிரஜை 42 வயது மதிக்கத்தக்கவர் எனவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

நேற்றுமுன்தினமிரவு வெளிநாட்டினர்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## மக்களின் பாதிப்புகளை நீக்குவதற்கு மாற்று நடவடிக்கை எடுப்பதாக பஸில் தெரிவிப்பு

### இந்தியத் தூதுவர் அரசுடன் தொடர்பு

கொழும்பு, ஓக. 15

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வவுனியா அகதி முகாம்களில் உள்ள மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்து மாற்று நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்றிரவு தொலைபேசியில் பஸில் ராஜபக்ஷவுடன் தொடர்பு கொண்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## மடுமாதா திருப்பலிப் பூசையில் பங்குபற்ற ஒரு லட்சத்துக்கும் அதிகமான பக்தர்கள் திரண்டனர்

யாழ்ப்பாணம், ஓக. 15

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற மடுத் தேவாலயத்தின் வருடாந்தத் திருவிழாவில் இறுதிநாளான இன்று அதிகாலை 6.30 மணிக்கு இடம்பெறவுள்ள திருப்பலியைக் காண ஒரு லட்சம் மக்கள் கூடியிருப்பதாக நேற்றிரவு அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. (16 ஆம் பக்கம் பார்க்க)

## தென்மராட்சி தெற்கைச் சேர்ந்த 1,760 பேர் நேற்று 10 வருடங்களின் பின்னர் சொந்த இடங்களுக்குத் திரும்பினர்

### அமைச்சர் தேவானந்தா வைபவரீதியாக ஒப்படைத்தார்

யாழ்ப்பாணம், ஓக.15

தென்மராட்சி தெற்கு உயர்பாதுகாப்பு வலயத்துக்குட்பட்ட பிரதேசத்தைச் சேர்ந்த 498 குடும்பங்களைச் சேர்ந்த 1,760 பேர் பத்து வருடங்களின் பின்னர் மீளக்குடியமர நேற்று அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டில் நேற்று அங்கு அழைத்துச் செல்லப்பட்ட மக்களிடம் அவர்களது பிரதேசத்தை அமைச்சர் வைபவரீதியாக ஒப்படைத்தார். முருகமூர்த்தி ஆலய முன்றலில்நிகழ்வு நடைபெற்றது.

சாவகச்சேரியில் இருந்து அறுகுவெளி வரை மக்கள் மீளக்குடியமர அனுமதி வழங்

(15 ஆம் பக்கம் பார்க்க)

## வெடிகுண்டு வாகனம்: எதிர்க்கட்சிக்குச் சந்தேகம்

கொழும்பு, ஓக. 15

கடந்த வாரம் மன்னாரில் வைத்து பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டது என்று கூறப்படும் குண்டுகள் பொருத்திய வாகனம் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி சந் தேகம் வெளியிட்டுள்ளது.

அவ்வாறானதொரு வாகனம் கைப்பற்றப்பட்டமை உண்மைதானா என்று அக்கட்சி கேள்வி எழுப்பியுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## சாவகச்சேரி - தனங்கிளப்பு வீதியும் திறக்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஓக.15

சாவகச்சேரி - தனங்கிளப்பு வீதி பத்து வருட இடைவெளிக்குப் பிறகு பொது மக்கள் பாவனைக்காக நேற்றுத் திறந்து விடப்பட்டது.

இவ் வீதியில் உள்ள மயானங்கள் மற்றும் விளையாட்டு மைதானம் ஆகியவையும் நகர சபையிடம் கையளிக்கப்பட்டன.

நேற்று பகல் இப் பகுதிக்கு விஜயம் செய்த

(16 ஆம் பக்கம் பார்க்க)

## கல்விச்சுடர் உள்ளே

★தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சைக்காக நடத்தப்படும் விசேட பயிற்சிப்பரீட்சையில் யாழ்.பிரபல ஆசிரியர் [illegible] தயாரித்து வழங்கும் விசேட மாதிரி வினாத்தாள்.

### இரு இளைஞர்கள் கொலையுண்ட சம்பவம்

## அங்குலான பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியும் மற்றும் ஐவரும் கைதாகி விளக்கமறியலில்

கொழும்பு, ஓக. 15

இரத்மலானை, அங்குலான பகுதியில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இரு இளைஞர்கள் சடலங்களாக மீட்கப்பட்டமை மற்றும் அதனையடுத்து அங்கு ஏற்பட்ட களேபரம் என்பன தொடர்பில் அங்குலான பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உட்பட ஐந்து பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (16 ஆம் பக்கம் பார்க்க)

## 3 தசாப்தகாலப் பிரச்சினையை ஒரே இரவில் தீர்க்க முடியாது!

### அமைச்சர் விதாரண விளக்கம்

கொழும்பு, ஓக.15

மூன்று தசாப்த காலமாக நாட்டில் நிலவி வரும் தேசிய இனப்பிரச்சினைக்கு ஒரே இரவில் தீர்வுகாண முடியாது என சர்வகட்சி தெரிவுக்குழுவின் தலைவர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்

(16 ஆம் பக்கம் பார்க்க)

Cosy Hotel & Restaurant

தம் புரியாணி, நூடில்ஸ், (f)பிறைட்றைஸ், ஸ்பெஷல் நாண், பூரி, சூப் மற்றும் சைனிஸ், இந்தியன் ஸ்பெஷல் உணவு, கறி வகைகள்

Open 11.00 am to 11.00 pm

இல: 25, புகையிரத நிலைய வீதி, வெள்ளவத்தை. CALL: 0112504020

இல:15, சிறாம்பியடி லேன், யாழ்ப்பாணம். CALL: 021-2225899

கொசி உணவகம்


Feel at home

யாழ் நகரிலும் கொழும்பிலும் நீண்ட காலமாக சுவையான, தரமான Indian, Chinees உணவு வகைகளுடன்

AC Non AC Rooms Available

மக்கள் மனம் [illegible] தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லூர்க் கந்தசுவாமி கோயில் பெருந்திருவிழாவில் நேற்று இடம்பெற்ற கார்த்திகைத் திருவிழாவில் வள்ளி, தெய்வானை சகிதம் முருகப்பெருமான் பூச்சப்பறத்தில் வீதி வலம் வருவதையும் கூடியிருந்த பக்தர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

# பத்து வருடங்களின் பின்னர் சொந்த மண்ணில் கால் பதித்த மக்களின் மகிழ்ச்சி நீடிக்க வேண்டும்

## நெல்வயல் நிலம் கையளிப்பு நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 15

யுத்தத்தின் அனுபவங்களால் துயரப்பட்டு வாழும் இந்தப் பிரதேச மக்களுக்கு இன்றையதினம் ஒரு மகிழ்ச்சியான நாளாகும். இடம்பெயர்ந்து 10 வருடங்கள் எங்கெல்லாமோ தங்கிவிட்டு இன்று சொந்த மண்ணில் கால்பதித்திருக்கிறார்கள். இந்த மகிழ்ச்சி நீடிக்க வேண்டும்.

சமூக சேவைகள் மற்றும் சமூகநலத் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தென்மராட்சி தெற்கு உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களை அப்பகுதி மக்களிடம் கையளிக்கும் நிகழ்வு தென்மராட்சி பல நோக்குக் கூ.சங்கத் தலைவர் நா. சிவத்திருச்செந்துநாதன் தலைமையில் கைதடி நாவற்குழி முருகமூர்த்தி ஆலய முன்றலில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேலும் கூறியதாவது:

இன்று அமைதியைப் பேணக் கூடிய நிலையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஏற்படுத்தித்தந்துள்ளார். இந்த அமைதிக்காக படையினர் தியாகங்களைச் செய்திருப்பதாக பிரிகேடியர் லியனகே குறிப்பிட்டார். இதற்காக மக்களும் பல தியாகங்களைச் செய்திருக்கின்றார்கள். ஜனாதிபதியால் ஏற்படுத்தித் தந்த செயற்பாடுகளால் கிட்டியுள்ள அமைதிச் சூழலை பயன்படுத்தி எமது எதிர்காலத்தை ஒளிமயப்படுத்த மக்கள் தமது செயற்பாடுகளை ஒருங்கிணைந்து முன்னெடுக்க வேண்டும். நீங்கள் ஓரணியில் திரண்டு செயற்பட்டால் இலகுவாக நமது தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதாக இருக்கும்.

ஜனநாயக வழிபாட்டிலும் சரி, ஆயுதப் போரிலும் சரி ஈடுபட்டிருந்த தமிழ்த் தலைமைகள் மக்கள் பிரச்சினைகளை கருத்தில் கொள்ளாது தமது சுயலாபத்தைக் கவனத்தில் கொண்டு செயற்பட்டதே இன்றைய துன்பங்களுக்குக் காரணமாக உள்ளது.

இங்கு முக்கியமான பிரச்சினைகள் குறித்து தெரிவித்திருக்கின்றார்கள். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எதிர்வரும் 10 நாள்களுக்குள் தமது திட்டங்களைச் சமர்ப்பிக்கக் கேட்டுள்ளேன். அதன் பின்னர் உங்களது தேவைகளை துரிதமாக நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார் அமைச்சர்.

யாழ்.கமநல திணைக்கள பிரதி ஆணையாளர் பற்றிக்டிறஞ்சன், தென்மராட்சி பிரதேச செயலர் எஸ்.ஸ்ரீநிவாசன், சாவகச்சேரி பிரதேச சபைச் செயலாளர் எஸ். சிவராஜலிங்கம் கையளிக்கப்பட்ட பகுதிகளின் கிராம அலுவலர்கள் இ.சபாநாதன், ஆ.நடராசா, க.பாலசிங்கம், சாவகச்சேரி மின்சாரசபை முகாமையாளர் அ.ஞானப்பிரகாசம் ஈ.பி.டி.பி. யாழ்.மாவட்ட உதவி அமைப்பாளர் சாள்ஸ் உட்பட பலர் உரையாற்றினர்.

523 பிரிகேட் கொமாண்டர் சொய்ஸாவும் நிகழ்வில் கலந்து கொண்டார். (1-111)

## ஆங்கில ஆசிரியர்களுக்கு பயிற்சிப்பட்டறை

யாழ்ப்பாணம், ஓக. 15

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் சிரேஷ்ட, இடைநிலை வகுப்புக்களில் ஆங்கிலப் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான புயிற்சிப்பட்டறை நாளை மறுதினம் திங்கட்கிழமை சாவகச்சேரி மகளிர் கல்லூரி வைற் ஹவுஸ் மண்டபத்தில் நடைபெறும்.

கணிப்பீட்டு நடைமுறைகளில் ஏற்படுகின்ற எழு வினாக்களும் அவற்றைக் கையாழும் விதமும் என்னும் பயிற்சிப் பட்டறை நடத்தப்படவுள்ளதாக வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (1-207)

## சர்வதேச நாடுகளில் கே.பிக்கு ஆயிரத்து 582 வங்கிக் கணக்குகள்

கொழும்பு, ஓக. 14

புலிகளின் முக்கியஸ்தரான குமரன் பத்மநாதன் என்ற கே.பிக்கு சர்வதேச நாடுகளில் ஆயிரத்து 582 வங்கிக் கணக்குகள் இருக்கின்றன எனத் தெரியவருகின்றது.

இதுபற்றிய மிக இரகசிய அறிக்கையொன்று கனடா புலனாய்வுப் பிரிவினர் மூலம் சர்வதேசப் பொலிஸாருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

உலகின் வேறெந்த பயங்கரவாத இயக்கத்துக்கும் இத்தகைய பாரிய அளவு வங்கிக் கணக்குகள் இருந்திருக்கமுடியாது என உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த இரகசிய அறிக்கையில் கே.பியின் மலேஷியா மற்றும் சிங்கப்பூர் வங்கிக் கணக்குகளின் விவரங்களும் குறிக்கப்பட்டுள்ளன.

மேலும் கனடாவில் உள்ள பிரபல வங்கியொன்றில் இருந்து இவ்வருடம் மலேஷியாவில் உள்ள பிரதான வங்கியொன்றுக்கு 15 இலட்சம் டொலர்கள் அனுப்பப்பட்டுள்ளன எனவும் இந்த இரகசிய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஓக. 15

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக பொன்விழாவை முன்னிட்டு நடத்தப்பட்டு வரும் உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டமும் பரிசளிப்பு விழாவும் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு திக்கமுனை மைதானத்தில் இடம் பெறவுள்ளன.

கழகத் தலைவர் ஜெ.அரவிந்தன் தலைமையில் இடம் பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக எக்ஸ்போ விமான சேவை யாழ். அலுவலக முகாமையாளர் கு.வசீகரன் கலந்து கொள்வார். (1-253)

* * *

யாழ்ப்பாணம், ஓக.15

ஏழாலை சைவ சன்மார்க்க நெறிப் பாலர் முன்பள்ளியின் விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு சன்மார்க்க மகளிர் சன சமூக நிலைய தலைவர் திருமதி மல்லிகா ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவிற்கு பிரதம விருந்தினராக ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையின் ஓய்வு பெற்ற முன்னாள் அதிபர் செ. சிவநடராசாவும், சிறப்பு விருந்தினர்களாக திருமறைக் கலாமன்ற தலைவர் வ. பேரின்பநாயகம், சைவ சன்மார்க்க வித்தியாசாலை அதிபர் செல்வி ந. பிரபா ஆகியோரும் கலந்து கொள்வர்.

# 30 வருடங்களின் பின் சுதந்திரத்தை நோக்கி இந்தப் பிரதேச மக்கள் நகர வாய்ப்புக் கிட்டியுள்ளது

## தென்மராட்சி கட்டளை அதிகாரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 15

30 வருடங்களின் பின் இந்தப் பிரதேச மக்கள் சுதந்திரமான வாழ்வை நோக்கி நகரக்கூடியதாக உள்ளது என தென்மராட்சி கட்டளைத்தளபதி கேணல் லியனகேதெரிவித்தார்.

தென்மராட்சி தெற்கு உயர்பாதுகாப்பு வலயப் பிரதேசங்களை அப்பகுதி மக்களிடம் கையளிக்கும் நிகழ்வு தென்மராட்சி தெற்கு ப.நோ.கூ.சங்கத் தலைவர் நா. திருச்செந்துநாதர் தலைமையில் கைதடி நாவற்குழி முருகமூர்த்தி ஆலய முன்ற லில் நேற்று நடை பெற்றது.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தென்மராட்சி பிரதேச செயலர் எஸ். ஸ்ரீநிவாசன், யாழ் கமநல சேவைகள் பிரதி ஆணையாளர் பற்றிக்டிறஞ்சன் உட்பட பல்வேறு திணைக்களங்களையும் சேர்ந்த அதிகாரிகள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

கட்டளைத்தளபதி கேணல் லியனகே மேலும் பேசும்போது கூறியதாவது.

உங்களின் சுதந்திரத்திற்காக இராணுவத் தரப்பு மிகவும் கடினமான முயற்சியை மேற்கொண்டு அர்ப்பணிப்புடன் செயற்பட்டது. இந்தப் பகுதி மக்கள் இடம் பெயர்ந்து கஷ்டங்களின் மத்தியில் வாழ்ந்து துன்பப்பட்ட வேளையில் மீண்டும் சொந்த இடங்களில் வாழக் கூடிய வாய்ப்புக் கிடைத்துள்ளது.

இதுவரை போக்குவரத்துக்குரிய பாதை மூடப்பட்டிருந்தது. இன்று இந்தப் பாதையும் திறந்து விடப்படுவதால் உங்கள் போக்குவரத்து இலகுவாக அமைகிறது. யுத்தம் காரணமாக அனேக மரங்கள் சேதப்படுத்தப்பட்ட வேளையில் அதை நிவர்த்தி செய்வதற்காக புதிய மரங்களையும் நாட்டி வருகின்றோம்.

இராணுவத்தினர் உங்களின் காவலர்களாக உங்களின் பாதுகாப்பாளர்களாகவே தமது பணியை மேற்கொள்கின்றனர். உங்கள் வாழ்வை மேம்படுத்த இராணுவம் செயற்படும் என்பதை மகிழ்ச்சியுடன் கூறிக் கொள்ளுகின்றேன். - என்றார். (1-111)

## பட்டமேற்கல்வி டிப்ளோமா கற்கைநெறி இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக.15

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் நடைபெறும் பட்டமேற்கல்வி டிப்ளோமா 2009/2010 ஆம் கல்வியாண்டுக்கான நாள்பாடசாலை நாளை காலை 8.00 மணிக்கு யாழ்-பிராந்திய நிலையத்தில் நடைபெறுமென இணைப்பாளர் அறிவித்துள்ளார். (1)

## கூடைப்பந்தாட்டச் சங்க பொதுக்கூட்டம் நாளை

வலி.வடக்கு,ஓக.15

கூடைப்பந்தாட்ட சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கூட்டத்திற்கு கூடைப்பந்தாட்ட சங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட கழகங்களின் பிரதிநிதிகள் இருவரை கலந்து கொள்ளும்படி சங்கத்தின் செயலாளர் கேட்டுள்ளார். (50-86)

## கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக சாவகச்சேரி ஆஸ்பத்திரியால் பராமரிக்கப்பட்டுவரும் இரு சிறுவர்களை பெற்றோருடன் இணைக்க ஆளுநர் உத்தரவு

யாழ்ப்பாணம், ஓக. 15

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் கடந்த ஆறு மாதாங்களாக பராமரிக்கப்பட்டு வரும் இரு பிள்ளைகளை வவுனியா நலன்புரி நிலையத்தில் உள்ள பெற்றோரிடம் ஒப்படைக்க மாகாண ஆளுநர் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த ஏப்ரல் மாதம் வன்னிப் பகுதியிலிருந்து மக்கள் படகுகளில் இடம்பெயர்ந்த வேளையில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 11 வயது சிறுவனும் 9 வயது சிறுமியும் இங்கு வந்து சேர்ந்தனர்.

நீரிழிவு நோயினால் பீடிக்கப்பட்ட சிறுமி சிகிச்சைக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நாள் தொடக்கம் இருவரும் வைத்தியசாலை நிர்வாகத்தினால் பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

இவர்களது பெற்றோர் வவுனியாவில் உள்ள நலன்புரி நிலையமொன்றில் தங்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி. ஏ. சந்திரசிறி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் வைத்தியசாலைக்கு விஜயம் செய்து இவர்களைப் பார்வையிட்டனர்.

இவர்கள் இருவரையும் அவர்களது பெற்றோர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உரிய அதிகாரிகளுக்கு ஆளுநர் உத்தரவிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (1-207)

## சாவகச்சேரி வர்த்தகர்கள் அமைச்சர் டக்ளஸை சந்திக்கின்றனர்

யாழ்ப்பாணம், ஓக. 15

சாவகச்சேரி வணிகர் மற்றும் பிரதிநிதிகள் இன்று சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

தென்மராட்சி பிரதேச செயலக மண்டபத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெறுமெனத் தெரிவிக்கப்பட்டது. (1-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# இங்கு நடந்தது இப்போது அங்கு

இலங்கைப் பொலிஸாருக்கு எதிராகக் கொதித்து எழுந்திருக்கின்றன தென்னிலங்கை ஊடகங்கள். கொழும்பு அங்குலானப் பகுதியில் முதல்நாள் இரவு கைது செய்யப்பட்டவர்கள் என்று கருதப்படும் இரு இளைஞர்கள் அடுத்த நாள் வீதியோரச் சடலங்களாக மீட்கப்படும் நிலைமை ஏற்பட்டதை அடுத்தே பொலிஸாரை வையும் - வசைபாடும் - சீற்றத்தில் சீறிப் பாய்ந்திருக்கின்றன இந்த ஊடகங்கள்.

'தனக்குத் தனக்கென்று வரும்போது படக்குப் படக்கு என அடிக்குமாம் சுளகு' என்று ஒரு பேச்சுமொழி நம்மத்தியில் உண்டு. தென்னிலங்கை ஊடகங்களின் இந்தத் திடீர் சீற்றத்தை - ஞானோதயத்தை - நோக்கும்போது இந்தப் பழமொழிதான் நமக்கு நினைவுக்கு வருகின்றது.

அங்குலானச் சம்பவம் தொடர்பாக ஊடகங்களில் வெளிவரும் செய்திகள் உண்மையானவையாயின் இது மிகப் பாரதூரமான விவகாரமாகும். பொலிஸாரின் அத்துமீறிய - எதேச்சாதிகாரப் போக்கு - மிகவும் வன்மையாகக் கண்டிக்கப்படத்தக்கது; வெறுத்து ஒதுக்கப்பட வேண்டியது.

இது மட்டும்தான் - இப்போது இடம்பெற்றுள்ளது மட்டும்தான் - இந்த வரிசையில் ஒரேயொரு பாரதூரமான சம்பவம் என்பது அல்ல. தொடர்ந்து இடம்பெறும் மிக மோசமான அத்துமீறல்கள் வரிசையில் இதுவும் ஒன்று. இப்போது உயிர்ப்பலியானவர்கள் அந்தப் பிரதேச மக்களால் அதிகம் நேசிக்கப்படும் சிங்கள இளைஞர்கள் என்பதால் பொலிஸாரின் வழமையான விவகாரம் இங்குமட்டும் வெளிப்படுத்துகைப் போக்கில் விபரீதமாக்கப்பட்டிருக்கின்றது.

வடக்கு, கிழக்கில் விடுதலைப் புலிகளை அடக்குவதற்கென்ற பெயரில் கொண்டுவரப்பட்ட அவசரகாலச் சட்ட விதிகள், பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் போன்றவையும் அவற்றின் கீழ் பொலிஸாருக்கும் ஏனைய பாதுகாப்புத் தரப்பினருக்கும் வழங்கப்பட்ட கட்டுமட்டில்லாத - மித மிஞ்சிய - அதிகாரங்களும் புலிகளுக்கு எதிராகப் பிரயோகிக்கப்பட்டதுடன் மட்டுப்பட்டு விடவில்லை. அவை, தமிழ்ப் பொதுமக்களையும் தாராளமாக 'மேய்ந்து' ஏப்பம் விட்டன. அப்போதெல்லாம் தென்னிலங்கை நோக்கர்கள் அது குறித்து அலட்டிக் கொள்ளவேயில்லை; குழம்பவில்லை.

'எல்லாம் பிள்ளையார் கணக்கு' என்பது போல அனைத்தும் - கொல்லப்பட்ட அப்பாவிப் பொதுமக்களும் கூட - 'புலிகளின் கணக்கில்' கூட்டப்பட்டு கனகச்சிதமாக விடயங்கள் ஒப்பேற்றப்பட்டு வந்தன.

'புலிகளை அழிக்க பேயையும் அரவணைக்கத் தயார்!' என்று இலங்கை அரசுத் தலைவர் ஒருவர் முன்னர் கூறியமைபோல, புலிகளை ஒழிக்கும் நோக்கில் கொண்டுவரப்பட்ட விசேட சட்ட விதிகளும், பாதுகாப்புத் தரப்பினருக்கு வழங்கப்பட்ட எல்லையற்ற அதிகாரங்களும் பிசாசுச் சட்டங்களாக மாறி தமிழ்ப் பொதுமக்களை அரவணைத்தபோது யாரும் கண்டு கொள்ளவில்லை; அதிகம் அலட்டிக் கொள்ளவுமில்லை.

இப்போது புலிகள் முற்றாக அழிக்கப்பட்டு விட்டனர் என்று அறிவிக்கப்பட்ட பின்னணியில், இந்தப் பிசாசுப்பார்வை, பாதாள உலகக் கோஷ்டியினர் மீது திரும்பியது. அதன் விளைவு என்னவாயிற்று? சட்டத்துக்கு முரணான வகையில் இடம்பெற்ற பல படுகொலைகள் 'என்கவுண்டர்' சம்பவங்கள் என்ற பெயரில் சட்டமுறையாக்கப்பட்டன. வீதிகளில் இருந்து பல சடலங்களைப் பொறுக்கும் நிலைமை அண்மைக் காலத்தில் தென்னிலங்கையில் ஏற்பட்டது.

அப்போதும் கூட அசாதாரண அமைதியைத் தென்னிலங்கை தொடர்ந்தது.

'புலி மேய்ச்சல்' முடிவுற்று, 'பாதாள உலகக் குழு மீதான பாய்ச்சலும்' சூடு பிடித்த பின்னர், இப்போது அதே அட்டூழியம் மெல்ல மெல்ல தென்னிலங்கைப் பொதுமக்கள் பக்கமும் திரும்பும் நிலைமை ஏற்பட்டமையை அடுத்தே இப்போது கொதிக்கத் தொடங்கியிருக்கின்றது தெற்கு.

குற்றப் பொறுப்பிலிருந்து பொலிஸாருக்கும் ஏனைய பாதுகாப்புத் தரப்பினருக்கும் விசேட விலக்களிக்கும் சட்ட ஏற்பாட்டு வசதி, தமிழர் விவகாரத்தில் அத்துமீறல்கள் பெரும் அட்டூழியங்களாக அரங்கேற இடம் கொடுத்தது.

அதுவே, பாதாள உலகக் குழுவினருக்கு எதிராகவும் படுகொலை அடாவடித் தனம் பரந்து விரியவும் காரணமாயிற்று.

அதுதான், இப்போது தென்னிலங்கையிலும் அப்பாவிப் பொதுமக்களுக்கு எதிராகத் தனது வன்முறை மிலேச்சத்தனத்தைக் காட்டவும் வழி செய்திருக்கின்றது.

தமிழர்கள், பாதாள உலகக் குழுவினர்கள், கிரிமினல்கள் என்று பல தரப்பினருக்கும் எதிராக மேய்ந்த சக்திகள் இப்போது தங்களின் முழுக் கைவரிசையையும் எஞ்சியிருக்கும் தென்னிலங்கை மக்களுக்கு எதிராகவும் கட்டவிழ்த்து விடத் தொடங்கியதும் சீறுகிறது தென்னிலங்கை. அவ்வளவே.

'அரசு எவ்வழி, குடிகள் அவ்வழி' என்பார்கள்.

தான் 'சட்டமுறையற்றது' அல்லது 'வன்முறை' என்று குற்றம் சுமத்தும் விடயத்தை அடக்குவதற்கு அதே 'சட்ட முறையற்ற' வழியை அதிகாரத்தில் இருப்போர் நாடினால் - அல்லது அதற்கு இடமளித்து, ஆசீர்வாதம் வழங்கி, பார்த்திருந்தால் -

அத்தகைய சட்ட முறையற்ற விடயத்தை ஒப்பேற்றும் அரச முகவர் அமைப்பும், தானும் தன் விருப்பத்துக்கு அந்த வழியை நாட முற்படுவது தவிர்க்க முடியாதது.

அதுவே இத் தேசத்தில் இப்போது கட்டவிழும் பல குளறுபடிகளுக்குப் பிரதான காரணமாகவும், விளக்கமாகவும் அமைந்திருக்கின்றது.

# நலன்புரி முகாம்களிலிருந்து விடுவிக்கப்பட்ட மாணவர்கள் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு வசதி செய்க

## சம்பந்தப்பட்டோரிடம் பெற்றோர்கள் கோரிக்கை

வலி.வடக்கு,ஓக்.15

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து வந்து தென்மராட்சி, கோப்பாய், நாவற்குழி நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுப் பின்னர் மீள் குடியமர்வதற்கு அனுமதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த உள்ள தரம்-5 இல் கல்வி பயிலும் மாணவர்கள் அடுத்த சில தினங்களில் நடைபெறவுள்ள தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றுவதில் சிரமங்களை எதிர்கொண்டுள்ளதாக அவர்களின் பெற்றோர் கவலை வெளியிட்டுள்ளனர்.

இதேபோன்று வவுனியா நலன்புரி நிலையங்களில் இருந்து கடந்த 5ஆம் திகதி குடாநாட்டுக்குக் கொண்டுவரப்பட்டு வீடுகளுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த தரம்-5இல் கல்வி கற்கும் பிள்ளைகளும் இதே பிரச்சினைக்கு முகம் கொடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகள் விடுமுறைக்காக மூடப்பட்டுள்ள நிலையில் தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றுவது சம்பந்தமான தகவல்களை அறிந்து கொள்ள முடியாமல் பிள்ளைகளும் பெற்றோர்களும் பெரும் திண்டாட்டமான நிலையில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பிள்ளைகளைச் சில பாடசாலைகளின் அதிபர்கள் முன்னர் கல்வி கற்ற பாடசாலைகளுக்குச் சென்று சான்றிதழ்களைப் பெற்றுவரும்படி கூறியதாகவும் பாதிப்புக்கு உள்ளாகிய மாணவர்களின் பெற்றோர்கள் கூறுகின்றார்கள்.

எதிர்வரும் 23ஆம் திகதி நடைபெறவுள்ள தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு நலன்புரி நிலையங்களில் விடுவிக்கப்பட்டுள்ள மாணவர்களும் தோற்றுவதற்கான ஏற்பாடுகளை கல்வித் திணைக்களம் மேற்கொண்டு அவற்றை அறிவிக்க வேண்டுமென மாணவர்களின் பெற்றோர் கோரியுள்ளனர். (50-86)

# முகாம்களிலுள்ள அரச ஊழியர்கள் விசாரணைகளின் பின்னரே சேவையில்

## அமைச்சர் அமுனுகம கூறுகிறார்



கொழும்பு,ஓக.15

வன்னியில் பல்வேறு பகுதிகளிலும் பணிபுரிந்த அரச ஊழியர்கள் பாதுகாப்பு அமைச்சின் பொறுப்பில் விசாரணை செய்யப்பட்டு அதன் அங்கீகாரத்துடன் மீளச் சேவையில் இணைத்துக்கொள்ளப்படுவர் என பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச் சர் சரத் அமுனு கம தெரிவித் தார்.

பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சில் கடந்த 12ஆம் திகதி இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் விளக்கமளிக்கும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த 4 ஆயிரத்து 500 அரச ஊழியர்கள் வவுனியா முகாம்களில் தங்கியுள்ளனர். இவர்களுக்கான சம்பளம் மாதாந்தம் வழங்கப்பட்டு வருகிறது.

வடக்கில் சிவில் நிர்வாகத்தைக் கட்டியெழுப்பும் நடவடிக்கையின் கீழ் இவர்கள் மீளவும் அவர்கள் வகித்த பதவியில் நியமிக்கப்படுவர். எனினும், அவர்கள் பாதுகாப்பமைச்சினால் விசாரணைக்கு உட்படுத்தப் பட்ட பின்னர் அவ்வமைச்சின் சான்றுப் படுத்தலுடனேயே மீளசேவையில் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்.

இவர்களில் சிலர் தொடர்பான விசாரணைகள் தற்போது இடம் பெற்று வருகின்றன - என்றார்.

# ஏ-9 வீதியூடாகத் தபால் சேவையை ஆரம்பிக்க தபாலகங்களுக்கு மூன்று புதிய வாகனங்கள்

யாழ்ப்பாணம்,ஓக.15

குடாநாட்டிற்கு ஏ-9 வீதியூடாகத் தபால் சேவையை ஆரம்பிக்கும் பொருட்டு யாழ்ப்பாணம், வவுனியா, பிரதம தபாலகங்களுக்கு மூன்று தபால் வாகனங்களை வழங்குவதற்கு அஞ்சல் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த மூன்று தபால் வாகனங்களில் ஒன்று யாழ்ப்பாணம் பிரதம தபாலகத்துக்கும் மற்றைய இரண்டும் வவுனியாவுக்கும் வழங்கப்படவுள்ளன.

தற்போது யாழ்.பிரதம தபாலகத்தில் இரண்டு வாகனங்களே தபால் சேவையில் ஈடுபட்டு வருகின்றன.

ஏ-9 தரைப்பாதையூடான தபால் சேவை ஆரம்பிக்கப்படும் பட்சத்தில் விநியோக நடவடிக்கைக்குத் தற்போது உள்ள வாகனங்கள் போதாது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (50-224)

# வல்லை கடல் நீரேரிக்குச் செல்லும் வெள்ள வாய்க்கால் புனரமைப்பு

வடமராட்சி,ஓக.15

உடுப்பிட்டி, இமையாணன் பகுதியிலிருந்து வல்லை வயல் ஊடாக வல்லை நீரேரிக்குச் செல்லும் வெள்ள வாய்க்கால் உணவுக்கான வேலைத் திட்டத்தின்கீழ் புனரமைப்புச் செய்யப் பட்டுள்ளது.

பன்னெடுங்காலமாக இவ்வாய்க்கால் புனரமைப்புச் செய்யப்படாமையினால் கடும் மழைகாலங்களில் இவ் வாய்க்காலுக்கு மேலாக வெள்ளம் பாய்ந்து அவ்வெள்ளம் நெல்வயல்களுக்குள் புகுந்து நெற்பயிருக்கு அழிவுகளை கடந்த காலங்களில் ஏற்படுத்தி வந்தது.

இவ்வாய்க்கால் புனரமைப்புச் செய்ய வேண்டிய அவசியம் குறித்து புலோலி கமநலசேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் எஸ். உருத்திரேஸ்வரன் உரிய அதிகாரிகளுக்கு எடுத்துக் கூறியதையடுத்து சோ.ஆ. நிறுவனம் உணவுக்கான வேலைத்திட்டத்தின் கீழ் இவ்வாய்க்காலைப் புனரமைப்புச் செய்ய முன்வந்தது. இமையாணன் மேற்கு, கரணவாய் மேற்கு விவசாய சம்மேளனங்களைச் சேர்ந்த சுமார் நூறு விவசாயிகள் உணவுக்கான இவ்வேலைத்திட்டத்தில் இணைந்து சில வார காலத்துக்குள் சுமார் 4 ஆயிரம் அடி நீளமான வெள்ள வாய்க்காலை ஆழமாகத் தோண்டி மிக உயரமாக அணை கட்டி புனரமைப்புச் செய்துள்ளனர்.

வாய்க்கால் புனரமைப்புச் செய்யப்பட்டமையால் இனிமேல் வல்லை வெளி வயல் நிலங்களுக்கு வெள்ளம் ஏற்பட்டால் பாதிப்புகள் எதுவும் இடம் பெறாத நிலை ஏற்பட்டுள்ளது.

உடுப்பிட்டி, இமையாணன் பகுதிகளிலிருந்து வரும் வெள்ளம் இவ் வாய்க்கால் ஊடாக வல்லை வயல் நிலங்களைத் தாண்டி கடல் நீரேரிக்குள் செல்ல வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

நீண்டகாலத்திற்குப் பின்னர் வாய்க்காலை புனரமைக்க நடவடிக்கை எடுத்தமைக்கு புலோலி விவசாயப் போதனாசிரியருக்குப் விவசாயிகள் நன்றி தெரிவித்துள்ளனர். (236)

## நாளை

| | |
|---|---|
| ஆடி 31 | 16.08.2009 |
| | ஞாயிற்றுக்கிழமை |
| திதி: | ஏகாதசி |
| | பி.இ. 01.56 வரை |
| நட்சத்திரம்: | மிருகசீரிடம் |
| | பி.ப 05.27 வரை |
| சுபநேரம்: | 09.05 - 10.35 |
| ராகுகாலம்: | 04.35 - 06.05 |

# யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் முறைகேடுகள்; மாணவர்கள் அமைச்சர் டக்ளஸிடம் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஓக. 15

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் பல்வேறு முறைகேடுகள் தொடர்ந்து இடம்பெற்று வருவதாகவும் இதனால் அங்கு கல்வி பயிலும் மாணவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளதாகவும் இந்நிலை தொடருமானால் யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி மூடப்படும் நிலை வெகுவிரைவில் உருவாகும் என்றும் அங்கு கல்வி பயிலும் மாணவர்கள் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் முறையிட்டுள்ளனர் என்று சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சு நேற்று வெளியிட்ட ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொழில்நுட்பக் கல்லூரிக்கு நிரந்தர விரிவுரையாளர்கள் நியமிக்கப்படாமை, வருகை விரிவுரையாளர்களுக்கான கொடுப்பனவுகள் பல மாதங்களாக வழங்கப்படாமை, தகுதியற்ற விரிவுரையாளர்களை நியமித்துள்ளமை, தொழில்நுட்பக் கல்லூரிக்குரிய பாடநெறிகளை நிறுத்தி 30 ஆயிரம் ரூபா கட்டணத் துடன் கூடிய டிப்ளோமா கற்கை நெறியைக் கொண்டுவர ஏற்பாடுகள் செய்திருப்பமை, ஆய்வுகூட மற்றும் செய்முறை உபகரணங்களை தனிப்பட்ட தேவைகளுக்காகப் பயன்படுத்தல், கல்வி நடவடிக்கைகளுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுக்காமை, வெளி நபர்களை கல்லூரிக்குள் கொண்டு வந்து மாணவர்களுக்கும் விரிவுரையாளர்களுக்கும் இடையூறுகளை விளைவிப்பது, கல்லூரியில் கல்விகற்காத நபர்களைக் கொண்டு மாணவர் மன்றம் அமைத் திருப்பமை, மாணவர் மன்றம் சார்பாக மாணவர்களிடமிருந்து திரட்டப்பட்ட நிதியில் மோசடிகள் செய்துள்ளமை, அதிபரின் மகனைக் கல்லூரிக்குள் பதவிகளில் நியமித்து அனுமதிப் பரீட்சைகளின்றி மாணவர்களை கற்கை நெறிகளுக்கு இணைத்துக் கொள்ளல், வடக்கின் வசந்தம் இலவச கற்கை நெறிகளுக்கு 50 ரூபா வீதம் மாண வர்களிடமிருந்து நிதி திரட்டுதல், 350 ரூபாவேனும் பெறுமதியற்ற கல்லூரி பெயர் அச்சிடப் பட்ட ரீஷேட்டுகளை 850 ரூபாவிற்கு விற்பனை செய்தல், விளக்கம் இல்லாத அரசியல் பணிகளுக்காக மாணவர்களைப் பலவந்தமாக ஈடு படுத்துதல் போன்ற பல்வேறு முறைப்பாடுகளை இம் மாணவர்கள் முன்வைத்துள்ளனர் என்றும் சமூகசேவைகள் அமைச்சின் ஊடக அறிக்கையில் விவரிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான முறைகேடுகளில் இருந்து யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியைக் காப்பாற்றி, தங்களது எதிர்கால வாழ்க்கைக்கு நல்லதொரு ஏற்பாட்டைச் செய்வதற்கு உரிய அமைச்சரைத் தொடர்புகொண்டு ஆவன செய்து தருமாறு இம்மாணவர்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இம்மாணவர்களது கோரிக்கை தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனித்தனியாக ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-50-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றோட்டறி தலைவர் பதவியேற்பு இன்று

யாழ்ப்பாணம், ஒக.15

யாழ்.றோட்டறிக்கழகத்தின் 69ஆவது தலைவராக றொட்டே றியன் நிலா தர்மகுலசிங்கம் இன்று பதவியேற்கிறார்.

பதவியேற்பு நிகழ்வு இன்று நண்பகல் 12மணிக்கு சிவகுரு நாதர் வீதியில் உள்ள றோட்டறி நிலையத்தில் இடம்பெறவுள் ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக வணிக பீடாதிபதி கே.தேவராஜா கலந்து கொள்வார். (1)


யாழ்.குடாநாட்டு ஷெல்காஸ் பாவனையாளர்களுக்கும் புதிதாக பாவனையில் இணைந்து கொள்ளவிரும்புவர்களுக்கும்

**ஓர் இனிய நற்செய்தி!**

12.5 Kg ஷெல் காஸ்

| | |
|---|---|
| வெற்று சிலிண்டர் ஒன்றின் விலை | 4600 |
| விசேட விலைக் கழிவு | 1000 |
| விசேட விலை | 3600 |

தங்கள் அருகில் உள்ள முகவரிடம் தங்களது அடையாள அட்டை இலக்கம், நிரந்தர முகவரி, தொலை பேசி இலக்கம் என்பவற்றை வழங்கி வெற்றுச்சிலிண்டரை சிட்டையுடன் பெற்றுக்கொள்ளவும்.

குறிப்பு:
இச்சலுகை ஒகஸ்ட் 31 ஆம் திகதி வரைக்கும் அல்லது ஒதுக்கப்பட்டகையிருப்பு முடிவடையும் வரைக்கும் மட்டுமே

நன்றி
ஷெல்காஸ் லங்கா லிமிடெட் சார்பாக
யாழ்குடாநாட்டு ஷெல் முகவர்

S.V.MURUGESU
154, HOSPITAL ROAD,
JAFFNA
(87913) 021 222 2911, 021 222 8899


## 20 ஆம் ஆண்டு இதய அஞ்சலி



| அன்னை மடியில் | துர்க்கா தேவியின் அடியில் |
|---|---|
| 24 - 03 - 1919 | 15 - 08 - 1989 |

### அமரர் கந்தையா தணிகாசலம்

(ஓய்வுபெற்ற களஞ்சியப் பொறுப்பாளர், நீர்ப்பாசனத் திணைக்களம், நிர்வாகசபை முன்னாள் செயலர், துர்க்கா தேவஸ்தானம்)

எம்மை வளர்த்து ஆளாக்கி பாரினில் வளமுடன் வாழ வழிசமைத்த எமது அன்புத் தெய்வத்தை இந்நாளில் மனம் நெகிழ்ந்து வணங்குகின்றோம்.

ஆனைக்குட்டி ஒழுங்கை,
தெல்லிப்பழை. (87913)

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## முதலாண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 28 ★ 03 ★ 1931 | 28 ★ 07 ★ 2008 |

### அமரர் குழந்தைவேலு நடராஜன்

பாசத்தின் வடிவமதாய் பார்த்திருந்த என் துணைவனே!
அன்புக்கும் அமைதிக்கும் உறைவிடமான எங்கள் தந்தையே!
எங்கள் உயிரும் உணர்வும் இருக்கும் வரை
உங்கள் பாசத்தை மறக்க முடியுமா?

அன்னாரின் நினைவாக நாளை (16.08.2009) ஞாயிற்றுக் கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

29, மூத்தவிநாயகர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே.:021 222 7022 (87902)

உங்கள் நினைவுறும்:
அன்பு மனைவி,
பிள்ளைகள்.




யாழ்ப்பாணம், ஒக. 15

வரணி குடமியன் ஆதிசிவன் தேவஸ் தான வருடாந்த பெருந்திருவிழா இன்று முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத் துடன் ஆரம்பமாகின்றது.

எதிர்வரும் 23 ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் முற்பகல் 11 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (1)

* * *

யாழ்ப்பாணம், ஒக. 15

காரைநகர் கிழவன்காடு கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்வ சவம் எதிர்வரும் 20 ஆம் திகதி வியாழக் கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 16 தினங் கள் நடைபெற உள்ளது.

தினமும் மாலை 7 மணிக்கு சமய சொற் பொழிவுகளும் இரவு 8 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து சுவாமி திருவீதி வரும் காட்சியும் இடம்பெறும். (1-250)

* * *

யாழ்ப்பாணம், ஒக. 15

காரைநகர் தங்கோடை நாகபூசணி அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று சனிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெற உள்ளது.

இந்த உற்சவத்தின் இறுதி நாளான 24 ஆம் திகதி திங்கட்கிழமை சங்காபிஷே கமும் மணவாளக் கோல உற்சவமும் இடம் பெற உள்ளன. அன்றைய தினம் காலை 7 மணிக்கு காரைநகர் மணற்காடு முத்து மாரி அம்மன் ஆலயத்தில் இருந்து மங்கை யர்களின் பாற்குடப் பவனியும் தொடர்ந்து சங்காபிஷேகமும் இடம்பெறும். (1-250)

* * *

வடமராட்சி, ஒக. 15

வல்வெட்டித்துறை உலகுடைய பிள் ளையார் கோயில் வருடாந்த அலங்கார உற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை ஆரம்ப மாகி 9 நாள்கள் தொடர்ந்து நடைபெறும்.

அலங்கார உற்சவத்தின் 10 ஆம் நாளாகிய 25 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை பகல் அஷ்சோத்திரசதசங்காபி ஷேகம் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து மாலை 4 மணிக்கு வசந்த மண்டபப் பூஜை நடைபெறுவதுடன் அலங்கார உற்சவம் நிறைவடையும் என கோயில் உரிமையாளர் தி.வேலுப்பிள்ளை தெரி வித்துள்ளார். (1-236)


**புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்குண்டு.**

★ கண்ணா பாம்
13, மாரி அம்மன் வீதி, திருநெல்வேலி 077 6171490
★ நாதன் பாம்
ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு. 077 9946770

**தேவை**

சுப்பர் மாக்கட்டில் பாவனையில் உள்ள "CASH MACHINE OPERATION" தெரிந்த காசாளர் மற்றும் மருந்தகத்தில் வேலைபழக விரும்புபவர் களும் தேவை. சுயவிவரங்களுடன் நேரில் வரவும்.
வெஸ்கோ மருந்தகம்,
470, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**தேவை**

கணனியிலும், மொபைல் போனி லும் அனுபவமுள்ளவர்கள் தேவை. சுய விபரங்களுடன் நேரில்வரவும். வெஸ்கோ மருந்தகம் 470, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப் பாணம்.


**தவறி விட்டது**

கச்சாய் தெற்கு, கொடிகாமத்தைச் சேர்ந்த கதிரவேலு திருநாவுக்கரசு ஆகிய எனது தேசிய அடையாள அட்டை மோட்டார்ச் சைக்கிள் இன்சூரன்ஸ், ரக்ஸ் ஆகியவை சாவகச்சேரி சந்தையுள் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து சாவகச்சேரி மணியம் ஸ்ரோர்ஸில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.


**தேவை**

வியாபார முகவர் நிறுவனம் ஒன்றில் பின்வரும் பதவிகளுக்கு வெற்றிடங்கள் உள்ளது.
1. விற்பனை உதவியாளர்
2. கணனி சார் வேலை தெரிந்தவர்கள்
ஆர்வமுள்ளோர் நேரில் வரவும்.
அண்மையில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.
அஸ்வினி மனி பிளாசா
74, ராஜா பிளாசா, பலாலி வீதி, கோண்டாவில்

**பதவி வெற்றிடம்**

லங்கா பெல் முகவர் நிறுவனத்திற்கு முகாமைத்துவ உதவியாளர் தேவை.
அஸ்வினி மனி பிளாசா
74, பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு


## நன்றி கூறுகின்றோம்



ஊசலாடி உயிரைத் தவிர அனைத்தையுமே பறிகொடுத்து நொந்துகெட்டு லட்சக் கணக்கில் வந்து தங்கி இருந்த எம்மை தேடி வந்து ஆறுதல் மொழி சொன்னதுடன் வாக்குறுதி தந்தபடி கைதடி பல்கலைக்கழக நலன்புரி முகாமில் இருந்த எம்மை கடந்த 05.08.2009 அன்று விடுவித்தமைக்கு அயராது பாடுபட்ட சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர்

**கே. என். டக்ளஸ் தேவானந்தா**

அவர்களுக்கும் எமது விடுவிப்பிற்காக பாடுபட்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

எம்மைப்போல், ஏனைய முகாம்களில் உள்ளவர்களையும் வெகு விரைவில் விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு சிரம் தாழ்த்தி வேண்டுகிறோம்.

நாரந்தனை மேற்கு,
ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம். (87895)

அம்பலவாணர் சதீஸ்குமார்
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்வி நிறுவனத்தில் தரம் 9இல் கல்வி பயிலும் செல்வி கி.சியாளினியின் அன்புத் தந்தை **நடராசசிங்கம் கிருபாகரன்** அவர்கள் 13.08.2009 அன்று அகால மரணமடைந்த செய்திகேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆண்டு 9 மாணவர்கள், மணிக்கல்வி நிறுவனம்,**
தலையாழி, யாழ்ப்பாணம். (87901)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 10 - 05 - 1927 | 16 - 07 - 2009 |

### சின்னப்பு நாகமணி

கடந்த 16.07.2009 இல் அமரத்துவமடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு எங்கள் துயரில் பங்குகொண்ட உற்றார், உற வினர், நண்பர்கள் அனைவருக்கும் மற்றும் தொலைபேசி, தந்தி மூலம் அனுதாபங்களைத் தெரிவித்துக்கொண்டோ ருக்கும் சகல விதத்திலும் உதவிகள், ஒத்தாசைகள் புரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரி வித்துக்கொள்கிறோம்.

அன்னாரின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வு கள் இன்று(15.08.2009)சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் கலந்துகொள்வதோடு நண்பகல் நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவ னைப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கலையரசு வீதி,
நவாலி தெற்கு,
மானிப்பாய். (87913)

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### அல்பிரட் சின்னையா ஜீவரட்ணம் (சாம்)

(சின்னையா அன்ட் சன்ஸ், யாழ்ப்பாணம்)



நவாலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அல்பிரட் சின்னையா ஜீவரட்ணம் (சாம்) 13.08.2009 வியாழக்கிழமை மாலை கர்த்தருக்குள் நித்திரை அடைந்து விட்டார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
அ. சி. ஜெயரட்ணம்
(டேவிற் - சகோதரன்)

நவாலி தெற்கு,
நவாலி. (87906) க. அ. சின்னையா அன்ட் சன்ஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருவருள் மிகு சாவகச்சேரி வாரிவனம் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்

# பரிவார மூர்த்தி ஸ்ரீ மகா காளி அம்பாள்

# கலச சங்காபிஷேக விஞ்ஞாபனம் - 2009

மங்களகரமான விரோதி வருடம் ஆவணி முதல் நாள் (17.08.2009) திங்கட்கிழமை

தேவிதுதி

மேதாஸிதேவி விதிதாகில - சாஸ்த்ர - ஸாரா
துர்க்காளிதுர்க்க - பவஸாகர - நௌ - ரஸங்கா?
ஸ்ரீ! கைடபாரி ஹருதயைக - க்ருதாதி வாஸா
கௌரீ த்வமேவ சசி மௌலி - க்ருத - ப்ரதி ஷடா!!
(தேவி மாஹாத்மியம் அத் 04 சுலோகம் 11)

தேவி! சாஸ்திரங்கள் அனைத்தின் சாரத்தையுணரும் புத்தி வடிவினள் நீ!
கடந்தற்கரிய பிறவிக் கடலைக் கடந்து விக்கும் பற்றின்மை எனும் படகாகிய தூர்க்கா தேவி நீ!
விஷ்ணுவின் இருதயத்தைத் தனியிடமாகக் கொண்டு விளங்கும் ஸ்ரீதேவி நீ!
சந்திர மௌலியிடம் பிரியாதுறையும் கௌரியும் நீயே!

## சாவகச்சேரி வாரிவனம் அருள் மிகு முத்துமாரியம்மன் தேவஸ்தானம் மாரியம்மன்ஸ்ரீமகா காளியம்மன் கலச சங்காபிஷேக அழைப்பு



*'ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை அண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம்பூ நிறத்தாளை புவியடங்கக்
காத்தாளை அங்கையில் பாசாங்குசமும் கரும்பு வில்லும்
சேர்த்தாளை முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒரு தீங்கில்லையே'.*

அருள்மிகு வாரிவன ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தின் வெளி வீதியல் தனித்துவமாக அமைந்துள்ள ஸ்ரீ மகா காளியம்மனின் கும்பாஷேகம் 04.07.2009 நடைபெற்று தொடர்ந்து 45 நாள் மண்டலாபிஷேகம் நிகழ்த்தி 17.08.2009 அன்று சங்காபிஷேகமும் நடைபெற திருவருள் கை கூடியுள்ளது.

45 நாள்கள் மண்டலாபிஷேக நிகழ்வில் தம் உள்ளன்போடு பணியாற்றிய ஒவ்வொரு நாள் உபயகாரர்களுக்கும், குருக்களுக்கும் அவரது தலைமையில் பணியாற்றிய குருக்கள் ஆச்சாரியார்களுக்கும் தொண்டர்களுக்கும் இத்தருணத்தில் நன்றி தெரிவிப்பதுடன் அவர்கள் பல்லாண்டு நலத்துடன் வாழ்ந்து பணியாற்ற மாரியாத்தாளினதும் ஸ்ரீமகா காளியம்மனினதும் அருளாட்சி கிடைக்க வேண்டும்.

தட்பமுடன் வெப்பமும் அதாவது தண்மையுடன் வெம்மையும் இருந்தால் தானே சமனிலை ஏற்படும். ஒருவனிடம் வெப்பம் கூடிவிட்டால் சுரம் என்கிறோம். தட்பம் கூடி விட்டால் சன்னி என்கிறோம். உடல் நிலையில் கூட வெப்பமும் தட்பமும் சமநிலையில் இருக்கும் போது தான் தேக ஆரோக்கியம் உருவாகும். மழையோடு வெயிலும் இருக்கின்ற சீதோஷ்ண நிலையில் தானே பயிர் வளங்கள் சிறக்கும். எனவேதான் மாரியும் காளியும் ஒருங்கே சிறக்கும் அருள்மிகு வாரிவன ஸ்ரீ முத்துமாரியம்பாள் ஸ்ரீமகா காளியம்பாளின் சங்காபிஷேக நிகழ்வில் அடியார்கள் அனைவரும் ஆலயத்துக்கு வருகை தந்து தாயார்களின் திருவருளைப் பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

17.08.2009 அன்று நடைபெறும் அபிஷேக பூஜையில் குறிப்பாக ஸ்ரீமகா காளியம்மனுக்கு கலச சங்காபிஷேகமும், ஸ்ரீ முத்து மாரியம்மனுக்கு சங்காபிஷேகமும் நடைபெறும் என்பதனைக் கருத்திற்கொள்க.

தோத்திரப் பாடல் இறுவட்டு வெளியீட்டு நிகழ்வும், மகேஸ்வர பூஜையும் (அன்னதானம்) இடம்பெறும் என்பதையும் அறியத்தருகின்றோம்.

*திருப்பணிவித்தகர், மாரிமைந்தன், திருப்பணியாளர்,*
*திரு. வைத்திலிங்கம் சிவராசா.*

*அம்பாள் மெய்யடியார்களே!*

*தென்மராட்சிப் பதியில் சுந்தர பஞ்சதள இராஜ கோபுரத்துடன் வாரிவனம் திவ்விய பதியில் பல நூறு ஆண்டுகளாகத் திருவருள் பாலித்துக் கொண்டு இருக்கும் ஸ்ரீ முத்துமரி அம்பாள் தேவஸ்தானத்தில் பரிவார மூர்த்தியான ஸ்ரீ மகா காளியம்பாளுக்கு மங்களகரமான விரோதி வருடம் ஆனித்திங்கள் 19ம் நாள் (04.07.2009) இல் நடைபெற்ற நூதன கும்பாபிஷேகம் பின் தொடர்ந்து நடைபெற்ற மண்டலாபிஷேகப் பூர்த்தி விழா, மங்களகரமான விரோதி வருடம் ஆவணி முதல் நாள் 17.08.2009 திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.*

*காலை 8 மணிக்கு முத்துமாரி அம்பாளுக்கு சங்காபிஷேகமும், காளி அம்பாளுக்கு கலச சங்காபிஷேகமும் நடைபெறவுள்ளது. தொடர்ந்து விசேட பூஜைகள், வேத தோத்திர திருமுறை பாராயணம் ஓதுதல், மகேஸ்வரபூஜை என்பன நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து தோத்திரப் பாடல்கள் இறுவட்டு வெளியிடும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.*

(அன்னதானம் வழங்கும் நிகழ்வுகள் இடம்பெறும் 'என்பதனை அடியார்களுக்கு அறியத் தருகின்றோம்)

### மங்கள வாத்தியம்

ஆர்.முருகானந்தம் (நடுவில்), கோண்டாவில்.
ஆர்.சுதா குழுவினர், (கட்டப்பிராய்).
தையல் நாயகி (நாதஸ்வரம்) கல்வியங்காடு.
புஸ்பராணி (தவில்) கல்வியங்காடு.
வட்டுர் இராமநாதன் புதல்வர்கள்

இடம்பெறும் நிகழ்வுகளில் கலந்து எம்பெருமாட்டியின் திருவருளைப் பெற்றுய்வீர்களாக
'எல்லோரும் இன்புற்று வாழ்க'
'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'

மாரிமைந்தன் திருப்பணி வித்தகர், திருப்பணியாளர்
திரு வைத்திலிங்கம் சிவராசா ( சிவா றேடிங் கம்பனி)
ஆலய ஆதீன பிரதம குரு,
சிவஸ்ரீ தம்பையாக் குருக்கள், வீரபத்திரக் குருக்கள்

## அம்பிகையைச் சரண் புகுந்தால் அதிக வரம் பெறலாம்



சாவகச்சேரி- வாரீவனம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானத்தில் எழுந்தருளி அருள்பாலிக்கும் அருள்மிகு ஸ்ரீ வடபத்திர காளியம்பாளின் கும்பாபிஷேகப் பெருந்சாந்தி விழா கடந்த (04.07.2009) சனிக்கிழமை மிகச் சிறப்பாக நடைபெற்றது. தொடர்ந்து 45 தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்று எதிர்வரும் 17.08.2009 திங்கட்கிழமை மண்டலாபிஷேகம் பூர்த்தி விழா நடைபெறுகின்றது.

திருப்பணியாளர் 'மாரிமைந்தன்' திரு.வைத்திலிங்கம் சிவராசா (சிவா றேடிங் கம்பனி) அவர்களின் அவனருளாலே அவன்தாள் வணங்கி என்ற திருவாச அடிகளுக்கு அமைவாக ஆன்மீக அறப்பணியில் திருப்பணி நிறைவேற்றி ஸ்ரீ முத்துமாரி அம்பாளின் ஆலயத்தை இந்தியாவிலிருந்து சிறந்த சிற்பக்கலைஞர்களை அழைத்து அழகிய கலைக் கோவிலாக்கியிருக்கின்றார். 27.08.2008 இல் அம்பாளின் ஆலயத்தில் குடநீராட்டு விழா நடை பெற்றது. தொடர்ந்து ஓராண்டு பூர்த்தியில் ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலயத்தில் ஸ்ரீமகா காளியம்பாளுக்கும் அழகிய ஆலயம் அமைத்து தமிழகத்திலிருந்து வருவிக்கப்பட்ட எட்டு அடி உயரமிக்க பத்துக் கரங்களோடு கூடிய ஸ்ரீமகாகாளியம்பாளை பிரதிஷ்டை செய்து அதன் கும்பாபிஷேகப் பெருஞ்சாந்தி விழா 04.07.2008 அன்று நடைபெற்றது.

கோயில் இல்லா ஊரில் குடியிருக்கவேண்டாம். அம்பிகையைச் சரண்புகுந்தால் அதிக வரம் பெறலாம் என்ற முது மொழிகளுக்கமைவாக தென்மராட்சி திரு நகரத்தில் வாரிவனம் பகுதியில் மாரியாகவும் காளியாகவும் அம்பிகை எழுந்தருளி வேண்டுவார் வேண்டும் வரமனைத்தையும் தரும் தாயாக பூத்தவளாக புவனப் பதினான்கையும் பூத்த வண்ணம் காத்தவளாய் பின் கரந்தவளாய் கறைக் கண்டனுக்கு மூத்தவளாய் என்றும் மூவா முகுந்தற்கு இளையவளாய் மாத்தவளாய் வேண்டுவார் வேண்டும் வரம் அனைத்தையும் தந்தருளும் தாயாக விளக்குகின்றாள்.

சிவமும் சக்தியும் பின்னமுடையவை. சிவலிங்கதத்துவத்திலுள்ள ஆவுடையார் சக்தியின் அம்சம் என்பர். தில்லை நடராசரது தூக்கிய திருவடி சக்தியின் திருப்பாதமே என்பது விளக்கம். யாதொரு தெய்வங்கொண்டீர். அத்தெய்வமாகி அங்கே மாதொரு பாகனார் தாம் வருவர் என்பது சித்தாந்த தத்துவம். மல பந்தங்களை ஆன்மாவிடத்தே பதியவிடாமல் சிவசம்பந்தமுறும் படியாக ஆன்மாவைத் திருவருள் செய்து உய்விக்கும் அருட்பிறத்தினைச் சக்தி தத்துவம் என்று விளங்கச்செய்யலாம். இயங்குகின்ற பொருள் சக்தியென்றும் இயக்குவிக்கும் பொருளுமாயிருப்பதும் சக்தியே.

இத்தகைய பெருமை படைத்த சக்திதான் அண்ட சராசரங்களுக்கு எல்லாம் தாயானவளும் முப்பத்திரண்டு அறங்களையும் செயற்படுத்தி அறம் வளர்த்த நாயகியாகவும் விளங்கும் உலக மாதா ஏழு கடல் வண்ணமாய் அணுவிலும் உறைகின்ற அந்த மாபெரும் சக்தி மதுரையிலேயே மீனாட்சியாகவும் காஞ்சியிலேயே காமாட்சியாகவும் காசியிலே விசாலாட்சியாகவும் தஞ்சையிலேயே முத்து மாரியாகவும் திருக்கடவூரிலே அபிராமியாகவும் சமயபுரத்தில் கருமாரியாகவும் முன்னேஸ்வரத்தில் வடிவாம்பிகையாகவும் வண்ணையிலே வீரமாகாளியாகவும் தெல்லிப்பழையிலே துர்க்கையாகவும் நயினாதீவிலே நாகபூசணியாகவும் இவ்வாறு பல்வேறு புண்ணிய தலங்களில் பல்வேறு நாமங்கள் தாங்கித் திருவருள் பாலிப்பவர்தான் சாவகச்சேரி வாரிவனத்தில் முத்துமாரியாகவும் ஸ்ரீமகாகாளியாகவும் அருள் பாலித்து நாட்டையும் மக்களையும் பாதுகாத்து வருகின்றாள். அவளருள் எங்கும் வியாபிக்க இந்நாளில் பிரார்த்திப்போமாக.

வர்ணனைக் கலாநிதி மதுரகவி காரை [illegible]
*அகில இலங்கை சமாதான நீதிவான், ஆசிரியர் [illegible]*

'ஸ்ரீ மகாகாளி அம்பாளைப் பணிவோம்
மண்ணில் எல்லோரும் நல்ல வண்ணம் வாழ்வோம்'

ஸ்ரீமகா காளி அம்பாளின் கலச சங்காபிஷேகம்
சிறப்புற வாழ்த்துவோர்

சிறி முத்துமாரி அம்மன் ரேடர்ஸ்
இல. 342, 344, 346
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

ரூபா
வர்த்தகநிலையம்
இல.104 A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

யாழ்.
வணிக நிலையம்
இல.338, 336 ஆஸ்பத்திரி
வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 9453

அம்பிகை
களஞ்சியம்
இல. 304 (110),
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்

ஈஸ்வர பகவான்
கம்பனி
இல.100, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

எஸ்.வி.முருகேசு
இல. 154,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'அருள் ஒளி' வெளிவந்துள்ளது


யாழ்ப்பாணம்,ஓக15

தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தின் வெளியீடான ''அருள்ஒளி'' சஞ்சிகையின் ஆடி மாத இதழ் வெளிவந்துள்ளது.

மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தின் முகப்புப்படத்தினை முன்பக்கத்தில் தாங்கியவாறு ஆன்மீகக் கட்டுரைகள், கவிதைகள் என்பவற்றுடன் துர்க்கையம்மன் ஆலயத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற சமூகப்பணி சார் குறிப்புகளுடன் மற்றும் பல அம்சங்களுடன் 'அருள் ஒளி' வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (9)

## கண்ணீர்க் காணிக்கை

"நன்று நன்று நம்பிக்கைக்குரிய நல்ல ஊழியனே
உனது தந்தையின் மகிழ்ச்சியில் கலந்துகொள்"



அருட்பணி

### பிலிப்பையா யேசுநேசன் அ.ம.தி

நா மொழி இழக்க
விழி வழி இழக்க
முடியாத
காவியமாய்...
வார்த்தைகளை
கண்ணீர் காவுகொள்ள
வேதனையில் வேகுதைய்யா
உம் இழப்பால்
தகப்பனே
எம் இதயம்.

பிரிவால் தவிக்கும் பிள்ளைகள்,
தூய டீ மசனட் இறையியல் குடும்பம்.

கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

(இ.5603314)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,
ஓக.15

மானிப்பாய் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் நிர்வாகத்தெரிவும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30மணியளவில் டச்சு வீதி, தோறாந்தோட்டம் வைரவர் ஆலய முன்றிலில் நடைபெறவுள்ளது.

சி.பொ.வ.மா.க முதலியார் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்திற்கு அனைத்து அங்கத்தவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (9-302)

## மரண அறிவித்தல்

### திருமதி மார்க்கண்டு பூரணபாக்கியம்



சுழிபுரம் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மார்க்கண்டு பூரணபாக்கியம் 09.08.2009 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமுத்து மார்க்கண்டுவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பொன்னையா - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நாகமுத்து - நாசகப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் தவமலர், பாக்கியநாதன் (பிரான்ஸ்), பத்மநாதன், பரலோகநாதன் (பிரான்ஸ்), நளினரஞ்சினி (ரூபி - லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும் கணேஸ்வரன் (சிவம்), பிரபாநிதி (பிரான்ஸ்), பக்தகௌரி, சுரேகா (பிரான்ஸ்), கதிர் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் திரு.திருமதி உமாகலியாணி காந்தசெல்வன், திரு.திருமதி தர்சினி சிவகுமார் (பிரான்ஸ்), காயித்திரி, ரகுநாதன் (பிரான்ஸ்), நிசாந்தினி (பிரான்ஸ்), வீரகுமார் (பிரான்ஸ்), மதன் (பிரான்ஸ்), மிதுரா (பிரான்ஸ்), அஜிந்தா (பிரான்ஸ்), துவாரகா (லண்டன்), ஓவியா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் கஜகாயினி, கஜதாரணி, பயிரவி, ரஜீவன் (பிரான்ஸ்), ராகவி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.08.2009) சனிக்கிழமை மு.ப. 9 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சுழிபுரம் திருவடிநிலை இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மக்கள் [illegible]

சுழிபுரம் கிழக்கு. (87899)

# வாசகர் திருமுகம்

## சுகாதார அதிகாரிகள் கவனிப்பார்களா?

மாநகர சபை சிற்றூழியர்கள் ஏனோதானோ என்ற போக்கில் வேலை செய்கிறார்கள் இதனைக் கவனிப்பார்களா? சுகாதார அதிகாரிகளும் மாநகரசபை மேலதிகாரிகளும்.

யாழ்.நகரப் பகுதியில் ஈடுபடும் சுத்திகரிப்பாளர்கள் வடிகால்களை சுத்தம் செய்யாது, நகரப்பகுதியில் காங்கேசன்துறை வீதியில் அமைந்திருக்கும் உணவகங்களை மட்டும்தான் சுத்தம் செய்கின்றனர். அவ் உணவகங்களின் சாப்பாட்டு இலைகளையும், பழைய உணவுகளையும் துப்புரவு செய்கிறார்கள். அக்கடைகளில் இருக்கும் பழைய உணவுகளை எடுத்துச் சுத்திகரிப்பு வண்டில் கொட்டுகிறார்கள். வீதியில் வைத்துவிட்டுச் சுத்தம்செய்வதற்குக் கூலியாகக் கடைக்காரர் சாப்பாடு கொடுக்கிறார்கள். அதுவரைக்கும் வண்டிலில் இருக்கும் பழைய சாப்பாடுகளைக் காகங்கள் தமக்கு இரையாக்கும் நோக்கில் அவ்விடத்தையே அசுத்தம் செய்வது மட்டுமல்லாது வீதியால் செல்பவர்களுக்கும் பழைய உணவுகளைக் கொத்திப் பறக்கும்போது அவர்கள் மேல் வீழ்த்துகின்றனது. இதற்கு ஊழியரிகளின் அசமந்தப் போக்குத்தான் காரணம்.

சாப்பாட்டுக் கடைமுன்னாலேயே இப்படி நடைபெறுகிறது. இதனைச் சுகாதார அதிகாரிகள் கவனிப்பார்களா? அல்லது மேலதிகாரிகள் கவனிப்பார்களா?

யாழ்ப்பாணம். இ.சுந்தரலிங்கம்.

## யாழ்.மாநகரசபைத் தேர்தல் ஒரு கருத்து

யாழ்.தமிழ் மக்கள் நன்றாகப் படித்ததாலா ஓர் 50 வீதத்தினரை அப்படிக் கொள்ளலாம். நல்ல அரசியல் அனுபவம் உள்ளவர்கள் கடந்த 50 ஆண்டுகளாக பல அரசியல் போராட்டங்கள், ஊர்வலங்கள், உண்ணாவிரதங்களிலேயே பங்கு பற்றியவர்கள். உரிமை, உரிமை என்று பேசிக்கொள்பவர் ஏன் போராடுகிறீர்கள் என்றால் அரசு எங்கள் உரிமைகளைத் தர மறுக்கிறது. எங்களை அடக்கி ஆள்கிறது என்பர்.

அத்துடன் தமிழ் பத்திரிகைகள் அரசாங்கத்தையும் இராணுவத்தையும் திட்டியபடி எழுதுவார்கள். மக்களெல்லாம் இவற்றை நன்றாகப் படிக்கிறார்கள். அப்படியிருந் தும் 80 வீத மக்கள் - வாக்காளர் வாக்களிப்பு நிலையங்களுக்கே செல்லவில்லை. ''மக்களெல்லாம் பிரபாகரன் பக்கம்'' என்று பாடுவார்கள். அவருடைய கொள்கைக்காகவாவது அரச கட்சியை எதிர்த்து தமது உரிமையை - பொன்னான உரிமையை - சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தவில்லையே. இதன் மர்மம் என்ன! அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவில் மயங்கியிருந்தால் தங்கள் வாக்குகளை அவருடைய கட்சிக்கு முழுமையாக அளித்திருக்கவேண்டுமே. அதுவும் நடக்கவில்லை. நாட்டிலே அமைதி, அசம்பாவிதம் ஏதுமின்றி வாக்களிப்பு. வாக்களிப்புச் சாவடிகள் அவரவர் வீட்டுக்கு அண்மையில் இருந்தும் நம்மக்கள் இராமன் ஆண்டாலும் சரி, இராவணன் ஆண்டா லும் சரி என்று வாளாவிருந்து விட்டார்கள்!

தேர்தலிலே வாக்களிப்பது உளவியல் ரீதியானது. யாருக்குப் போடுவது என்பது 24 மணித்தியாலத்தில் தீர்மானிக்கக் கூடியதன்று. மற்றவர் சொல்லிச் செய்வதுமன்று. பிரசுரங்கள், பிரசாரங்கள், சுவரொட்டிகளால் மாற்றக் கூடியதும் அன்று. எத்தனை கூட்டம் போட்டு வானிடியக் கர்ச்சித்தாலும், களியாட்டம், ஊர்வலம் நடத்தினாலும் ஒருவனுடைய தீர்மானத்தை மாற்றவேமுடியாது. அவன் கொண்ட முடிவு அது. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பாக அசுர வேகத்தில் நடைபெற்ற பிரசாரங்களால் வாக்காளர் - பொதுமக்கள் எடுபடாமல் இருந்தமை இதற்குத் தக்க சான்றாகும். மனம்மாறியிருந்தால் இன்னும் 20000 வாக்குகளாவது அந்தக் கட்சிக்குக் கிடைத் திருக்கும். இன்று கிடைத்த 10000 வாக்குகளும் அவருடைய நிரந்தர ஆதரவாளரே.

க.மகேசன்.

## உயர் கல்விக்கு இணையத்தளம் அவசியமாகும்

சிறிலங்கா யாழ்.ரெலிகொம்மால் இற்றைக்கு 2½ வருடங்களாக இணையத்தள இணைப்பு (Internet connection) கொடுக்கமுடியாத சி.டி.எம்.ஏ. தொலைபேசிகளை விநியோகித்துக் கொண்டிருக்கிறார்கள்.

கணனித்துறையில் உயர்கல்வியினைக் கற்றுக்கொண்டிருக்கும் எனக்கும் என் போன்றவர்களுக்கும் எமது கல்விக்கு இணையத்தளம் மிக இன்றியமையாத ஊடகமாக உள்ளது. ஆனால் எம்மால் அவ்விணைப்பினைக் கொடுக்கக்கூடிய சி.டி.எம்.ஏ. ரெலிபோனைப் பெறமுடியாதுள்ளது.

நான் இணையத்தள இணைப்பைப் பெறும் ரெலிபோனை மாற்றிப் பெற விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்திசெய்து கொடுத்து 2 வருடகாலமாகிறது. நாம் ரெலிகொம் யாழ்.கிளையில் இதுபற்றிக் கேட்கும் போதெல்லாம் இன்னும் அவ்வகை சி.டி.எம்.ஏ. தொலைபேசிகள் வரவில்லை எனக் கூறுகிறார்கள்.

இலங்கையில் எல்லாப் பாகத்திலும் பெறக்கூடிய இவ்வசதி யாழ்.மக்களுக்கு மட்டும் ஏன் இல்லை. ஏன் இந்தப் பாரபட்சம்? என்ன காரணம்? Internet cafeகளில் மணித்தியாலத்திற்கு 100/- முதல் 150/- வரை அறவிடப்படுகிறது. வீட்டில் மிகக் குறைந்தளவு பணத்தில் பெறக்கூடிய நிலையில் இவ்வளவு கூடியளவு பணத்தைச் செலவிட்டு கல்வி கற்பது மிகத் துயரமாகவும் கடினமாகவும் இருக்கிறது.

யாழ்.ரெலிக்கொம் முகாமையாளர் இப்பிரச்சினையைக் கருத்திலெடுத்து வாடிக்கையாளரின் தேவையை மிக விரைவில் பூர்த்திசெய்யவேண்டும்.

பைரவி,
கணனி உயர்கல்வி மாணவர்கள் சார்பாக, யாழ்ப்பாணம்.

## இந்த வீதியையும் திருத்தித் தருவார்களா?

வலி.கிழக்குப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கோப்பாய் மத்திய கிராம அலுவலர் பிரிவில் உள்ள கல்வியியற் கல்லூரிக்குச் செல்லும் கைதடி மானிப்பாய் வீதியிலிருந்து ஆரம்பமாகி இராச பாதையில் முடிவடையும் சுமார் 1.2 கிலோ மீற்றர் நீளமான வீதி (இராச பாதைக்கு கிழக்காக 500 மீற்றரில் உள்ளது) கடந்த பல வருடங்களாகத் திருத்தப்படாத நிலையில் உள்ளது.

இதுபற்றி அதிகாரிகள் பலருடன் தொடர்புகொண்டு மதிப்பீடுகள் கடந்த காலங்களில் இப்பகுதி சனசமூக நிலையத்தால் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் எதுவித பயனும் ஏற்படவில்லை.

சுமார் 300 குடும்பங்கள் ஆரம்ப பாடசாலை (கோப்பாய் வடக்கு றோமன் கத்தோலிக்க கலவன் பாடசாலை), கல்வியியற் கல்லூரி, புனித சூசையப்பர் ஆலயம் என்பவற்றிற்குச் செல்வோர் இப்பாதையை பயன்படுத்தி வருகின்றனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இப்பாதையையும் அதிகாரிகள் கவனம் எடுத்துத் திருத்தித் தருவார்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

கோப்பாய் மத்தி, கோப்பாய். கே.குணரத்தினம் (ஜே.பி.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்ணேற்றமடைந்த அன்னை மரியாள்; வரலாற்றுச் சிறப்புடைய மடுப்பதியின் விழா இன்று



**வரலாற்றுச் சிறப்புமிக்க மடுத் திருப்பதியின் வருடாந்தப் பெருவிழா இன்று கொண்டாடப்படுகின்றது. அனைத்து மக்களும் இன, மத வேறுபாடுகள் இன்றிக் கலந்து கொள்ளும் ஒரு பெருவிழாவாக அது திகழ்கின்றது. அதனையொட்டிய இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

கிறிஸ்தவர்களைப் பொறுத்தமட்டில் ஓகஸ்ட் 15 அன்னை மரியாள் விண்ணேற்றமடைந்த பொன்னாளாகும். தொடக்கம் முதல் அன்னை மரியாள் விண்ணை நோக்கியே வாழ்ந்தார். அவர் ஜென்ம பாவமின்றிப் பிறந்தவர். இதனால் தான் அதி தூதர் கபிரியேல் ''அருள் மிகப் பெற்றவரே வாழ்க, ஆண்டவர் உம்மோடு இருக்கின்றார்'' என்று வாழ்த்தி இறைமகன் இயேசுவின் பிறப்பைப் பற்றி அறிவித்தபோது ''நான் ஆண்டவரின் அடிமை, உமது சொற்படியே எனக்கு நிகழட்டும்'' என்று அன்னை மரியாள் பதிலளித்தவுடன் மீட்பு வரலாற்றின் முக்கிய நிகழ்வு ஆரம்பமாகியது.

தூய ஆவியால் மீட்பரின் தாயான அன்னை மரியாள் அன்பின் தூதராகின்றார். அவர் கருவுற்ற நிலையிலும் தமது உறவினரான எலிசபெத்திற்குப் பணிவிடை புரிய யூதா மலைநாட்டிலுள்ள அயின்கரீம் என்ற ஊருக்கு விரைந்து சென்றார். அன்னை மரியாளின் சந்திப்பு எலிசபெத்திற்கும் அவரது வயிற்றில் வளர்ந்து கொண்டிருந்த குழந்தைக்கும் பேருவகை அளித்தது. அவர் அன்னை மரியாளை நோக்கி ''பெண்களுக்குள் நீர் ஆசி பெற்றவர்; உம் வயிற்றில் வளரும் குழந்தையும் ஆசி பெற்றதே; ஆண்டவர் உமக்குச் சொன்னவை நிறைவேறும் என்று நம்பிய நீர் பேறுபேற்றவர்'' என்றுரைக்கின்றார்.

இறைமகன் இயேசுவை மாட்டுத் தொழுவத்தில், வறுமையில் பெற்றெடுத்து உரிய காலத்தில் அவரை காணிக்கையாக ஒப்புக் கொடுத்து, பன்னிரண்டு வயதில் காணாமல் போன அவரை மூன்றாம் நாள் ஜெருசலேம் திருக்கோவிலில் கண்டுபிடித்தது முதல் முப்பது ஆண்டு கால வெளிப்படையான மறை தூதுப் பணியயை ஆரம்பித்தபோது கானாவூர் திருமணத்தில் குறை வடைந்த திராட்சை இரசத்தை நிறைவடைய வைக்கும் அவரது முதல் புதுமையையும் ஆரம்பித்து வைக்கிறார் அன்னை மரியாள்.

இறைமகன் இயேசு அனைவரின் நிலை வாழ்விற்காகத் தம்மை சிலுவையில் கையளித்து மீட்புப் பலியை நிறைவேற்றும்போது அவருடன் இருந்தவர் தான் அன்னை மரியாள். இதனால்தான் இறைமகன் இயேசு தம் உயிரை கையளிப்பதற்கு முன்பாக தமது அன்புச் சீடரிடம் ''இவரே உன் தாய்'' என்று


க.அருள்நேசன்,
புனித புதுமைமாதா ஆலயம், குருநகர்.

கூறி அவர் வழியாக அன்னை மரியாளை எமக்கு ஒப்பற்ற பரிசாக அளிக்கின்றார். இதன் வழியாக நாம் அனைவரும் அன்னை மரியாளின் பிள்ளைகளா னோம்.

இறைமகன் இயேசு மரித்து, அடக்கம் செய்யப்பட்டு, உயிர்த்து, விண்ணகம் சென்ற பிற்பாடு அவரது சீடர்கள் தூய ஆவியின் வருகைக்காகக் காத்திருந்தபோது அன்னை மரியாள் அவர்களுக்கு துணையாக ஜெபித்துக் கொண்டிருந்தார். இதன் மூலம் குழந்தை இயேசுவை வளர்த்தவர் திருச்சபையாம் குழந்தையையும் வளர்க்கின்றார்.

இப்படிப்பட்ட அன்னை மரியாள் தமது மண்ணக வாழ்க்கையை நிறைவு பெற்றபோது உடலோடு விண்ணேற்றமடைந்து மண்ணக, விண்ணக அரசியாக முடி சூட்டப் பெற்றார். கீழ்ப்படிதல், நம்பிக்கை, எதிர்நோக்கு, அன்பு முதலிய நற்கனிகளால் நிறைந்து மானிட மீட்பில் இறைவனோடு சேர்ந்து உழைத்த அன்னை மரியாள் நமது தாயாக, அரசியாக விண்ணில் வீற்றிருப்பது நமக்கு மிகுந்த ஆறுதலே. உலகு சார்ந்த நாட்டங்கள், உடல் இச்சைகள் என்று அலகையின் தூண்டுதலால் சீரழியும் இன்றைய நவநாகரீக இனம் தூய ஆவியின் தூண்டுதலுக்கு செவிசாய்த்து நிலை வாழ்வைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற அழைப்பும், வழிகாட்டலுமே அன்னை மரியாளின் விண்ணேற்பம்.

ஆகவே பாவ வழிகளைக் கைவிட்டு விண்ணக நிலை வாழ்விற்கு அழைத்துச் செல்லும் குறுகலான தியானம் நிறைந்த சிலுவைப் பாதையில் செல்லும் அருளுக்காக அருள் நிறைந்த மரியாளிடம் மன்றாடுவோம். அப்பொழுது அவரைப் போல நமது சாவும் மண்ணில் தூங்கி விண்ணில் கண் விழிக்கும் தூக்கமாகட்டும். ★



மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத்தின் அனுசரணையில் நவாலி முருகானந்தா சனசமூக நிலையத்தில் அண்மையில் நடைபெற்ற இரத்ததான முகாமில் முருகானந்தா சனசமூக நிலையத்தைச் சேர்ந்த இளைஞர்கள் இரத்தம் வழங்குவதையும், அருகில் யாழ்.போதனா வைத்தியசாலையைச் சேர்ந்த வைத்தியர்கள், தாதிமார்கள் மற்றும் லயன்ஸ் கழக உறுப்பினர்கள் காணப்படுகின்றனர்.
(படம்: நவாலிச் செய்தியாளர்)

# மக்கள் முகம்



தேசிய சேமிப்பு வங்கியின் வடக்கு, கிழக்கு வலய முகாமையாளர் சின்னத்துரை சிவராஜா 37 வருட வங்கிச் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

சுன்னாகம் லயன்ஸ் கழகம், கொழும்பு லயன்ஸ் கழகம் ஆகியவற்றின் தலைவராகவும், இலங்கை சர்வோதய இயக்கத்தின் முக்கிய செயற்பாட்டு இணைப்பாளராகவும் யாழ். டொன் பொஸ்கோ, யாழ்.வேம்படி மகளிர் கல்லூரிகளின் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளராகவும் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி பழைய மாணவர் சங்க செயலாளராகவும் இருந்து அரும் பணியாற்றியவர்.

புங்குடுதீவு ஆசிரியர் எஸ்.சின்னத்துரை திருமதி மங்கையற்கரசி தம்பதிகளின் மகனான இவர் வங்கிச் சேவையிலிருந்து இளைப்பாறினாலும் சமூக, சமய சேவைகளில் தொடர்ந்து ஈடுபட்டுமு வருகிறார். (70)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஓக.15

தென்மராட்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த மூன்று அதிபர்கள் இலங்கை அதிபர் சேவை வகுப்பு 2 தரம் II க்கு பதவியுயர்வு பெற்றுள்ளனர்.

மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலய அதிபர் கா. குணசிங்கம், மட்டுவில் கமலாசனி வித்தியாலய அதிபர் செ. பேரின்பநாதன், சாவகச்சேரி றோ.க.த.க. பாடசாலை அதிபர் மா.ஜெயக்குமாரன் ஆகியோரே பதவியுயர்வு பெற்றவர்களாவர்.

இவர்களுக்குப் பதவியுயர்வு சம்பந்தமான கடிதங்கள் மாகாணக்கல்வி அமைச்சின் செயலாளரினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (50 - 9 - 20 )

★ ★ ★

வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட கிராமசேவகர் பிரிவில் கடமையாற்றும் இரு கிராம உத்தியோகத்தர்கள் தரம் - 2 இலிருந்து தரம் - 1 இற்கு பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

இப்பதவியுயர்விற்குரிய போட்டிப்பரீட்சையில் சி. ஜீவராஜா ( சுழிபுரம் கிழக்கு), திருமதி கே.லலிதாம்பாள் ( சங்கானை மத்தி) ஆகிய இருவருமே சித்தியடைந்து தரம் 1 இற்கு பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். (50 - 9 -119)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஓக.15

யாழ். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தில் கூட்டுறவு அபிவிருத்தி அலுவலராகப் பணியாற்றிய எஸ். கணேஷ் கிளிநொச்சி மாவட்டத்திற்கான கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

வடமாகாண கூட்டுறவு ஆணையாளரால் வழங்கப்பட்ட இந்தப் பதவி உயர்வின் பிரகாரம் இவர் இன்று முதல் கடமையைப் பொறுப்பேற்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (50 - 9 -224)

# புத்தகசாலை

## உலகின் மூன்றாவது கண்



காவலூர் விஜேந்திரன் எழுதிய ''உலகின் மூன்றாவது கண்'' என்னும் நூல் வெளிவந்துள்ளது. மனிதர்களுக்கிடையேயான செய்திப் பரிமாற்றத்தை நிகழ்த்துவதற்காக உருப்பெற்ற ஊடகங்கள், இன்று இலத்திரனியலின் துணைகொண்டு மாபெரும் பாய்ச்சலை உண்டுபண்ணியிருக்கின்றன.

அதுதவிர இதுநாள் வரையும் எந்தவொரு விடயத்தையும் ஒற்றைப் பரிமாணத்தோடு நோக்கிவந்த மனுக்குலத்தின் சிந்தனையை அகலிக்கச் செய்து பன்மைத்துவமான புதிய பார்வைக்கும் ஊடகங்களே வித்திட்டன.

இந்நிலையில் ஊடகங்கள் பற்றிய விளக்கத்தையும், அவற்றின் செயற்றிறனையும், அவைசார்ந்த பணிகளையும் தன் அனுபவத்துக்கெட்டிய வகையில் நூலாசிரியர் தந்திருக்கிறார்.

மேலும் இலங்கையில் இதுவரை வெளிவந்த தமிழ்ப் பத்திரிகைகளின் பெயர்ப் பட்டியல், ஆசிரியர்களின் விவரங்கள், வெளிவந்த காலப்பகுதி என்பனவெல்லாம் மிகத் தெளிவாகப் பட்டியற்படுத்தப்பட்டுள்ளன.

காலத்தின் தேவையறிந்து காவலூர் விஜேந்திரன் ஆக்கியுள்ள இந்நூல் ஊடகத்துறை மீது ஆர்வம் கொண்டோர் அனைவரும் கட்டாயம் படிக்கவேண்டிய நூலாகும்.

## நடுகை



அம்பலம் குழுமத்தின் ''கவிதைக்கான காகித விதைப்பு'' எனும் தொனிப்பொருளில் ''நடுகை'' வெளிவந்துள்ளது.

''நடுகை'' முற்றிலும் கவிதைகளைத் தன்னகத்தே கொண்டு துளிர்த்து வருகிறது. குறிப்பாக ஈழத்தில் கவிதை உலகில் தம்மை அடையாளப்படுத்தத் துடிக்கின்ற இளங் கவிஞர்களின் கவிதைக்குக் களமாக அமைந்துள்ளது.

ஈழத்துக் கவி உலகில் மட்டுமல்ல இலக்கியத் துறையிலும் பெரியதொரு வெற்றிடத்தை விட்டுச் சென்றுள்ள அமரர் கவிஞர் முருகையனின் நினைவாக ''வாயடைத்துப் போனோம்'' எனும் தலைப்பில் சிறப்புக் கவிதையினை முகப்புப் பக்கத்தில் தாங்கியவண்ணம் ''நடுகை''யின் மூன்றாவது இதழ் வெளிவந்துள்ளது.

மிகவும் குறைந்த விலையில் தரம் வாய்ந்த கவிதைகளைச் சுமந்து ''நடுகை'' தனது பயணத்தைத் தொடர்ந்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாணம்,ஓக.15

யாழ். மாவட்டக் கூட்டுறவுக்கிராமிய வங்கிகளின் சமாசத்தின் வருடாந்தப் பொதுச் சபைக் கூட்டத்தில் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதில் தலைவராக ச. தனபாலசிங்கம், உபதலைவராக க. மெய்யழகன், பணிப்பாளர்களாக க. இராஜரட்ணம், இ. மகாலிங்கம், சி. சிவகுமார், இ. ஆனந்தராசா, இ. வைகுந்தவாசன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (50 - 9 )

★ ★ ★

வலி.வடக்கு,ஓக.15

அளவெட்டி, மல்லாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய பணிப்பாளர் சபை உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

தலைவராக ஓய்வுபெற்ற கிராம அலுவலர் செல்லையா சிவயோகநாதன், உபதலைவர் க. சுப்பிரமணியம் , சண்முகநாதன் மற்றும் பணிப்பாளர்களாக நாகலிங்கம், முருகையா, சுந்திரலிங்கம் சதீஸ்சன், சண்முகநாதன் சசீந்திரன், அருளானந்தம் சிங்கராசா, வைத்திலிங்கம் சுப்பிரமணியம் ஆகியோர் வாக்கெடுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (50 - 9 - 86)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஓக.15

வலிகாமம் தெற்கு சனசமூக நிலையங்களின் சமாசத்திற்குப் புதிய நிர்வாகத் தெரிவு அண்மையில் இடம்பெற்றது.

இதில் தலைவராக த. சுதாகரன், செயலாளராக அ. சத்தியன், பொருளாளராக த. வாமதேவன் மற்றும் உபதலைவராக இ. அரிஹரன், உபசெயலாளராக க. மெய்யழகன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (9 )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வங்கி அலுவல்களுக்காக...
அலுவலக நேரத்தை வீணாக்காதீர்!"



Spirit & Soul

கொமர்ஷல் வங்கியின் யாழ்ப்பாணக் கிளை இப்போது வருடத்தின் 365 தினங்களும் திறந்திருக்கிறது.

COMMERCIAL BANK

www.combank.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் திருத்தச் சட்டமூலத்தை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கு

கொழும்பு,ஓக.15

நாடாளுமன்றத் தேர்தல்கள் திருத்தச் சட்டமூலத்தை ஆட்சேபித்து தனித்தனியாகத் தாக்கல்செய்யப்பட்டிருக்கும் ஐந்து மனுக்கள் மீதான விசாரணைகள் எதிர் வரும் 30ஆம் திகதி உயர்நீதிமன்றில் ஆரம்பமாகின்றன.

ஐ.தே.க., தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், லங்கா சம சமாஜக் கட்சி ஆகிய கட்சிகளாலும், மங்கள சமரவீர எம்.பியாலும் இம்மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

குறித்த சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுவிட்டால் இன, மத, சமூகப் பெயர்களைக் கொண்டு இயங்கும் கட்சிகள் அங்கீகாரம் இல்லாமல் செய்யப்பட்டுவிடும் என்றும், கட்சிகளின் உள் விடயங்களில் தேர்தல் ஆணையாளர் தலையிடுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டுவிடும் என்றும் மனுதாரர்கள் உயர்நீதிமன்றத்துக்குச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே, சட்டமூலத்தில் காணப்படும் பிரச்சினைக்குரிய கருத்துக்களை நீக்க இந்த நீதிமன்றம் உத்தரவிடவேண்டுமென மனுதாரர்கள் கோரியுள்ளனர்.

அத்துடன், நாடாளுமன்ற உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் ஆதரவை முதலில் பெற்ற பிற்பாடு சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்கள் அனுமதிப் பெறுவதன் மூலமாகவே இச்சட்டமூலம் சட்டமாக நிறைவேற்றப்படவேண்டுமென உயர்நீதிமன்றம் பிரகடனப்படுத்த வேண்டும் எனவும் கோரியுள்ளனர்.

உயர்நீதிமன்றம் இம்மனுக்களை எதிர் வரும் 30ஆம் திகதி பரிசீலனைக்கு எடுக்கவுள்ளது. (சி)

# நாடாளுமன்றத் தேர்தல் சட்டமூலத்தால் ஸ்ரீல. சுதந்திரக் கட்சியே அழிந்துவிடும்

## மங்கள சமரவீர கூறுகிறார்

கொழும்பு,ஓக.15

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு அரசு கொண்டுவரவுள்ள நாடாளுமன்றத் தேர்தல்கள் திருத்த சட்டமூலத்தினால் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி இல்லாமல் போகும் நிலை ஏற்படும் என ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் மக்கள் பிரிவின் தலைவரும், மாத்தறை மாவட்ட நடாளுமன்ற உறுப்பினருமான மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே மங்கள சமரவீர இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்த சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டது போன்று இரண்டு வருடங்களுக்கு மேல் தேர்தல்களில் போட்டியிடாமல் இருக்கும் கட்சிகளை நீக்கும் நடைமுறையினால் எதிர்காலத்தில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி கூட காணாமல் போய்விடும் அபாயம் ஏற்படும்.

இனம் மற்றும் மதங்களைக் குறிக்கும் பெயர்களில் உள்ள அரசியல் கட்சிகள் தடை செய்யப்படும் என இந்த திருத்த சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளமை மற்றுமொரு ஆபத்தான ஒரு யோசனை ஆகும்.

இந்த சட்ட மூலம் நடைமுறைக்கு வருமானால் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியைத் தடைசெய்ய வேண்டிய நிலை ஏற்படும்.

குறிப்பாக ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைவர் என்ற முறையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை இல்லாமல் ஒழித்துக்கட்டுவதற்கான ஏற்பாடுகளையே இந்தச் சட்ட மூலத்தின் ஊடாக ஜனாதிபதி செய்கின்றார்.

இன, மத, கலாசார பெயர்களை கட்சியின் பெயர்களாக மாற்றிக் கொள்ளலாம் என்று அரசியல் யாப்பில் ஏற்கனவே குறிப்பிட்டுள்ள சரத்தையும் இந்த சட்ட மூலம் மீறுகிறது- என்றார். (சி)

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம்,ஓக.15

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த பெருந்திருவிழாவை முன்னிட்டு இந்து கலாசாரத் திணைக்களத்தால் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் திருமதி மகிந்தினி விஜயகுமார் தலைமையில் ஆன்மீக நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் சிவத்தமிழ்ச் சொல்லழகர் ச.லலீசனின் 'நெஞ்சக்கனல்' எனும் தலைப்பிலான சொற்பொழிவும் யாழ்ப்பாணம், உரும்பிராய், புங்குடுதீவு ஆகிய அறநெறிப் பாடசாலைகளின் கலைநிகழ்வும் இடம்பெறவுள்ளன. (9)

* * *

தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய அனுசரணையுடன் நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தின் இசையரங்கு நிகழ்வு நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெற்று வருகின்றது.

இன்று மாலை 6.30 மணியளவில் திருமதி வாஸஸ்பதி ரஜீந்திரனின் பாட்டு இடம்பெறும். வயலின் - செல்வி பாக்கிய லட்சுமி நடராசா, மிருதங்கம் - ரி.வரோதயன், கடம் - எஸ்.விமல்சங்கர் ஆகியோர் அணிசேர் கலைஞர்களாக இணைந்து கொள்கின்றனர். (9)

* * *

நல்லூர்ஆலயப் பெருந்திருவிழாவினை முன்னிட்டு ஸ்ரீமுத்துவிநாயகர் ஆலய மண்டபத்தில் ''கானகதாவாரிதி'' பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்தசர்மா ''கம்பராமாயணம்'' என்னும் தலைப்பில் தொடர் இசைச்சொற்பொழிவினை நிகழ்த்தி வருகிறார்.

இதில் இன்று சனிக்கிழமை ''கண்டனன் சீதையை'' எனும் தலைப்பில் இசைச் சொற்பொழிவு இடம்பெறும். (9)




சஞ்சலங்கள் நீங்கிட அருள் தருவாய் நல்லூர் வேலா!
விழாச் சிறப்புற வாழ்த்துவோர்:
P.KOKULAN
PROPRIETOR
PC SOLUTIONS
Computer Sales & Maintenance Centre
527/1, Navalar Road, Jaffna.
Mobile: 077 37929904 pcsjaffna@gmail.com


## இடம்பெயர்ந்தோருக்கு மலேஷியா நிதியுதவி!

கொழும்பு,ஓக.15

வடக்கில் இடம்பெயர்ந்துள்ள மக்களின் நலன்புரி நடவடிக்கைகளுக்காக மலேசிய அரசு ஒரு லட்சம் அமெரிக்க டொலர்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இலங்கைக்கான மலேசியத் தூதுவர் ரெஸ்லி இஸ்மாயில் இந்த உதவியை வெளிவிவகார அமைச்சர் ரோஹித்த போகொல்லாகமவிடம் கையளித்தார் என அறிவிக்கப்பட்டது.

இது தொடர்பான வைபவம் வெளிவிவகார அமைச்சில் [illegible] றது. (சி)

# நல்லூர் பெருந்திருவிழாக் கால உதயனின் சிறப்பம்சம்

## நல்லருள் தந்திடுவாய்

தேவர் குறைதீர்க்கச் சூரனை வதம் செய்து
தேசம் வாழ் மக்கள் குறைபோக்கி நின்றாய்
நாவல் மரத்திருந்து நல்ல பழங்கேட்ட வெங்குள்
நற்றமிழ் ஔவைக்கு நயந்தே காட்சிதந்தாய்
பாவலர் உனைப் போற்றிப் பாடுங் கனிந்த இசை
பாரெங்கும் பரவிப் பாவங்கள் போக்கிடுமே
நல்லையம் பதி உறையும் நற்றமிழ்க் கந்தா உன்
நற்றாழ் பணிந்தோம் நல்லருள் தந்திடுவாய்.

– த.அப்புத்துரை, மட்டுவில் தெற்கு.

## தமிழால் வைதாரையும் வாழவைப்பவன் – நீ

தேனுண்டு வண்டமரும் தீங்கனிச் சோலைசூழ்
மேல்நின்ற நல்லூர் மெய்ப்பதியில் - நான் உண்டு
அஞ்சாதே என்று அபயகரம் அளிப்பானை
செஞ்சொற் கவி தொடுத்துப் பாடு

தமிழ் கூறும் நல்லுலகம் தன்னை மறப்பானோ
அமிழ்தூறும் வள்ளிதமிழ் கேட்டவன் - தமிழால்
வைதாரையும் வாழவைப்பவனே முகிலெனப்
பெய்யாயோ அருள்மழை பொழிந்து

தூண்டிற் புழுவாய்த் துடிப்பார் தம் துயரம்
நீண்டு செல்ல விடுவாயோ நிமலா - கூண்டுக்
கிளிவாழ்க்கை எவர்கேட்டார் கூவிப் பறக்கும்
தனிவாழ்க்கை மயிலோனோ! தா.

– கா.கார்த்திகேசு – நல்லூர்.

## சஞ்சலங்கள் நீக்கிடுவாய் சண்முகனே!

வெவ்வினைகள் போக்கியே எம் முன்வினைகள் நீக்கியருள்
மூவிரு முகத்தவனே வேலவனே அருள்தாராய்
எவ்வினை செய்தோரும் உன்னிடத்தில் சரணடைந்தால்
செய்தவினை அகலச்செய்து செழிப்புறவே அருள்தருவாய்

தெய்வயானை மணவாளா நீயெம் துன்பங்களைப் போக்கிடுவாய்
சண்முகனே நீயெமது சஞ்சலங்கள் நீக்கிடுவாய்
ஆனைமுகன் சோதரனே அருள் பொழியும் நல்லையில்லுன்
கோலமுகம் காணுகின்ற பேறொன்றே போதுமையா.

– வேலனடியாள்.

## அருள் தாராய் நல்லை வேலா!

யுத்தமொன்று வந்தபோது நல்லை வேலா - நாங்கள்
உயிர்காக்க ஓடிவந்தோம் நல்லை வேலா
வைத்தபொருள் வைத்தபடி நல்லை வேலா - நாங்கள்
வைத்துவிட்டே ஓடிவந்தோம் நல்லை வேலா

வீடு வாசல் விட்டு வந்தோம் நல்லை வேலா - இப்போ
வீதியிலே நிற்கின்றோம் நல்லை வேலா
பாடுபட்டுத் தேடி வைத்தோம் நல்லை வேலா - எல்லாம்
பாதியிலே போச்சுதப்பா நல்லை வேலா

பரம்பரையாய் மண்ணில் நல்லை வேலா - நாம்
பாதுகாப்பாய் வாழவேண்டும் நல்லைவேலா
வரந்தர வேண்டுமையா நல்லை வேலா - எங்கள்
வாழ்விடமே மீண்டு செல்ல நல்லை வேலா

வேருடனே சாய்ந்துவிட்டோம் நல்லை வேலா - இனி
வேறு வழி கண்டறியோம் நல்லை வேலா
ஆருடன் நாம் நோவதப்பா நல்லை வேலா - எம்மை
ஆதரித்துன் அருள்தருவாய் நல்லை வேலா.

– திருமதி நாகேஸ்வரி கந்தசாமி, மட்டுவில் தெற்கு.

## "இல்லைப் பயமென்றே இயம்பு"

சங்கிலியன் ஆண்ட தலைநகராம் நல்லூரில்
பொங்கி வளர் சோலைப் புள்ளினங்காள் - இங்கெமது
துன்பியலும் வன்பியலும் தொலைந்தோட நல்லூரான்
இன்பியலே தந்திடுவான் எனப் பாடீர்

நல்லைப் பெரும் கோயில் கோபுரத்து உச்சியிலே
மெல்லக் குரலெடுத்து கூவும் இளங்குயிலே - அல்லல்மிகும்
ஆட்டமெல்லாம் ஆடி அடங்கிவிட்டோம் நல்லூரா!
வீட்டின்பம் தாவென்றே விளம்பு

பச்சைப் பசுங்கிளியே பாலொடு தேன் நான் தருவேன்
கொஞ்சும் குதலை மொழிக் குரலெடுத்துப் பாடாயோ - இச்சகத்து
நல்லைக் குமரனடி நாடித் துதிப்போர்க்கு
இல்லைப் பயமென்றே இயம்பு.

திருமதி க.சபாநாதன், நயினாதீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் நிலைமை குறித்து வெளிப்படையாகப் பேசுவேன்

## அமெ.புதிய தூதுவர் சொல்கிறார்

கொழும்பு, ஓக.15

இலங்கையின் தற்போதைய நிலைமைகள் குறித்து தாம் வெளிப்படையாக - ஆனால் இராஜதந்திர தொனியில் - பேசப் போகின்றார் என கொழும்புக்கான அமெரிக்காவின் புதிய தூதுவர் பற்றீசியா புட்டினிஸ் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் ஜாலிய விக்கிரமசூரியவை புதன்கிழமை வோஷிங்டனில் சந்தித்த வேளையே அவர் இதனைக் குறிப்பிட்டார். ஓகஸ்ட் 28ஆம் திகதி இலங்கைக்கு வருகை தரவுள்ள புதிய தூதுவர் புட்டினிஸ், ''நான் கொழும்பின் நண்பராகவே செல்கிறேன்'' எனத் தெரிவித்துள்ளார். ''வெளிப்படையாகப் பேசக் கூடிய நபர் என நான் பெயரெடுத்துள்ளேன். எனினும், இங்கு இராஜதந்திர ரீதியில் பேச விரும்புகிறேன்'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

இரு நாடுகளின் பிரதிநிதிகள் மத்தியில் இடம்பெற்றுள்ள இந்த முதலாவது சந்திப்பின்போது வடபகுதி தமிழர்களுடன் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான அரசியல் முயற்சிகள் குறித்து முக்கியமாக ஆராயப்பட்டுள்ளது.

மேலும் அமெரிக்காவிலுள்ள இலங்கைத் தமிழ் சமூகத்துடன் உறவுகளை ஏற்படுத்துவதற்கான அரசின் முயற்சிகள் குறித்து ஜாலிய விக்கிரமசூர்ய புட்டினிஸிற்குத் தெளிவுபடுத்தியுள்ளார். (சி)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



வேலாயுதபிள்ளை

பரமேஸ்வரன்

(இலங்கை வங்கி, யாழ்ப்பாணக்கிளை)

அவர்கள் இலங்கை வங்கியின் 25 வருட சேவைக்கான விருதை இன்று (15.08.2009) சனிக்கிழமை கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் பெற்றுக் கொள்வதை இட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி.

குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள். (87792


# சுற்றுலாப் பயணிகள் என்ற போர்வையில் பயங்கரவாதிகள் ஊடுருவலாம் என அச்சம்

## வீசா முறையில் மாற்றம் கொண்டுவர ஏற்பாடு

கொழும்பு, ஓக.15

வெளிநாட்டுச்சுற்றுலாப் பயணிகள் என்ற போர்வையில் பயங்கரவாதிகள் இலங்கைக்குள் ஊடுருவுகின்றனர் என அரசு அண்மைக் காலமாக அஞ்சுகின்றது. இதனால் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து வீசா வழங்கும் முறையை ரத்து செய்வதற்கு இலங்கை அரசின் உயர் மட்டத்தில் ஆராயப்படுகிறது என்று தெரியவருகிறது.

வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து விசாக்களைப் பெற்றுக்கொள்ளும் நடைமுறை தற்போது அமுலில் இருந்து வருகிறது. குறித்த நடைமுறை இல்லாமற் செய்யப்படவேண்டும் என்று பாதுகாப்பு அமைச்சு இலங்கை அரசை வலியுறுத்தி வருகின்றது. இந்நடைமுறையைத் தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் என்ற போர்வையில் அண்மைய நாள்களில் 309 வெளிநாட்டவர்கள் வேறு தேவைகளுக்காக இலங்கைக்கு வந்திருக்கிறார்களென வும், அவர்கள் வசமாக மாட்டுப்பட்டமையை அடுத்து இலங்கையை விட்டு உடனடியாகவே வெளியேற்றப்பட்டார்கள் எனவும் பாதுகாப்பு அமைச்சு அரசின் கவனத்துக்கு கொண்டுவந்துள்ளது.

எனவே, வெளிநாட்டவர்களுக்கு இலங்கைக்குள் வைத்து விசா வழங்கும் நடைமுறையை இலங்கை அரசு இல்லாமற் செய்ய வேண்டுமெனப் பாதுகாப்பு அமைச்சுக் கோரியுள்ளது. இலங்கைக்கு வர விரும்பும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் வெளிநாடுகளில் இருக்கும் இலங்கைத் தூதரகங்களிலேயே விசாக்களைப் பெற்றுக்கொள்ளும் வகையில் மாற்று வசதியை ஏற்படுத்திக் கொடுக்கலாம் என்றும் அரசுக்கு பாதுகாப்பு அமைச்சு ஆலோசனை கூறியுள்ளது. பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனையை மிகவும் சாதகமான முறையில் பரிசீலித்து வரும் அரசு, கட்டுநாயக்கா விமான நிலையத் தில் வைத்து வெளிநாட்டவர்களுக்கு விசா வழங்கும் நடைமுறையை வெகுவிரைவில் இல்லாமற் செய்யக்கூடும் என்று அரசுக்கு நெருக்கமான வட்டாரங்களிலிருந்து தகவல்கள் வெளிவந்துள்ளன. (அ-சி)

# ஐக்கிய தேசியக் கட்சியால் இனி எக்காலமும் எழுந்து நிற்க முடியாத நிலைக்கு வீழ்ந்து விட்டது

## அது இப்போது பிரதேசக் கட்சி என்கிறார் அமைச்சர் அனுர



கொழும்பு, ஓக.15

ஐக்கிய தேசியக் கட்சியின் வீழ்ச்சியைப் பார்த்தால் இனி எக்காலமும் அக்கட்சியால் நிமிர்ந்து நிற்க முடியாது என்றும் அக்கட்சி ஒரு தேசியக் கட்சியை இழந்து பிரதேச கட்சியாக மாறிவிட்டது என்றும் ஊடகத்துறை அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா நேற்று முன்தினம் கூறினார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

நடந்து முடிந்த ஊவா மற்றும் யாழ்., வவுனியா தேர்தல்கள் மூலம் அரசு எந்தளவு சக்திபெற்று நிற்கின்றது என்பதைத் தெளிவாக விளங்கிக்கொள்ள முடிகிறது.

குறிப்பாக ஊவாவில் அரசு, வரலாற்றில் என்றுமில்லாத வெற்றியைப் பெற்றுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி வரலாற்றில் என் றுமில்லாதவாறு இத் தேர்தலில் பாரிய தோல் வியைச் சந்தித்துள்ளது.

ஒரு தேசியக் கட்சியாக இருந்த ஐக்கிய தேசியக் கட்சி இப்போது ஒரு பிரதேசக் கட்சியாகக் கீழிறங்கியுள்ளது. அக் கட்சி எமது அரசுக் கெதிராகச் செய்த பொய்ப்பிரசாரங்கள் எவையும் எடுபடவில்லை. இதுபோல் தென் மாகாண சபைத் தேர்தலிலும் நாம் பெரும் வெற்றியீட்டுவோம். இனிவருகின்ற எந்தத் தேர்தலிலும் ஐக்கிய தேசியக் கட்சியால் வெல்ல முடியாது. ஐக்கிய தேசியக் கட்சியை மக்கள் முற்றாக நிராகரித்து விட்டனர். அக் கட்சியால் இனி ஒருபோதும் எழுந்து நிற்க முடியாது. - என்றார். (அ-சி)


## உடனடி வெளிநாட்டு வேலை வாய்ப்பு

SAUDI ARABIYA

கீழ்க்காணும் வெற்றிடங்கள் உள்ளன.

1.சுத்திகரிப்பாளர் Cleaner
2.கூலியாள்கள்-Labourers
3.தச்சன் Carpenter
4.சாரதிகள் Drivers
5.மேசன் Mason
6.பைப் பொருத்துநர் Plumber

தொடர்புகளுக்கு :- SATHEES TRAVEL AGENCY
Uduvil Road,Manipay,Jaffna.
Reg. No. VSW/FIN/BR/936/I-2004
Satheesagency@gmail.com

T.P - 060 221 1958
021 4591625
077 6138942

Join with Air King (pvt) Ltd. (LIC. # 1791)

(87796)



## FOURTH DEATH ANNIVERSARY



PARIMALAM ANNALINGAM

PRINCIPAL-S.L.E.A.S.

YOU ACHIEVED GREAT HEIGHTS IN THE FIELD OF EDUCATION. YOUR CONTRIBUTION TO THE SOCIETY AS A PRINCIPAL WILL ALWAYS BE REMEMBERED.

MRS.T.PREMA THANAPALAN
RTD.TEACHER.

SRI.SUMANGALA MAWATTE
RATMALANA.

(87865)



## THIRD DEATH ANNIVERSARY



S.THANAPALAN B.A. (CEYLON)
P.G.D.R.E. (BIRMINGHAM, U.K.)
PRINCIPAL

A NAME THAT WILL LAST LONG IN THE HISTORY OF ST.JOHN'S COLLEGE, AND REMAIN FOREVER IN THE HEARTS OF MANY JOHNIANS.

HIS LIFELONG SERVICE TO THE SCHOOL AND THE COMMUNITY IS INDESCRIBABLE.

MAY HIS SOUL REST IN PEACE

S.K.ANNALINGAM.J.P.WHOLE ISLAND.
(MEMBER OF OVERSEAS REALTY (CEYLON) LIMITED,
WORLD TRADE CENTER,
LIDO BRAND SOCKS
AGENT JAFFNA SCHOOLS)

43,MORRIS LANE,
CHUNDIKULI.

(87865)


## பயிற்சி பெற்றோருக்குச் சான்றிதழ்

நவாலி, ஓக.15

யாழ்.மாவட்டத்தில் சமூக சேவை மற்றும் சமூக நலத்துறை அமைச்சினால் நடத்தப்பட்டு வந்த நீர்க்குாய் பொருத்துதல், மின் இணைப்பு, அழகியற் கல்வி ஆகிய பயிற்சி நெறிகளைப் பூர்த்தி செய்த 124 மாணவர்களுக்கு கடந்த 6ஆம் திகதி யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் வைத்து சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

இப் பயிற்சி நெறிகள் கடந்த 2008ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் ஆரம்பிக்கப்பட்டு இவ்வருடம் மார்ச் 30ஆம் திகதியுடன் பூர்த்தியாகியது. (203-100)

## ஓய்வூதியர் நம்பிக்கை நிதியம் அமைப்பது தொடர்பான கூட்டம்

நல்லூர், ஓக.15

யாழ்.மாவட்டத்தில் இதுவரை பகிரங்க சேவைகள் ஓய்வூதியர் நம்பிக்கை நிதியம் அமைக்கப்படாத இடங்களில் பகிரங்க சேவைகள் ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தை அமைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இது தொடர்பான கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் எஸ்.சக்திவேல் தலைமையில் நடைபெறும்.

ஓய்வூதியர்களின் அந்தஸ்தையும் மதிப்பையும் பேணும் வகையிலும் சேமநலத்தை மேம்படுத்தும் பொருட்டும் 1999ஆம் ஆண்டு 40 ஆம் இலக்க நாடாளுமன்ற நிதியச் சட்டத்தின் 10ஆம் பிரிவின் கீழ் உதயமான இந்த நம்பிக்கை நிதியம் ஏற்கனவே மாவட்டத்தின் சில பிரதேச செயலர் பிரிவுகளில் செயற்படுத்தப்படுவதாகவும் -

சகல ஓய்வூதியர்களும் பயன்பெற வேண்டும் என்ற நோக்கில் யாழ். அரச அதிபரின் அங்கீகாரத்துடன் ஏனைய பிரதேசங்களில் இந்த நிதியத்தை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஓய்வூதியர்கள் தமது அடையாள அட்டையுடன் இதில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (111)


வரணி குடமியன்

## திருவருள்மிகு ஆதிசிவன் தேவஸ்தான வருடாந்த மகோற்சவ விஞ்ஞாபனம்- 2009

15.08.2009 சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி
9ஆம் நாள் (23.08.2009) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு சுவாமி தேரில் ஆரோகணிப்பார்.
10ஆம் நாள் (24.08.2009) திங்கட்கிழமை காலை 1008 சங்காபிஷேகம் இடம்பெற்று முற்பகல் 11 மணிக்குத் தீர்த்தம் நடைபெறும்.

ஆலய மஹோற்சவ பிரதமகுரு:
சிவாகமரத்தினம் சிவஸ்ரீ.இராம. ஸ்ரீரங்கக் குருக்கள்.

ஆலய தர்மகர்த்தா சி.குமாரசாமி.

(87868)



## ஆண்டுகள் எட்டு உருண்டோடியதோ?

பூவுலகில்
11
08
1929



மேலுலகில்
14
08
2001

காஸ்யப கோத்திரம்
அராலியூர் அமரர் சிவஸ்வாமிக்குருக்கள் பரமேஸ்வர சர்மா
திதி: ஆடி அபரபக்கத் தசமி (15.08.2009)

அன்புள்ள அப்பா!
நீங்கள் மறைந்து எட்டு ஆண்டுகள் கடந்தாலும்
எங்களுடன் நீங்கள் இருப்பதுபோல் பிரமை
நல்லைக் கந்தன் திருவிழா என்றால் நீங்கள்
அங்கே நிற்பீர்களே!
மறைவதற்கு முன்னும் கைலாசவாகனத் திருவிழாக்
காட்சி கண்டு மறைந்தீரே- அப்பா இன்று
நல்லூரில் கைலாச வாகனத் திருவிழா- அங்கே
நீங்கள் நிச்சயமாக நிற்பீர்கள்- நிழலாக
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

''பரணி வாசம்'', கந்தரோடை.

குடும்பத்தினர்.

(87750)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.கிராம அபிவிருத்தித் திணைக்களம் வடக்கின் வசந்தம் திட்டத்தில் நல்லூர் சங்கிலியன் சனசமூக நிலைய மண்டபத்தில் அலுமினியம் பயிற்சி நெறிக்கான நிலையத்தைத் திறந்து வைத்தது.
யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி அ.ஜெயராசா மங்கள விளக்கேற்றுவதையும் நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் நிலையத்தைத் திறந்து வைப்பதையும் நல்லூர் பிரதேச கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் க.ஐங்கரவேல், நல்லூர் ஜே/109 கிராம அலுவலர் எஸ்.சந்திரகுமார் ஆகியோர் உரையாற்றுவதையும், பயிற்சிநெறியில் கலந்து கொள்ளும் மாணவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

## பாட நூல்களின் தரவிருத்தி மேம்பாட்டுக்கு பாடசாலைகளில் குழுக்கள் அமைக்க ஏற்பாடு

கோப்பாய், ஒக.15

பாடசாலை பாடநூல்களின் தரவிருத்தி மேம்பாட்டிற்காக ''பாடநூல்கள் தொடர்பான பாடக்குழுக்கள்'' பாடசாலைகள் தோறும் அமைக்கப்படவுள்ளன.

இக்குழுவில் தலைமைத்துவத்தை பாடசாலையின் பிரதான பாடப்பொறுப்பாளர் ஏற்பார்.

ஒவ்வொரு தரத்திலும் குறிப்பிட்ட பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களில் ஒருவர் வீதம் இக்குழுவுக்குள் உள்ளடக்கப்படல் வேண்டும்.

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தால் பாடசாலைக்கு பெற்றுக் கொடுக்கும் பாடநூல்களுக்கு அமைவாக ஒவ்வொரு பாடத்துக்கும் வெவ்வேறான பாடக்குழுக்கள் நியமிக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச் செயற்றிட்டத்தை சிறப்பாக நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான வழிகாட்டல்களை பாடத்துக்கு பொறுப்பான பணிப்பாளர்கள் மற்றும் பாடங்களுக்குரிய ஆசிரிய ஆலோசகர்கள் வழங்குவர்.

பாடநூல்கள் தொடர்பான பாடக்குழுக்கள் பாடசாலைக்கு கிடைக்கும் பாடநூல்களை பரிசீலனைக்குட்படுத்தி அவதானிக்கப்படும் குறைபாடுகள் மற்றும் பாடநூல் தரத்தை மேம்படுத்தக் கூடியதான ஆலோசனைகளை அதிபர்களினூடாக நேரடியாக கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (203-72)

## வலி.கிழக்குப் பிரதேச தோட்டக் கிணறுகளில் தண்ணீர் மட்டம் குறைவடைகிறது

யாழ்ப்பாணம், ஒக.15

வலி.கிழக்குப் பிரதேசத்தில் உள்ள சில தோட்டக் கிணறுகளில் தண்ணீர் மட்டம் திடீரென குறைந்து காணப்படுகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

நீர்வேலி, கோப்பாய், புத்தூர் போன்ற பகுதிகளில் உள்ள சில தோட்டக் கிணறுகளிலேயே தண்ணீரின் மட்டம் குறைவடைந்துள்ளது.

தற்போதைய கடும் வரட்சி, வெப்பம் போன்றனவே தண்ணீரின் மட்டம் குறையக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

கிணறுகளில் தண்ணீர் மட்டம் குறைந்ததால் தோட்டங்களுக்கு தண்ணீர் இறைப்பதில் விவசாயிகள் சிரமப்பட்டு வருகின்றனர். (203-224)

## மாதகல், இளவாலைப் பகுதிகளிலுள்ள 10 விவசாயக் கிணறுகள் புனரமைப்பு

வண்ணை, ஒக.15

மாதகல், இளவாலை பகுதிகளில் விவசாயத் தேவைக்கான பழைய 10 கிணறுகள் கரித்தாஸ் - கியூடெக் நிறுவனத்தால் புனரமைக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.

அதேவேளை வடமராட்சி கிழக்கு, அம்பன் - குடத்தனை பகுதி விவசாயிகளின் நலன் கருதி சிறிய நீர்த்தேக்கங்களுக்கு அருகே 6 அடிஉயரமும் 12அடி அகலமும் கொண்ட 5 தண்ணீர்த் தொட்டிகள் 3 லட்சம் ரூபா செலவில் புதிதாக நிர் மாணிக்கப்பட்டுள்ளன.

இதனால் 50 விவசாயிகளின் தோட்டத்துக்கான நீர் வசதி கிடைப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குடத்தனை, அம்பன் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் 20 பேருக்குத் தண்ணீர் இறைக்கும் இயந்திரங்கள் 2லட்சம் ரூபா செலவில் வழங்கப்பட்டுள்ளது.

யாழ். ஆயர் மேதகு தோமஸ் சௌந்தர நாயகம் ஆண்டகை இவற்றைப் பயனாளிகளுக்கு வழங்கி வைத்தார். (203- 160)

## பரு. பிரதேச செயலாளர் பிரிவில் மாணவருக்கு கணனிப் பயிற்சி

வண்ணை, ஒக.15

கரித்தாஸ் - கியூடெக் நிறுவன சுனாமி வாழ்வாதாரச் செயற்திட்டத்தால் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் மாணவர்களுக்கு கணனிப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. அதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட தையல் பயிற்சியைப் பெற்றுக் கொண்ட 7 - பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன.

தையல் இயந்திரங்களை பிரதேச செயலர் இ. வரதீஸ்வரனும், நிறுவன இயக்குநர் அருட்பணி கி.யோ. ஜெயக்குமார் அடிகளும் பயனாளிகளுக்குக் கையளித்தனர்.

அதேவேளை பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 50 மாணவர்கள் கணனிப் பயிற்சியைப் பெற்றுக் கொள்ள 30 லட்சம் ரூபா செலவில் பயிற்சிக் கூடமொன்றும் அமைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (203 - 160)

## தரம் 5 மாணவர்களுக்கு இலவச கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஒக.15

திருமலை வெற்றித் தேர்வு ஏற்பாட்டில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கு கோப்பாய் ஆசிரிய கலா சாலை மண்டபத்தில் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவுள்ளது.

இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் யாழ்.கல்வி வலய மாணவர்களுக்கான கருத்தரங்கு இடம்பெறவுள்ளது. இதில் பிரதமவிருந்தினராக வடவலய மக்கள் வங்கி உதவிப் பொதுமுகாமையாளர் ரி.கே.ஆனந்தராசா கலந்துகொள்ளவுள்ளார்.

நாளை ஞாயிற்றுக்கிழமை வடமராட்சி, தீவக வலய மாணவர்களுக்கான கருத்தரங்கு காலை 8.30 மணியளவில் நடைபெறவுள்ளது. இதில் பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் மலர் சின்னையா கலந்துகொள்ளவுள்ளார்.

பிற்பகல் 2 மணியளவில் தென்மராட்சி, வலிகாம வலய மாணவர்களுக்கான கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய சேமிப்பு வங்கியின் முகாமையாளர் வி.அருளானந்தம் கலந்து கொள்ளவுள்ளார்.

இதில் கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி அதிபர் வே.கா.கணபதிப்பிள்ளையின் ஆலோசனையும் வழிகாட்டலும் இடம்பெறும். எஸ்.கணேசலிங்கம், கே.தவயோகராஜா, விரிவுரையாளர் சரா.புவனேஸ்வரன், கே.கைலாசநாதன் ஆகியோர் வளவாளர்களாக இணைந்துகொள்கின்றனர். (9)

## தரவட்டச் செயலமர்வு

யாழ்ப்பாணம், ஒக.15

யாழ்.கல்விவலயத்திற்குட்பட்ட 55 கல்வித் தரவட்ட செயலமர்வு (ஆங்கில மொழி மூலம்) நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிமுதல் மாலை 4 மணி வரை நடைபெறவுள்ளது.

ஏற்கனவே நடைபெற்ற அதிபர் கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுறுத்தலுக்கமைய அதிபர் அல்லது பொருத்தமான ஆசிரியர் ஒருவரைத் தவறாது கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.தேவநாயகம் அறிவித்துள்ளார். (9)

## புங்குடுதீவு- பெருங்காடு- இறுப்பிட்டி வீதியை புனரமைக்க 'ராப்'பிடம் உதவி கோரல்

நல்லூர், ஒக.15

புங்குடுதீவு- பெருங்காடு- இறுப்பிட்டி வரையான வீதியைப் புனரமைக்க வீதி அபிவிருத்தி அதிகாரசபை 'ராப்'பிடம் உதவியைக் கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 20 வருடங்களுக்கு மேலாக குறிப்பிட்ட வீதியைப் புனரமைத்துத் தரும்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு இங்குள்ள பொதுமக்களும் பொது நிறுவனங்களும் பலதடவைகள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இன்றுவரை வீதியைத் திருத்துவதற்கான நடவடிக்கைகளும் இடம்பெறவில்லை.

வீதியின் தற்போதைய நிலையை இங்கு வருகைதந்த அதிகாரிகள் வெறுமனே பார்வையிட்டுச் சென்றுள்ளனர்.

வீதியின் மோசமான பாதிப்புக் காரணமாக இ.போ.ச.சேவைகளோ, தனியார் பஸ்களோ இறுப்பிட்டிக்கான போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுவதில்லை எனவும் இப் பகுதியிலுள்ள பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

நோயாளர்கள், பாடசாலை மாணவர்கள் தாங்கள் செல்ல வேண்டிய இடங்களுக்குச் செல்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

போக்குவரத்து வசதிகளற்ற நிலையில் நோயாளர்கள் சுமார் 3 மைல்கள் தூரம் நடந்து பெருங்காடு சந்திக்கு வந்தே வாகனங்களில் ஏறவேண்டியுள்ளது.

போக்குவரத்து வசதிகள் இன்மையால் வெளியிடங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் தமது அலுவலகங்களுக்குச் செல்ல முடியாது விரக்தியுடன் உள்ளதாகவும் புங்குடுதீவு மக்கள் கூறுகின்றார்கள். (203-111)

## மானிப்பாய் மக்களுக்கு உலக உணவுத்திட்ட நிவாரணம்

நவாலி, ஒக.15


மானிப்பாய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் உலக உணவுத்திட்டத்தின் கீழ் நிவாரணம் பெறுபவர்களுக்கான உலர் உணவுப் பொருள்கள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றது. (203-100)

## முதியோருக்குச் சத்துணவு

நவாலி, ஒக.15

நவாலி கிழக்கு ஜே/135 கிராமசேவையாளர் பிரிவிலுள்ள முதியோர் சங்க அங்கத்தவர்களுக்கு தியாகி அறக்கொடை நிறுவனத்தின் அனுசரணையுடன் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை சத்துணவு வழங்கப்படவுள்ளது.

அன்றைய தினம் காலை 9 மணிக்கு அனைத்து முதியோர் சங்க உறுப்பினர்களையும் அப்பிரிவு பொதுமண்டபத்திற்கு தவறாது சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (203-100)






பண்ணாகம் மெய்கண்டான் ம.வியில் நடைபெற்ற கணித, விஞ்ஞானக் கண்காட்சியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட டாக்டர் சி.சதாசிவம் கண்காட்சி மண்டபத்தை நாடாவெட்டித் திறந்து வைத்தார். அதிபர் சந்திரசேகரன், சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட வலிகாமம் வலயக் விஞ்ஞான பாட ஆசிரிய ஆலோசகர் சி.விஜேந்திர சர்மா ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றார்கள். பொருள்களின் கண்காட்சியை விருந்தினர்கள் பார்வையிடுவதை இரண்டாவது படத்தில் காணலாம். (28)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தென்மராட்சி தெற்கு உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களை அப்பகுதி மக்களிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை கைதடி- நாவற்குழி முருகமூர்த்தி ஆலய முன்றலில் நடைபெற்றது.

யாழ்.கமநல உதவி ஆணையாளர் பற்றிக் டிறஞ்சன் முருகமூர்த்தி ஆலயத்தில் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பிப்பதையும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தென்மராட்சி மேற்கு பல.நோ.கூ.சங்கத் தலைவர் நா.சிவதிருச்செந்துநாதன், தென்மராட்சிப் பிரதேச செயலர் எஸ்.ஸ்ரீநிவாசன், தென்மராட்சி கட்டளைத் தளபதி லியனகே. ஆகியோர் உரையாற்றுவதை மேல் வரிசைப் படங்களில் காணலாம்.

இடம்பெயர்ந்த பிரதேச மக்களையும் யுத்தத்தினால் சேதமடைந்த கைதடி நாவற்குழி முருகமூர்த்தி ஆலயத்தின் ஒரு பகுதியையும் கீழ்வரிசைப் படங்களில் காணலாம்.

*(படங்கள்: லக்ஸ்மன்)*


COMPUTER EXPRESS
Institute of Information Technology
No 167, Kasthuriyar Road, Jaffna. 0212228250

ஒருவாரகால முழுநேரகற்கைநெறிகள்.

Diploma in Graphic Designing
சர்வதேச ரீதியில் முன்னணியிலுள்ள மென்பொருட்களான
Adobe Photo shop+Corel Draw
Macro Media Flash+Cool 3D Studio

Diploma in Hardware Engineering
Assembling+Upgrading+Troubleshooting+Repairing
Servicing+Software Installation+Config Networking Ect..

Diploma in Video Editing
சர்வதேச ரீதியில் முன்னணியிலுள்ள மென்பொருட்களான
Adobe Photoshop+Cool 3D Studio+VCD cutter
Capturing+Pinnacle Studio+Adobe premeir
ஆகியவற்றினூடாக கற்பிக்கப்படும்

வகுப்புக்கள் ஆரம்பம்:- 17/08/2009 09 am


# மரண அறிவித்தல்கள்

## அப்புத்துரை இராசேந்திரம்



கேணிக்கட்டு, வீதி பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அப்புத்துரை இராசேந்திரம் 13.08.2009 வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும் அன்னக்கிளியின் அன்புக் கணவரும் இராசமனோகரன் (சந்திரன்), வசந்தி, பாஸ்கரன் (ராசன்), தர்சினி ஆகியோரின் அன்புத் தந்தையும் கிருஸ்ணகுமாரின் (சுதன்) அன்பு மாமனும் துரைசிங்கம், காலஞ்சென்ற ராசாத்தி மற்றும் பூபதி, தங்கரத்தினம், பரமேஸ்வரி, அன்னரத்தினம், புஸ்பம், பாலசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் பாலசிங்கம், வசந்தா, கந்தசாமி, பொன்னம்பலம், தியாகராஜா, தங்கவேலு, சத்தீஸ்வரன், மஞ்சுளா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.08.2009) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணியளவில் அன்னாரது இல் லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*சண்டிலிப்பாய் வீதி,* *தகவல்:*
*பண்டத்தரி. பு.* (87900) **மனைவி, பிள்ளைகள்.**

## சுப்பையா வைத்திலிங்கம்

இணுவில் தெற்கைச் சேர்ந்த சுப்பையா வைத்திலிங்கம் 13.08.2009 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
கணேசன் சென்ரர்,
கே.கே.எஸ்.வீதி, **குடும்பத்தினர்,**
இணுவில். (87598) **மருமகன்-து.சிவகுமாரன்**

## தேவை

யாழ்.நகரில் புதிதாக ஆரம்பிக்க இருக்கும் கட்டடப் பொருள்கள் விற்பனை நிலையத்துக்கு அனுபவம் வாய்ந்த வேலை ஆள்கள் தேவை. கடையில் தங்கி சமையல் செய்யக் கூடியவர் ஒருவரும் தேவை.

தொடர்பு:- 27, ஸ்ரான்லி வீதி,
(87905) யாழ்ப்பாணம்.

## வேட்பாளர் சொத்து விவரம் கோருகிறது தேர்தல் செயலகம்

கொழும்பு, ஓக. 15

தென் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் சகல வேட்பாளர்களும் தமது சொத்து விவரங்களை வெளியிட வேண்டும் எனத் தேர்தல்கள் செயலகம் அறிவித்துள்ளது.

வேட்பாளர்கள் வேட்பு மனுத் தாக்கல் செய்யும்போது தமது சொத்து விவரங் களை தெரிவத்தாட்சி அதிகாரியிடம் சமர்ப்பிக்க வேண்டும் எனத் தேர்தல்கள் ஆணை யாளர் தெரிவித்துள்ளார். அவ்வாறு விவரங்கள் சமர்ப்பிக்கத் தவறும்பட்சத்தில் சபை உறுப்பினராகச் செயற்படுவதற்கு அல்லது அமர்வுகளில் பங்கேற்பதற்கு முன்னர் அதனை சமர்ப்பிக்க வேண்டும் என தேர்தல்கள் ஆணையாளர் கூறியுள்ளார்.

தேர்தலில் தோல்வியடையும் வேட்பாளர்கள் வேட்பு மனுத் தாக்கல் செய்யப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தமது சொத்து விவரங்களை வெளியிடவேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, தென் மாகாண சபைக்கான தேர்தல் அடையாள அட்டைகளை பெறுவதற்கென விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன எனத் தேர்தல்கள் செயலகம் தெரிவிக்கிறது.

இந்த அட்டைகளைப் பெறுவதற்கு அந்தந்தப் பிரிவு கிராம சேவையாளர்கள் ஊடாக விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க முடியும் எனத் தேர்தல்கள் செயலகம் தெரிவித்தது. (சி)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓக. 15

கோப்பாய் லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் யாழ்.கல்வி வலயம், கோப்பாய் கோட்டத்தின் க.பொ.த.(சா/த) கணிதபாட பெறுபேற்றை அதிகரிப்பதற்கான விசேட செயற்றிட்டத்திற்கான கையேடு வழங்குவதும் செயற்றிட்டம் தொடர்பான கலந்துரையாடலும் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு வலயக் கல்விப் பணிமனையில் நடைபெறவுள்ளது. இரண்டாம் தவணைப் பரீட்சையில் 40 புள்ளிகளிலும் குறைவாகப் பெற்ற மாணவர்களின் விவரத்துடன் கணித ஆசிரியர் ஒருவரை அனுப்பிவைக்குமாறு கோப்பாய்க் கோட்ட அதிபர்கள் கேட்கப்படுகின்றனர். (1)

## நன்றி கூறுகின்றோம்



ஊசலாடி உயிரைத் தவிர அனைத்தையுமே பறிகொடுத்து நொந்து கெட்டு லட்சக் கணக்கில் வந்து தங்கி இருந்த எம்மைத்தேடி வந்து ஆறுதல் மொழி சொன்னதுடன் வாக்குறுதி தந்தபடி கைதடி பல்கலைக்கழக நலன்புரி முகாமில் இருந்த எம்மைக் கடந்த 05.08.2009 அன்று விடுவிக்க அயராது பாடுபட்ட சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர்

**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**

அவர்களுக்கும் எமது விடுவிப்புக்காகப் பாடுபட்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள். எம்மைப்போல் ஏனைய முகாம்களில் உள்ளவர்களையும் வெகு விரைவில் விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு சிரம் தாழ்த்தி வேண்டுகின்றோம்.

நாரந்தனை மேற்கு, **அம்பலவாணர் சதீஸ்குமார்**
ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம். (87895) **குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

## திருமதி பாலசுப்பிரமணியம் பரமேஸ்வரி



விஸ்வகுல ஒழுங்கை, புலோலி வடக்கு, பருத்தித்துறையைச் சேர்ந்த திருமதிபரமேஸ்வரி பாலசுப்பிரமணியம் நேற்று (14.08.2009) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற ஜெகதீஸ்வரன் மற்றும் விஜயகுமார் (பாஃரெய்ன்), கருணாகரன் (பிரான்ஸ்), சிவனேசன் (சிவகௌரி நகை மாளிகை, பருத்தித்துறை), செல்வராணி, ஜெகதாம்பிகா, சுகுணகுமாரி, பவானி ஆகியோரின் அன் புத் தாயும் கமலினி (பிரான்ஸ்), சியாமளா, சீதா, ஜெயகௌரி, காலஞ்சென்றவர்களான பாலசிங்கம், அம்பிகை பாலன் மற்றும் தியாகராஜா (பிரான்ஸ்), திருக்குமரன் ஆகியோரின் மாமியும் சிவகுமார், சுஜிகுமார், ராஜ்குமார், சசீந்திரன், சசிகலா (கனடா), தீபிஜா, பவித்திரன், லக்சிஜா, சஞ்சீவ், கஜூலா, தர்சிகா, பானுஜா, நிரோஜன், சிந்துஜா, குருபரன், கம்சன், கவிர்தன், கதிர்சன், கஜீந்தி, கிருபா, தாரணி ஆகியோரின் பேர்த்தியும் ஜதுர்சன், அஸ்வின், ஜதுர்சா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.08.2009) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பருத்தித்துறை கோரியடி இந்துமயானத்திற்கு தகனத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
விஸ்வகுல ஒழுங்கை, **பா.சிவனேசன்**
புலோலி வடக்கு, *(மகன் - சிவகௌரி நகை மாளிகை),*
பருத்தித்துறை. (87903) **பு.திருக்குமரன்** *(மருமகன்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென் வசிரிஸ்தானில் கடும் சண்டை: 100 தலிபான் தீவிரவாதிகள் பலியாகினர்

## நாற்பதுக்கும் மேற்பட்ட வீடுகள் நிர்மூலம்

இஸ்லாமாபாத், ஓக. 15

பாகிஸ்தானின் தெற்கு வசிரிஸ்தான் பகுதியிலுள்ள ஜுன்டோலா பகுதியில் பாகிஸ்தான் இராணுவத்துக்கும் தலிபான் தீவிரவாதிகளுக்குமிடையே நடைபெற்ற சண்டையில் நூற்றுக்கு மேற்பட்ட தீவிரவாதிகள் கொல்லப்பட்டார்கள். இச்சண்டை 5 மணித்தியாலங்கள் வரை நீடித்தது.

சண்டை உக்கிரமடைந்ததைத் தொடர்ந்து, அப்பகுதிக்கு இராணுவ ஹெலிக்கொப்டர்கள் அனுப்பப்பட்டன. அவையும் தீவிரவாதிகளின் இலக்குகள் மீது குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தின. இச்சண்டையால் நாற்பதுக்கு மேற்பட்ட வீடுகள் இடிந்து விழுந்துள்ளன.

ஜுன்டோலா பகுதியிலுள்ள குர்ரம், ஓராக்சாய் ஆகிய இடங்களில், பாரிய தாக்குதல்களை நடத்த தலிபான் தீவிரவாதிகள் தம்மைத் தயார்படுத்தி வருகிறார்கள் என இராணுவப் புலனாய்வுத்துறைக்கு இரகசிய தகவல்கள் கிடைத்தன. இவற்றையடுத்து, இராணுவம் உஷார்படுத்தப்பட்டது.

இதையடுத்து, இராணுவம் திடீர் அதிரடி வேட்டையை மேற்கொண்டது. தலிபான் தீவிரவாதிகள் திரண்டு, இராணுவத்துக்கு எதிரான உக்கிரத் தாக்குதலை ஆரம்பித்தனர். இதனால் இரு சாராருக்கிடையே கடும் சண்டை நடைபெற்றது. அதேவேளை, இராணுவத்தால் இராணுவ ஹெலிக்கொப்டர்களும் அழைக்கப்பட்டன.

தெற்கு வசிரிஸ்தான் பகுதியில் பழங்குடியின மக்களே செறிந்து வாழ்கிறார்கள். இது மலைப் பிராந்தியமாகும். தீவிரவாதிகள் நேரடியாகவும், பதுங்கியிருந்தவாறும் தாக்குதல்களைத் தொடர்ந்தார்கள். ஹெலிக்கொப்டர்கள் தீவிரவாதிகளின் மறைவிடங்கள் மீது உக்கிரக் குண்டுத்தாக்குதல்களை மேற்கொண்டன.

தெற்கு வசிரிஸ்தான் பகுதி பாகிஸ்தான் தலிபான் தலைவர் பைதுல்லா மசூத்தின் கோட்டையாகும். இங்கு ஆளில்லா அமெரிக்க விமானம் மேற்கொண்ட தாக்குதலில், மசூத்தும் அவரது இரண்டாவது மனைவியும் மற்றும் சிலரும் கொல்லப்பட்டுவிட்டனர் என்ற தகவல்கள் வெளியாகியுள்ளன. எனினும், மசூத் கொல்லப்பட்டார் என்ற தகவல் பல மட்டங்களிலும் தொடர்ந்து மறுக்கப்பட்டு வருகிறது.

## மியான்மாருக்கு எதிரான தடைகளை ஐரோப்பிய ஒன்றியம் விரிவாக்கியது

வாஷிங்ரன், ஓக. 15

மியான்மருக்கு எதிரான தடைகளை ஐரோப்பிய ஒன்றியம் விரிவுபடுத்தியுள்ளது.

மியான்மரின் எதிர்க்கட்சித் தலைவி ஆங் சான் சூகிக்கு எதிராக மியான்மர் நீதிமன்றத்தால் 18 மாத வீட்டுக்காவல் தண்டனை விதிக்கப்பட்ட இரு தினங்களுக்குப் பின்னர் இந்தத் தடை விஸ்தரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆங் சான் சூகிக்கு வீட்டுக்காவல் சட்டங்களை மீறிய குற்றச்சாட்டின்பேரில் மீண்டும் வீட்டுக்காவல் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. ஆங் சான் சூகியின் அடிப்படை உரிமைகளை மீறும் வகையில் மியான்மர் இராணுவ ஆட்சியாளர்கள் செயற்பட்டு வருகிறார்கள் என ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது. அத்துடன் அது மியான்மரின் இராணுவ அதிகாரிகளுக்கும் அரசு உத்தியோகத்தர்களுக்கும் எதிராக தடைகளைப் பிறப்பித்துள்ளது.

## பன்றிக் காய்ச்சல் கிருமியின் இரண்டாவது படையெடுப்புக் கடுமையாக இருக்குமாம்!

### விஞ்ஞானிகள் அபாய எச்சரிக்கை

சிக்காகோ, ஓக. 15

பன்றிக் காய்ச்சல் கிருமியின் இரண்டாவது படையெடுப்பு மிகக் கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தும் என விஞ்ஞானிகள் அபாய எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

உலகை அச்சுறுத்திவரும் பன்றிக் காய்ச்சல் நோய்க் கிருமி, முதன் முதலில் கடந்த ஏப்ரல் மாதத்தில் கண்டறியப்பட்டது. கடந்த ஜூன் மாதம் 11 ஆம் திகதி அன்று இந்த நோய் பயங்கர தொற்றுநோய் என்று உலக சுகாதார நிறுவனம் சார்பில் அறிவிக்கப்பட்டது.

இதுவரை இந்த நோயினால் 1 லட்சத்து 77 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் ஆயிரத்து 462 பேர் இந் நோய்க்குப் பலியாகியுள்ளனர். ஆர்ஜெண்டினா, சிலி, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளில் இந்த நோயின் தாக்கம் குறைந்தும், இந்தியா தாய்லாந்து, வியட்நாம் ஆகிய நாடுகளில் அதிகரித்தும் வருகின்றது.

இதற்கிடையில், எந்த ஒரு தொற்று நோயானாலும் முதலில் அதன் தாக்கம் சிறிய அளவில் இருக்கும். எனினும், அதன் இரண்டாவது சுற்றில் அதன் பாதிப்புகள் மிகக் கடுமையாக இருக்கும் என அமெரிக்க விஞ்ஞானிகள் அபாய எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அமெரிக்காவின் தேசிய சுகாதர மையத்தின் விஞ்ஞானிகளான டாக்டர் டேவிட் மொரேன்ஸ், டாக்டர் ஜெப்ரி டாபன்பெர்கர் ஆகியோர் அமெரிக்க மருத்துவ சங்கப் பத்திரிகைகளில் எழுதிய கட்டுரையில் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளனர்.

கடந்த 500 ஆண்டுகளில் உலக அளவிலும், கண்டங்கள் அளவிலும் மக்களைத் தாக்கிய 14 வகையான தொற்றுநோய்கள் பற்றி ஆராயப்பட்டுள்ளன. முதலில் மெதுவாகப் பரவும் இந் நோய் இரண்டாவது முறையாக மிகக் கடுமையாகத் தாக்கும் என கண்டறியப்பட்டுள்ளது.

இதற்கிணங்க பன்றிக் காய்ச்சலின் இரண்டாவது தாக்கம் மிகக் கடுமையானதாக இருக்கும் என ஆய்வாளர்கள் முடிவு செய்துள்ளார்கள்.

கடந்த 1918 ஆம் 1919 ஆம் ஆண்டுகளில் பரவிய தொற்றுநோயை இதற்கு உதாரணமாக அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதேபோல், தற்போது பரவிவரும் பன்றிக் காய்ச்சலும் மீண்டும் இரண்டாவது முறையாகப் பரவும்போது 200 கோடி பேர் வரை பாதிப்புக்குள்ளாவர் என்று உலக சுகாதார நிறுவனங்கள் கணித்துள்ளன.

## முஷாரப்பை கைது செய்ய அரசின் அனுமதி தேவை

### பொலிஸ் உயரதிகாரிகள் தெரிவிப்பு

இஸ்லாமாபாத், ஓக. 15

பாகிஸ்தான் அரசின் அனுமதியின்றி பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி முஷாரப்பை கைது செய்ய முடியாது. இத்தகவலை பொலிஸ் துறை உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள் என 'டான்' நாளிதழில் செய்தி வெளியாகியுள்ளது.

நவம்பர் 2007 இல் ஜனாதிபதி முஷாரப் அவசரநிலைப் பிரகடனம் செய்தார். ஆனால், அதற்கு ஒப்புதல் அளிக்க மறுத்த நீதிபதிகள் பலர் சட்டவிரோதமாக வீட்டுக்காவலில் வைக்கப்பட்டனர்.

இது தொடர்பாக சமீபத்தில் உள்ளூர் நீதிமன்ற உத்தரவின்பேரில் முஷாரப் மீதும் மற்றும் சிலர் மீதும் இஸ்லாமாபாத்திலுள்ள பொலிஸ் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

ஆயினும், அரச அமைப்புச் சட்டப்படி அரசின் அனுமதியின்றி முஷாரப்பை கைது செய்ய முடியாது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முஷாரப் தற்போது ஐரோப்பாவில் உள்ளார். அவர் தாயகம் திரும்பினால் கைது செய்யப்படுவார் என முன்னர் தகவல்கள் வெளியாயின. ஆயினும், இப்போது அவரைக் கைது செய்ய முடியாது என்று பொலிஸ்துறை உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்த வழக்குத் தொடர்பாக புலன் விசாரணைகளை மேற்கொள்ள பாதிக்கப்பட்டவர்களை அணுகி அவர்களிடம் வாக்குமூலம் பெறவேண்டும்.

எனினும், பாதிக்கப்பட்ட நீதிபதிகளை நேரடியாக அணுகும் அதிகாரம் பொலிஸாருக்கு இல்லை. அவர்கள் அரச அலுவலர்கள் என்பதால், அவர்கள் சார்ந்த நீதிமன்றத்தின் தலைமைப் பொறுப்பிலுள்ளவர்கள் மூலம்தான் அவர்களை அணுக முடியும். அதற்கான முயற்சிகளில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே ஒரு நீதிவானை அணுகி முஷாரபை கைது செய்வதற்கான உத்தரவை பொலிஸார் விரைவில் பெற்றுவிடுவர் என வழக்கை விசாரித்து வரும் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார் என 'நியூஸ் டெய்லி' நாளிதழில் செய்தி வெளியாகியுள்ளது.

## 15 பேருக்கு சுதந்திரப் பதக்கங்கள் அமெ. ஜனாதிபதி ஒபாமா வழங்கினார்

அமெரிக்காவின் மிக உயர்ந்த விருதான ஜனாதிபதியின் சுதந்திர பதக்கங்கள் வானியல் விஞ்ஞானி ஸ்டீபன் ஹாகிங், நோபல் பரிசு வென்ற பங்களாதேஷ் வங்கிப் புரட்சியாளர் முகம்மத் யூனுஸ் ஆகியோருக்கு ஜனாதிபதி ஒபாமாவால் வழங்கப்பட்டன.

ஜனாதிபதியின் சுதந்திர பதக்கம் கடந்த 1945 ஆம் ஆண்டு அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி ஹரி ட்ருமேனால் அறிமுகப்படுத்தப்பட்டது. அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு, உலக அமைதி, கலாசார வளர்ச்சி போன்றவற்றுக்குப் பாடுபவர்களுக்கு இப்பதக்கம் வழங்கப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டு இந்த பதக்கம் பிரிட்டிஷ் விஞ்ஞானி ஸ்டீபன் ஹாகிங்கிற்கு வழங்கப்பட்டது. தற்போதைய உலகின் ஈடுடிணையற்ற விஞ்ஞானியாகக் கருதப்படும் ஹாகிங்கின் 'ஏ' பிரிட் ஹிஸ்டரி ஒப் டேம் என்ற புத்தகம் மிகவும் பிரபலமானது.

அவரால் கை, கால்களை அசைக்கவோ பேசவோ முடியாது. ஆனால், அவர் சக்கர நாற்காலியில் அமர்ந்தபடியே உலகம் மெச்சும் விஞ்ஞானியாக இருந்து வருகிறார்.

வாஷிங்ரனில் வியாழக்கிழமை நடைபெற்ற விழாவில் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா கலந்துகொண்டு அவர்களுக்கு இப்பதக்கங்களை வழங்கினார்.

ஒபாமா தமதுரையில், ''விஞ்ஞானி ஸ்டீபன் ஹாகிங் சக்கர நாற்காலியில் அமர்ந்தபடியே இந்த அண்டத்தில் வெகுதூரத்துக்கு எம்மை அழைத்துச் செல்கிறார். இவர் தமது அறிவியல் கருத்துகளால் நமது எண்ணங்களை தூண்டிவிடுகிறார். மனிதனின் மகத்தான எழுச்சியை உணரச்செய்கிறார்'' என்றார்.

சிறுகடன்கள் மூலம் லட்சக்கணக்கான பங்களாதேஷ் ஏழைகளின் வாழ்வில் ஒளியேற்றிய முகம்மத் யூனுஸ், டென்னிஸ் வீராங்கனை பில்லி ஜீன் கிங், தென் ஆபிரிக்காவின் டேஸ்மான்ட் டுடு, அயர்லாந்து ஜனாதிபதி மேரி ரொபின்சன் ஆகியோர் உட்பட 15 பேருக்கும் இந்த பதக்கங்களை ஒபாமா வழங்கினார்.

## மிகப் பெரிய விண்கற்கள் பூமியைத் தாக்கும் அபாயம்!

### நாஸா விண்வெளி ஆய்வு மையம் எச்சரிக்கை

வாஷிங்ரன், ஓக. 15

மிகப்பெரிய விண்கற்கள் பூமியைத் தாக்கும் அபாயம் உண்டு என அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி மையமான நாஸா எச்சரிக்கை விடுத்துள்ளது. குறைந்தது 460 அடி விட்டமும், அதிகபட்சமாக 3,280 அடி விட்டமும் இருக்கக்கூடிய சுமார் 20,000 விண்கற்கள் வான்வெளியில் சுற்றிக் கொண்டிருக்கின்றன என்றும் அது மதிப்பீடு செய்துள்ளது.

இவை எப்போதாவது திடீரென பூமியை நோக்கி, வந்து பூமியை தாக்கி பெரிய அளவில் சேதத்தை உண்டாக்கக்கூடியவை என நாஸா ஏற்கனவே எச்சரித்திருக்கிறது. எனவே, அம்மாதிரியான ஆபத்தான கற்களின் போக்கை துல்லியமாகக் கண்டுபிடிக்குமாறு நாஸாவை நான்கு வருடங்களுக்கு முன்னரே அமெரிக்க காங்கிரஸ் கேட்டுக்கொண்டிருந்தது. அதற்குத் தேவையான பணத்தையும் அது ஒதுக்கீடு செய்திருந்தது.

இன்னும் அந்தப் பணம் நாஸாவுக்குப் போய் சேரவில்லை. இதனால், விண்கற்களின் போக்கைக் கண்டுபிடிக்கத் தேவையான நவீன தொலைநோக்கிகளை இன்னும் நாஸா நிறுவாமல் இருக்கிறது.

90 சதவீத விண்கற்களை 2020 இற்குள் கண்டுபிடிக்க வேண்டும் என நாஸாவை அமெரிக்கா கேட்டுக்கொண்டிருந்தாலும், இப்போதுள்ள தொலைநோக்கி வசதியை கொண்டு அவற்றில் மூன்றில் ஒரு பங்கு விண்கற்களைத்தான் கண்டுபிடிக்க முடியும் என நாஸா தெரிவிக்கிறது என்று நஷனல் அகடமி ஒப் சயின்ஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## நேபாளத்தில் குண்டுவெடிப்பு: ஒருவர் பலி; மூவர் காயம்

காத்மண்டு, ஓக. 15

நேபாளத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் ஒருவர் பலியானார். 2 குழந்தைகள் உட்பட 3 பேர் காயமடைந்தனர்.

தாதெல்துரா மாவட்டத்திலுள்ள லாமிகொடா என்னுமிடத்தில் புதன்கிழமை இச்சம்பவம் நடந்துள்ளது. இதில் மோகன்சிங் பொஹாரா என்பவர் அவ்விடத்திலேயே உயிரிழந்தார். அவருடைய மனைவி சரளாதேவியும், 2 குழந்தைகளும் படுகாயம் அடைந்தனர்.

குடியரசு ஆட்சி முறைக்கு எதிரானவர்களே இக்குண்டுத் தாக்குதலை நடத்தியிருக்கலாம் என நேபாள காங்கிரஸ் தலைவர் கிரிஜா பிரசாத் கொய்ராலா குற்றஞ்சாட்டியுள்ளார்.

## ஈரானில் கைதிகள் படுகொலை ஜனாதிபதி வேட்பாளர் முறையீடு

தெஹ்ரான், ஓக. 15

ஈரானில் கைதிகள் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள் என ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட மெஹ்தி கரூபி தெரிவித்துள்ளார்.

தேர்தல் முடிவுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டங்களை நடத்திய நபர்களே இவ்வாறு சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். ஆண், பெண் சிறைக் கைதிகள் மீது பாலியல் வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, பாலியல் ரீதியான துன்புறுத்தல்கள் இடம்பெறவில்லை என மறுத்துள்ள ஈரானிய அதிகாரிகள், சித்திரவதைகள் இடம்பெற்றுள்ளமையை ஒப்புக்கொண்டுள்ளனர்.

தற்போதைய ஜனாதிபதிக்கு எதிராகக் கோஷங்களை எழுப்பிய குற்றத்திற்காக இளைஞர்களும் யுவதிகளும் மூர்க்கத்தனமாகத் தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள் என மெஹ்தி சுட்டிக்காட்டியுள்ளார்.

சிறைச்சாலைக் கைதிகளின் உரிமைகள் உரிய முறையில் பாதுகாக்கப்படவில்லை என ஈரானிய ஆன்மீகத் தலைவர் அயதுல்லா கொய்மேனியும் தெரிவித்துள்ளார்.

சித்திரவதைச் சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கென நாடாளுமன்றமும், நீதிமன்றமும் விசேட குழுக்களை நியமித்துள்ளன. அத்துடன் சிறைக் கைதிகள் சித்திரவதை செய்யப்பட்டுள்ளார்கள் என்பதை பொலிஸ்துறை அதிகாரிகள் ஒப்புக்கொண்டுள்ளனர்.

இதேவேளை, [illegible] பாதிப்பும் ஏற்பட[illegible] அரசியல்வாதிகள் பிரசாரம் செய்துவருகின்றனர்.

## தங்கப்பல் கட்டுவத்தும் சோமாலியாவில் தடை!

மொகடிஷு, ஓக. 15

சோமாலியாவில் தங்கப் பல் கட்டுவதும் இஸ்லாமியச் சட்டத்திற்கு எதிரானது எனக் கூறி மதவாதக் குழுவினர், தங்கப்பல்லை வலுக்கட்டாயமாகப் பிடுங்கி வருகின்றனர்.

சோமாலியாவில் அல்-குவைதா தீவிரவாத இயக்கத்தைப் பின்பற்றி அல்-ஷகாப் என்ற இஸ்லாமிய அடிப்படைவாதக் குழு இயங்கி வருகிறது. இக்குழு, இஸ்லாமியச் சட்டத்தை அமுல்படுத்துவதாகக் கூறி அங்குள்ள இஸ்லாமியர்களுக்குப் பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்து வருகிறது.

அதன் ஒரு கட்டமாக தற்போது தங்கப் பல் மற்றும் வெள்ளிப் பல் கட்டுவதற்கும் இக்குழு தடை விதித்துள்ளது. தங்கப் பல் அல்லது வெள்ளிப் பல் கட்டியவர்களை வீதியில் கண்டாலோ, அது குறித்து தகவல் கிடைத்தாலோ, சம்பந்தப்பட்ட ஆண், பெண்களை வலுக்கட்டாயமாக ஒருவரிடம் அழைத்துச் செல்கின்றனர்.

முகமூடி அணிந்த அந்த நபரை பல் டாக்டர் என்று சொல்லி, அவர் மூலமாக தங்கப் பல் அல்லது வெள்ளிப் பல் அணிந்த நபரிடமிருந்து வலுக்கட்டாயமாகப் பிடுங்கப்படுகிறது.

இவ்வாறு பல்லை இழந்த பஷீர் என்பவர் கூறுகையில், பல் பிடுங்கும் இடத்தில் தம்மைப் போன்றே வலுக்கட்டாயமாக அழைத்து வரப்பட்ட எராளமான ஆண்களும், பெண்களும் வரிசையில் நிற்கின்றனர் எனத் தெரிவித்தார்

இவ்வாறு பிடுங்கப்படும் பற்களை அந்த இஸ்லாமியக் குழுவினர் விற்று பணமாக்குவர் என்ற சந்தேகம் தமக்கு ஏற்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரினில் பாரதம் சிறந்து விளங்கட்டும்; தரணியில் தமிழகம் தழைத்தோங்கட்டும்



சுதந்திர தினத்தையொட்டி தஞ்சை ரயில் நிலையத்தில் ஜனசதாப்தி எக்ஸ்பிரஸில் ஏறச் சென்ற பயணிகளின் உடைமைகளை ரயில்வே கொமாண்டோ படை பொலிஸார் சோதனை செய்கின்றபோது.....

## தமிழகத் தலைவர்கள் சுதந்திரதின வாழ்த்து



சென்னை, ஓக. 15


''பாரதம் பாரினில் சிறக்கவும், தமிழகம் தரணியில் தழைத் தோங்கவும் பாடுபடுவோம்!'' - என்று அ.தி.மு.க. பொதுச்செயலாளர் ஜெயலலிதா தனது சுதந்திரதினச் செய்தியில் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

மேலும், சுதந்திர தினத்தை முன்னிட்டு தமிழக முதல்வர் கருணாநிதி, தமிழக ஆளுநர் பர்னாலா உள்ளிட்ட பல்வேறு கட்சித் தலைவர்கள் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

63ஆவது சுதந்திர தினம் இன்று இந்தியா முழுவதும் கோலாகலமாக கொண்டாடப்படுகிறது. இதனை முன்னிட்டு தலைவர்கள் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்திகள் வருமாறு -

ஆளுநர் பர்னாலா-

நம்முடைய தாய்நாட்டின் விடுதலைக்காக தியாகங்கள் செய்த நம்முடைய முன்னோர்களுக்கு இந்த நன்நாளில் நாம் மரியாதை செலுத்துவோம். நாட்டின் ஒருமைப்பாட்டையும், இறையாண்மையையும் பாதுகாக்க உறுதிமொழி எடுத்துக்கொள்வோம்.



கருணாநிதி -

அண்டை மாநிலங்களுடன் தொடர்ந்து நல்லுறவு பேணப்பட வேண்டும் என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு என்றும் செயற்பட்டு வரும் இந்த அரசு, ஒரு முத்திரைச் சாதனையாக கர்நாடக மாநில அரசுடன் இணைந்து பெங்களூரில் அய்யன் திருவள்ளுவர் சிலையைத் திறந்தும், சென்னையில் கன்னட மொழிக் கவிஞர் சர்வக்ஞரின் திரு உருவச் சிலையை திறந்து வைத்தும் தேசிய அளவில் மாநிலங்களுக்கிடையே நல்லுறவு பேணப்படுவதற்கு வழிகாட்டப்பட்டுள்ளது.

இந்த இனிய வேளையில் கொண்டாடப்படும் சுதந்திரத் திருநாளில் சாதி, மத, மொழி வேறுபாடுகளுக்கு இடம்கொடாமல் ஒன்றுபட்டு நின்று சுதந்திரத்தின் பயன் முழுவதையும் நமது நாட்டு மக்களுக்கு தொடர்ந்து கிடைத்திட அனைவரும் உறுதியேற்று உழைப்போம்.



அ.தி.மு.க. பொதுச் செயலர் ஜெயலலிதா -

'தனியொரு மனிதனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்' என்று வாழும் மனிதர் அனைவருக்கும் உணவிட வேண்டியதன் இன்றியமையாமையை வலியுறுத்திய பாரதி கண்ட சமுதாயத்தை உருவாக்கவும், குழிதோண்டி புதைக்கப்பட்ட ஜனநாயகம் மீண்டும் மலருவதற்கான சூழ்நிலையை உருவாக்கவும் இந்தத் திருநாளில் நாம் அனைவரும் உறுதி ஏற்போம்! பாரதம் பாரினில் சிறக்கவும், தமிழகம் தரணியில் தழைத் தோங்கவும் பாடுபடுவோம்!.

தமிழகக் காங்கிரஸ் தலைவர் தங்கபாலு-

இந்தியாவின் விடுதலைக்கு நிகரற்ற தியாகமும், விடுதலை இந்தியாவின் உருவாக் கத்திற்கு மகத்தான சாதனைகளும் புரிந்த தேசியத் தலைவர்களுக்கு இந்த சுதந்திர நன்னாளில் வீர வணக்கம் செலுத்துவோம் - என்று தெரிவித்தனர்.

## மன்மோகன் சிங் அமெரிக்கா செல்வார்

வாஷிங்ரன், ஓக.15

பிரதமர் மன்மோகன் சிங், வரும் நவம்பர் மாத இறுதியில் அமெரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொள்கிறார். அங்கு அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்படுகிறது.

அமெரிக்க ஜனாதிபதியாக பராக் ஒபாமா பதவியேற்ற பின்னர் பிரதமர் மன்மோகன் சிங் அமெரிக்கா செல்வது இதுவே முதல் தடவையாகும்.

இந்தப் பயணத்தின்போது, நவம்பர் 24 ஆம் திகதி இரு நாடுகளுக்கும் இடையே பல முக்கியமான ஒப்பந்தங்கள் கைழெழுத்தாகின்றன.

மன்மோகன் சிங்கின் இந்தப் பயணம் அமெரிக்கா - இந்தியாவுக்கிடையேயான நட்பில் ஒரு மைல் கல்லாக அமையும் என்று கருதப் படுகிறது. இந்தியப் பிரதமரின் வருகைக்கான ஏற்பாடுகள் இப்போதே நடந்து வருகின்றன.

## கனடாவிலிருந்து சென்னைக்கு வந்த யாழ். பெண்ணுக்கு பன்றிக்காய்ச்சல்

ஆலந்தூர், ஆக.14-

கனடாவிலிருந்து விமானத்தில் சென்னைக்கு வந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சித்ரா (வயது - 40) மற்றும் அவரது மகன் அனுசின் (வயது - 14) ஆகியோர் பன்றிக்காய்ச்சல் காரணமாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இந்தியா முழுவதும் பன்றிக்காய்ச்சல் நோய் பரவி வருவதால் இந்தியாவிலுள்ள அனைத்து பன்னாட்டு விமான நிலையங்களிலும், விமானத்தில் இருந்து வரும் பயணிகளுக்கு வைத்திய சோதனை நடத்துகிறார்கள்.

நேற்றுமுன்தினம் மீனம்பாக்கம் விமான நிலையத்தின் சர்வதேச பிரிவுக்கு கனடாவிலிருந்து ஒரு விமானம் வந்தது. அதில் வந்த பயணிகளுக்குப் பன்றிக்காய்ச்சல் உள்ளதா என்று கண்டறிய வைத்தியர்கள் பரிசோதனை மேற்கொண்டனர்.

இலங்கை, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சித்ரா (வயது - 40) மற்றும் அவரது மகன் அனுசின் (வயது - 14) ஆகியோரை வைத்தியர்கள் பரிசோதனை செய்தபோது, அவர்களுக்கு பன்றிக்காய்ச்சல் இருப்பதற்கான அறிகுறிகள் காணப்பட்டன.

இவர்கள் கனடாவில் குடியுரிமை பெற்றவர்கள். சென்னையில் உள்ள தங்கை வீட்டிற்கு வந்தனர். பன்றிக்காய்ச்சல் அறிகுறி இருந்ததால், 2 பேருக்கும் வைத்தியர்கள் முதல் சிகிச்சை அளித்தனர். பின்னர் தண்டையார்பேட்டையில் உள்ள தொற்றுநோய் வைத்தியசாலைக்கு மேல் சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர்.

## இடைத்தேர்தல் தொகுதிகளில் நாளையுடன் பிரசாரம் முடிவு

உத்தமபாளையம், ஓக. 15

எதிர்வரும் 18ஆம் திகதி இடைத்தேர்தல் நடக்கும் கம்பம், இளையான்குடி, தொண்டாமுத்தூர், பர்கூர், ஸ்ரீவைகுண்டம் ஆகிய 5 தொகுதிகளிலும் தேர்தல் கமிஷன் உத்தரவுப்படி நாளை 16ஆம் திகதி மாலை 5 மணியுடன் பிரசாரம் முடிவடைகிறது.

இத்தேர்தலில் அனைத்து வாக்குசாவடிகளையும் பதற்றம் நிறைந்த வாக்குசாவடிகளாக தேர்தல் கமிஷன் அறிவித்துள்ளது. 5 தொகுதிகளிலும் பெரும்பாலான வாக்குச்சாவடிகள் வெப் கமரா மூலம் கண்காணிக்கப்படுகின்றன. மேலும் அனைத்து வாக்குசாவடிகளிலும் வாக்குப்பதிவு வீடியோவில் பதிவு செய்யப்படுகிறது.

வாக்குப்பதிவு இயந்திரத்தைக் குறை கூறி, இந்தத் தேர்தலை அ.தி.மு.க., பா.ம.க., ம.தி.மு.க. கட்சிகள் புறக்கணித்துள்ளன. தி.மு.க., தே.மு.தி.க., கம்யூனிஸ்ட்கள், பா.ஜ.கட்சிகள் போட்டியிடுகின்றன.

தி.மு.கவில் நிதியமைச்சர் அன்பழகன், துணைமுதல்வர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்டோரும், காங்கிரஸில் மத்திய அமைச்சர்கள் ப.சிதம்பரம், ஜி.கே.வாசன், மாநில தலைவர் தங்கபாலு உள்ளிட்டோரும், தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தீவிர பிரசாரம் செய்தனர்.

தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த், பண்ருட்டி ராமச்சந்திரன், மார்க்சிஸ்ட் மாநில செயலாளர் வரதராஜன், இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் தா.பாண்டியன், பா.ஜ. மாநில தலைவர் இல.கணேசன் உள்பட பல்வேறு கட்சித் தலைவர்களும் தங்கள் வேட்பாளர்களுக்கு ஆதரவாக பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

5 தொகுதிகளிலும் வேட்பாளர்கள் இறுதிக் கட்ட பிரசாரத்தில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

வெளி யூர்களை சேர்ந்த கட்சி தொண்டர்கள், விடுதிகள், பண்ணை வீடுகள், திருமண மண்டபங்களில் தங்கி தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தேர்தல் கமிஷன் உத்தரவுப்படி, நாளை 16ஆம் திகதி மாலை 5 மணியுடன் பிரசாரம் முடிவடைகிறது. அன்று மாலைக்குள் வெளியூர்காரர்கள் தொகுதியை விட்டு வெளியேறவும் தேர்தல் கமிஷன் உத்தரவிட்டுள்ளது.




## பன்றிக்காய்ச்சல் பலி 21 ஆக அதிகரிப்பு; பீதியைக் கிளப்பாதீர்; பிரதமர் கோரிக்கை!

புதுடில்லி, ஓக.15

இந்தியா முழுவதும் பன்றிக்காய்ச்சல் பலி 21 ஆக உயர்ந்துள்ள நிலையில், பன்றிக்காய்ச்சல் தொடர்பாக பீதியைக் கிளப்ப வேண்டாம் - என்று பிரதமர் மன்மோகன் சிங் கேட்டுக்கொண்டுள்ளார்.

பன்றிக்காய்ச்சல் தொடர்பாக விவாதிப்பதற்காக மத்திய அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது. அப்போதே பிரதமர் இதனைக் கேட்டுக் கொண்டார்.

இந்தியாவில் இப்போது நிலவும் மிகப் பெரிய பிரச்சினைகளில் இதுவும் ஒன்று என்பதை தாம் உணர்ந்துள்ளார் என்றும், அதைச் சமாளிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டுள்ளது என்றும் பிரதமர் தெரிவித்தார்.



இதனிடையே, சென்னையைச் சேர்ந்த சிறுவன் சஞ்சய் உட்பட 17 பேர் இறந்துள்ள நிலையில், பெங்களூரில் ரூபா என்ற 26 வயது பாடசாலை ஆசிரியை பன்றிக் காய்ச்சலால் நேற்றுமுன்தினம் காலை இறந்தார்.

புனேயில், ருட்விக் காம்லே என்ற 11 மாத ஆண் குழந்தையும் பாரதி கோயல் என்ற 75 வயது மூதாட்டியும் 37 வயது அர்ச்சனா என்ற பெண்ணும் இறந்தனர். இதனால் இந்தியா முழுவதும் பன்றிக்காய்ச்சல் பலி 21 ஆக உயர்ந்துள்ளது.

## சென்னையில் மீண்டும் நிலநடுக்கம்; கட்டடங்கள் குலுங்கின; மக்கள் பீதி!

சென்னை, ஓக. 15

சென்னையில் நேற்றுமுன்தினம் மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டது. அடையாறு, பட்டினப்பாக்கம், தி.நகர் உள்ளிட்ட 30 இற்கும் மேற்பட்ட இடங்களில் கட்டடங்கள் லேசாக அதிர்ந்தன. இதனால், பொது மக்களும் கட்டடங்களில் பணியாற்றிக் கொண்டிருந்தவர்களும் அலறியடித்து வெளியே ஓடி வந்தனர்.

அந்தமானில் நேற்றுமுன்தினம் மீண்டும் ஏற்பட்ட நிலநடுக்கத்தை அடுத்தே சென்னையில் நில அதிர்வு ஏற்பட்டது எனக் கூறப்படுகிறது.

வடக்கு அந்தமானில் கடந்த 11ஆம் திகதி நள்ளிரவு 1.25 மணிக்கு வங்கக்கடலில் 3 கி.மீ. ஆழத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனால் தமிழகக் கடலோரப் பகுதிகளில் கட்டடங்கள் அதிர்ந்தன. உடனடியாக ஆழிப்பேரலை எச்சரிக்கை விடப்பட்டது. அப்போது மழை பெய்து கொண்டிருந்தது.

இதனால் பீதி அடைந்த பொதுமக்கள், வீடுகளை விட்டு வெளியேறி மழையில் நனைந்தபடி இரவு முழுவதும் இருந்தனர். அதன்பின், ஆழிப்பேரலை எச்சரிக்கை வாபஸ் பெறப்பட்டது.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் பிற்பகல் 2.51 மணிக்கு வடக்கு அந்தமானில் மீண்டும் அதே இடத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இது சென்னையில் இருந்து ஆயிரம் கி.மீ. தூரம் என்பதால் தமிழகக் கடலோரப் பகுதிகளிலும் நில அதிர்வு ஏற்பட்டது. இதனால் சென்னை அடையாறு, பட்டினப்பாக்கம், தி.நகர் உள்ளிட்ட 30இற்கும் மேற்பட்ட இடங்களில் கட்டடங்கள் லேசாக அதிர்ந்தன.

அடுக்குமாடி குடியிருப்புகளில் கட்டில்கள் ஆட்டம் கண்டன. நில நடுக்கத்தால் பொருள்கள் கீழே விழுந்தன. இதை உணர்ந்த பொதுமக்கள் பீதியில் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறினர். அந்த பகுதிகளில் உள்ள அலுவலகங்களில் இருந்தவர்களும் பதற்றத்துடன் வெளியேறினர்.

பட்டினப்பாக்கத்தில் மிகப்பெரிய தனியார் நிறுவனம் ஒன்று 8 மாடிக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அந்த கட்டடம் அதிர்ந்ததை அடுத்து அங்கு பணிபுரியும் 500இற்கும் மேற்பட்ட ஊழியர்கள் பீதியில் வெளியேறினர்.

இதுகுறித்து அந்த நிறுவன ஊழியர் சீனுவாசன் கூறுகையில் -

வழக்கம்போல் பணியில் இருந்தேன். மதியம் திடீரென கணினி 'கீ போர்டு', நாற்காலிகள் அசைந்தன. எனக்கு தலை சுற்றியது. நிலநடுக்கத்தை 3 வினாடிகள் உணர முடிந்தது. இது போன்ற நிலநடுக்கத்தை நான் உணர்ந்ததே இல்லை. அதற்குள் சக ஊழியர்கள் ஓட்டம் பிடித்தனர். நானும் வெளியே ஓடி வந்துவிட்டேன். இது என் வாழ்நாளில் மறக்க முடியாத சம்பவம் - என்றார்.

## மகள் எனக் கூறி பெண் ஒருவர் முறைப்பாடு மரபணுச் சோதனைக்கு அமைச்சர் மறுப்பு!

### ஒரிசாவில் பரபரப்பு



புவனேஸ்வர், ஓக. 15

ஒரிசாவில் முன்னாள் அமைச்சர் அரவிந்த டாலியின் மகள்தான் நான் என்று கூறி பெண் ஒருவர் மகளிர் கமிஷனில் முறைப்பாடு செய்தார். இதுதொடர்பாக மரபணு சோதனைக்கு ஒத்துழைக்க அரவிந்த் டாலி மறுத்தமை ஒரிசாவில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஒரிசா மாநில முன்னாள் அமைச்சர் அரவிந்த் டாலி. இவர் தற்போது ஆளும் பிஜூ ஜனதா தள எம்.எல்.ஏயாக இருக்கிறார். இந்த நிலையில், சஞ்சிதா டாலி என்ற பெண் ஒரிசா மாநில மகளிர் கமிஷனில் மனு ஒன்றைத் தாக்கல் செய்தார். அதில், நான் அரவிந்த் டாலியின் மகள். ஆனால், இதை ஏற்க அவர் மறுக்கிறார். இதை நிரூபிக்க அரவிந்த் டாலிக்கு மரபணு சோதனை நடத்த உத்தரவிட வேண்டும் என்று கோரியிருந்தார்.

இதை விசாரித்த மகளிர் ஆணையம், அரவிந்த் டாலிக்கும், சஞ்சிதாவுக்கும் மரபணு சோதனை நடத்த உத்தரவிட்டது. இந்தச் சோதனைக்கு ஒத்துழைக்க முடியாது என்று அரவிந்த் டாலி நேற்றுமுன்தினம் அறிவித்தார். இதுபற்றி அவர் கூறியவை வருமாறு -

எனக்கு ஒரே மனைவிதான். அவரது பெயர் மஞ்சு. வேறு எந்தப் பெண்ணுடனும் எனக்கு தொடர்பு இல்லை. சஞ்சிதா என் மகளே இல்லை. என் புகழுக்கு களங்கம் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகவே இப்படி ஒரு அபாண்டமான குற்றச்சாட்டைச் சுமத்தியுள்ளனர். இந்த விவகாரத்தில் மரபணுச் சோதனை நடத்த உத்தரவிட மகளிர் ஆணையத்துக்கு அதிகாரம் கிடையாது. சஞ்சிதா, வேறொருவரின் மகள் என்று மல்கன்கிரி மாஜிஸ்திரேட் நீதிமன்றம் ஏற்கனவே தீர்ப்பளித்துள்ளது. எனவே, மாநில மகளிர் ஆணையம் மீது என் மனைவி அவதூறு வழக்குத் தொடர உள்ளார் - என்றார்.



### தந்தையை அடையாளம் காட்டுவது தாய்தான்

இதுபற்றி சஞ்சிதாவின் தாய் கமலா கூறியவை வருமாறு -

நான்தான் அரவிந்த் டாலியின் முதல் மனைவி. என் மகள் சஞ்சிதாவின் தந்தை அரவிந்த் டாலிதான். என் மகளின் தந்தை யார் என்று தாய் என்ற முறையில் எனக்கு மட்டும்தான் தெரியும். அவர் தந்தை இல்லை என்றால் மரபணு சோதனைக்கு பயந்து ஓடுவது ஏன்? அரவிந்த் டாலியை கட்சியில் இருந்து முதல்வர் நவீன் பட்நாயக் நீக்க வேண்டும் - என்றார்.

ஆனால், மரபணுச் சோதனை நடத்த உத்தரவிட மகளிர் ஆணையத்துக்கு அதிகாரம் உண்டு என்று அதன் தலைவர் உஷா கூறினார்.

இந்த விவகாரம் ஒரிசாவில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்தப் பெருந்திருவிழாவையொட்டி 'வீரகேசரி' பத்திரிகை நிறுவனம் நல்லூர் சாதனா பாடசாலை விளையாட்டரங்கில் நேற்று நடத்திய நாட்டிய இசை நிகழ்ச்சியின் போது எடுக்கப்பட்ட படங்கள். பரதரத்னா ஸ்ரீமதி ரமா வைத்தியநாதனின் நடனத் தோற்றங்களை முதல் இரண்டு படங்களில் காணலாம்.

நிகழ்வில் விசேட விருந்தினர்களாகக் கலந்துகொண்ட சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அரச அதிபர் கே.கணேஷ், திருமதி கணேஷ், வீரகேசரி நிறுவனத்தின் பொதுமுகாமையாளர் எம்.கந்தசாமி ஆகியோர் முன் வரிசையில் உள்ளனர். *(படங்கள்: லக்ஸ்மன்)*

# கட்டுநாயக்கா விமான நிலையத்தில் புலிகளைக் கைது செய்வதற்கெனத் தனிப்பிரிவு

கொழும்பு, ஓக. 15

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் மற்றும் அனுதாபிகளைத் துப்பறிந்து கண்டுபிடிக்கும் நோக்கத்தில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் விசேட புலனாய்வுப் பிரிவு ஒன்று அமைக்கப்பட உள்ளது எனத் தெரியவருகிறது.

இலங்கையில் இருக்கும் உறவினர்களை சந்திக்க வருவதாகக் கூறி ஜேர்மன், பிரான்ஸ், பிரித்தானியா, சுவிற்சர்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து புலி ஆதரவாளர்களும், புலி அனுதாபிகளும் நாட்டுக்குள் பரவலாக ஊடுருவுகிறார்கள் என்று அரசு சந்தேகிக்கின்றது. அதேநேரம் சர்வதேச மன்னிப்புச் சபையைச் சேர்ந்த இருவர் அண்மையில் 'சுற்றுலா பயணிகள்' என்ற போர்வையில் இலங்கைக்கு வந்திருக்கின்றனர் எனப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை அரசுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தக்கூடிய தகவல்களை சேகரித்து வெளிநாடுகளுக்கு வழங்குவதற்காகவே புலி ஆதரவாளர்களும், புலி அனுதாபிகளும் இலங்கைக்கு வந்து கொண்டிருக்கிறார்களென புலனாய்வு அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இந்நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காகவே கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் விசேட புலனாய்வுப் பிரிவு ஒன்று அமைக்கப்பட உள்ளது எனத் தெரியவருகிறது.

# வடக்கு-கிழக்கில் முதலீடு செய்ய அமெரிக்கா தீவிரமாக ஆராய்வு

கொழும்பு, ஓக. 15

தற்போதைய யுத்தமற்ற சூழலில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் புதிய முதலீடுகளை மேற்கொள்வது குறித்து அமெரிக்கா தீவிரமாக ஆராய்ந்து வருகிறது. இதன் ஒரு கட்டமாக கொழும்பில் விசேட மாநாடு ஒன்றை ஒக்ரோபர் மாதம் 13 ஆம் 14 ஆம் திகதிகளில் நடத்த இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகம் ஏற்பாடு செய்துள்ளது.

இம்மாநாட்டில் பங்குபற்றுமாறு அமெரிக்க தொழிலதிபர்களுக்கும் அமெரிக்க வர்த்தக நிறுவனங்களில் கடமையாற்றும் இலங்கையர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் புதிய முதலீடுகளை மேற்கொண்டு புதிய தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பது குறித்து இம்மாநாட்டில் விரிவாக ஆராயப்படவுள்ளது. இதே நேரம் இலங்கை அரசின் உயர்மட்டத்தினர் சந்திப்பதற்கு இம்மாநாட்டில் பங்குபற்றும் அமெரிக்க முதலீட்டாளர்கள் மற்றும் அமெரிக்க நிறுவனங்களில் கடமையாற்றும் இலங்கையர்களுக்கு சந்தர்ப்பங்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்று இலங்கையிலுள்ள அமெரிக்க தூதரகம் அறிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(அ-சி)

# ஐ.சி.எல். அமைப்பிலிருந்து விலகிய வீரர்கள் ஐ.பி.எல். கிரிக்கெட்டில் விளையாட அனுமதி

தடை செய்யப்பட்ட கிரிக்கெட் போட்டி அமைப்பான இந்தியன் கிரிக்கெட் லீக்கிலிருந்து வெளியே வந்த இந்திய கிரிக்கெட் வீரர்கள் 3ஆவது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் விளையாட இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அனுமதி அளித்துள்ளது. இவர்களை அதிகபட்சமாக வீரர் ஒருவருக்கு 50 லட்சம் ரூபாவுக்கு ஒப்பந்தம் செய்துகொள்ளலாம்.

பி.சி.சி.ஐ. செயற்குழுக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதில் கால்பந்து கூட்டமைப்பிற்கு நிதி உதவியளிப்பதும், முன்னாள் ஐ.சி.எல். வீரர்களுக்கு ஐ.பி.எல். கிரிக்கெட்டில் விளையாட அனுமதி அளிப்பதும் போன்ற முக்கியமான விடயங்கள் விவாதமாக நடைபெற்றன.

மேலும் மும்பையில் துடுப்பாட்ட சிறப்புப் பயிற்சி நிலையம், மொஹாலியில் சிறப்பு வேகப்பந்து வீச்சுப் பயிற்சி நிலையம், சென்னையில் சுழற்பந்து வீச்சு மற்றும் விக்கெட் காப்பாளர் பயிற்சி நிலையம் போன்றவற்றை நிறுவவும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவில் சமீபமாக வளர்ந்து வரும் வீரர்கள் கிரிக்கெட் தொடரில் வெற்றிபெற்ற இந்திய அணிக்கும் துணை ஊழியர்களுக்கும் தலா 25 லட்சம் ரூபா பரிசுத் தொகையும் அளிக்கப்படவுள்ளது.

# சயீத் அஜ்மலுக்கு அபராதம்!

கடந்த புதன்கிழமை இலங்கை அணிக்கு எதிராக நடைபெற்ற 'ருவென்ரி-20' கிரிக்கெட் போட்டியின்போது சங்கக்காராவை வீழ்த்திய பின்னர், பாகிஸ்தான் அணியின் பந்துவீச்சாளரான சயீத் அஜ்மல் அவரை வசை பாடியபடி 'பெவிலியன்' நோக்கிச் செல்லுமாறு செய்கை செய்திருந்தார். இதனால், அவரது ஆட்டத் தொகையில் 15 வீதம் அபராதம் செலுத்துமாறு ஆட்ட நடுவர்கள் உத்தரவிட்டுள்ளனர்.

இலங்கை அணியினர் துடுப்பெடுத்தாடிய 14ஆவது ஓவரிலேயே இவ்வாறு நடந்தது. இந்த மோசமான நடத்தையை நடுவர்களான அஷோக டி சில்வா, விஜேவர்தன ஆகியோர் கண்டித்தனர்.

இதனால், உடனேயே தவறை உணர்ந்த சயீத் அஜ்மல் இருவரிடம் மன்னிப்புக் கேட்டதோடு, ஆட்டம் முடிந்த பின்பு சங்கக்காராவிடம் தன் தவறுக்கு மன்னிப்புக் கேட்டார்.

# ஐ.சி.எல்லிலிருந்து விலகுகிறார் இம்ரான்

ஐ.சி.எல். கிரிக்கெட்டுடன் தன் உறவுகளை முடித்துக்கொள்ளப் போகிறார் என பாகிஸ்தான் அணியின் முன்னாள் ஆரம்ப வீரரான இம்ரான் பிராத் தெரிவித்துள்ளார்.

இதுவரை பாகிஸ்தானுக்காக 27 டெஸ்ட் போட்டிகளிலும், 33 ஒரு நாள் சர்வதேச போட்டிகளிலும் விளையாடியுள்ள பிராத், பாகிஸ்தான் தேசிய அணியில் இடம்பெற விரும்புகிறார் எனத் தெரிவித்துள்ளார்.

ஐ.சி.எல். கிரிக்கெட்டில் சேர்ந்தது பெரும் தவறு. அதில் ஆண்டொன்றுக்கு ஒரு கிரிக்கெட் தொடரில்தான் விளையாட முடியும். அது ஒரு கிரிக்கெட் வீரரின் ஆவலைப் பூர்த்திசெய்யக்கூடியதாக இல்லை - என்று கூறினார் பிராத்.

# சானியா-ஷியாவோன் ஜோடி இரண்டாவது சுற்றில் தோல்வி

சின்சினாட்டி ஓபன் மகளிர் டென்னிஸ் இரட்டையர் பிரிவில் 2ஆவது சுற்று ஆட்டத்தில் இந்திய-இத்தாலிய ஜோடியான சானியா மிர்ஷா-ஷியாவோன் ஜோடி உலகின் முதல்நிலை இரட்டையர் ஜோடியான காரா பிளாக்-லீசல் ஹியூபர் ஜோடியிடம் நேர் செற் கணக்கில் தோல்வி தழுவி வெளியேறியது.

சிம்பாவே - அமெரிக்கா ஜோடியான காரா பிளாக்-ஹியூபர் ஜோடி 6- 4, 6-3 என்ற நேர் செற் கணக்கில் தம்மை எதிர்த்து விளையாடிய சானியா-ஷியாவேன் ஜோடியை வீழ்த்தியது.

74 நிமிடங்கள் வரை நடைபெற்ற இந்தப் போட்டியில் இரண்டு செற்களிலும் எதிரணியை முறியடிக்கக் கிடைத்த வாய்ப்புகளை 3 முறைகள் சானியா ஜோடி தவற விட்டிருந்தது.

மாறாக காரா பிளாக்-ஹியூபர் ஜோடி 8 வாய்ப்புகளில் 5 முறை பிறேக் கொடுத்தனர். இதனால், எளிதான வெற்றி வாய்ப்புக் கிட்டியது.

## ஊக்க மருந்து ஒப்பந்தப் பிரச்சினை:
# சட்ட ஆலோசனையைப் பெற இந்திய கிரிக்கெட் சபை முடிவு

மும்பை, ஓக. 15

ஊக்க மருந்துத் தடுப்பு ஒப்பந்தத்தின் புதிய விதிமுறை தொடர்பாக சட்ட ஆலோசனையைப் பெறுவதற்கு இந்திய கிரிக்கெட் சபை முடிவு செய்துள்ளது.

உலக ஊக்க மருந்துத் தடுப்பு மையத்தின் புதிய விதிமுறைப்படி, ஒவ்வொரு ஒரு மணி நேரத்துக்கும் வீரர்கள் தாங்கள் எங்கே இருக்கிறோம் என்ற தகவலை முன்கூட்டியே தெரிவிக்க வேண்டும். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்திய கிரிக்கெட் வீரர்கள் ஒப்பந்தத்தில் கையெழுத்திட மறுத்து வருகின்றனர் என்பது தெரிந்ததே.

இவர்களுக்கு ஆதரவு அளித்த இந்திய கிரிக்கெட் சபை தனி மனித உரிமையில் யாரும் தலையிட முடியாது. இந்திய அரசியல் சாசனம் தனி மனித உரிமைக்கு உத்தரவாதம் கொடுக்கிறது எனத் தெரிவித்தது.

இந்த நிலையில் புதிய விதிமுறை குறித்து சட்ட ஆலோசனையை நாடுவதற்கு இந்திய கிரிக்கெட் சபை முடிவு செய்துள்ளது. இதுபற்றி விளக்கம் கேட்டு சட்டத்தரணி வானாவதி, முன்னாள் தலைமை நீதிபதி ஏ.எஸ். ஆனந்த் ஆகியோருக்கு கடிதம் எழுதியுள்ளது. இவர்களது ஆலோசனை கிடைத்த பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரியவருகிறது.

இதற்கிடையே இந்திய வீரர்களின் கோரிக்கை தொடர்பாக சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) அமைத்துள்ள ஐந்து பேரைக் கொண்ட குழு விவாதிக்கவுள்ளது. இந்த விவாதம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 5, 6ஆம் திகதிகளில் துபாயில் நடைபெறவுள்ளது. இக்குழுவில் இடம்பெற்றுள்ள டிம் கெர், ஐ.சி.சி. தலைமை நிர்வாக அதிகாரி ஹாரூன் லார்கட், முன்னாள் இந்திய அணித்தலைவர் அணில் கும்ளே, பி.சி.சி.ஐ. செயலர் சீனிவாசன், ஐ.சி.சியின் தலைமை ஆலோசகர் ஐ.எஸ். பிந்திரா ஆகியோர் கலந்து கொள்கின்றனர். உலக ஊக்க மருந்துத் தடுப்பு மையத்தின் சார்பில், அதன் பிரதிநிதி ஒருவரும் பங்கேற்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது குறித்து ஹாரூன் லார்கட் கூறியவை வருமாறு:-

சர்ச்சைக்குரிய புதிய விதிமுறை மற்றும் இந்திய வீரர்களின் ஆட்சேபம் குறித்து விவாதிக்கப்படும். விளையாட்டில் ஊக்க மருந்தைத் தடுப்பதில் அனைவரும் உறுதியாக உள்ளோம். இப்பிரச்சினைக்கு சுமூகமான முறையில் தீர்வு காணப்படும்'' - என்றார்.

# தென்மராட்சி தெற்கிக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டுள்ளது. மக்கள் தமது வீடுகளையும் காணிகளையும் பார்வையிட்டுத் திரும்பினர்.

கைதடி நாவற்குழி கிராம அலுவலர் பிரிவில் 38 குடும்பங்களைச் சேர்ந்த 161 பேரும் மறவன்புலோ பகுதியில் 313 குடும்பங்களைச் சேர்ந்த 1024 பேரும் தனங்கிளப்பு பகுதியில் 147 குடும்பங்களைச் சேர்ந்த 575 பேரும் அங்கு குடியமரவுள்ளனர் என அந்தப் பகுதி கிராம அலுவலர்கள் தெரிவித்தனர்.

பெரும்பாலான வீடுகள் முற்றாக சேதமடைந்திருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. மறவன்புலோ பகுதியில் மூன்று வீடுகள் மட்டுமே எவ்வித சேதமுமின்றிக் காணப்படுவதாகவும் ஏனைய வீடுகளில் பெரும்பாலும் சில சுவர்களை மட்டுமே காணக்கூடியதாக உள்ளதென அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

குடிதண்ணீர் வசதி, வீடுகளைப் புனர [illegible] உதவிகள், போக்குவரத்து, மின்சாரம், வீதிபுனரமைப்பு என்பன உடன் கவனிக்கப்படவேண்டும் எனவும் மக்கள் தெரிவித்தனர்.

பருத்தித்துறை, யாழ்ப்பாணம், சுன்னாகம், கோப்பாய்,உரும்பிராய் உட்பட குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இடம்பெயர்ந்து தங்கியிருந்த மக்கள் நேற்று தமது சொந்த இடங்களுக்கு மீளக் குடியமர அனுமதிக்கப்பட்டதைத் தொடர்ந்து தமது வீடுகளையும் வயல் நிலங்களையும் சென்று பார்வையிட்டனர்.

தமது வயல் நிலங்களில் வளர்ந்துள்ள செடிகளை அகற்றுவதிலும் அவற்றுக்கு தீ வைத்து அழிப்பதிலும் சிலர்ஆர்வம் காட்டினார்கள்.

இப்போது தான்தாங்கள் மகிழ்ச்சியுடன் இருப்பதாக அனைவரும் உதயனுக்குத் தெரிவித்தனர்.

இந்தப் பிரதேச மக்கள் 1999 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 13 ஆம் திகதி இடம்பெயர்ந்து குடாநாட்டில் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்து வந்தனர். (அ-1-111-207)

(படங்கள்: 12 ஆம் பக்கத்தில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.தே. கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக சரத் என் சில்வாவை நிறுத்தும் திட்டம் 'அவுட்'

கொழும்பு, ஓக. 15

ஐ.தே.கவுடன் கூட்டுச் சேர்ந்து எதிர்க் கட்சிகளால் அமைக்கப்படும் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளராக முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா நியமிக் கப்படமாட்டார் என்று தெரியவருகிறது.

ஐ.தே.கவுடன் கூட்டுச் சேர்ந்து ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவு, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஜனநாயக மக் கள் முன்னணி ஆகிய கட்சிகள் எதிர்க் கட்சிகளின் வலுவான கூட்டணி ஒன்றை அமைக்கும் உடன்பாட்டுக்கு வந்துள்ளன.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக பொதுவேட்பாளர் ஒருவரைக் களத் தில் இறக்கி எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறுவதே இக்கூட்ட ணியை அமைப்பதன் பிரதான நோக்கமாகும்.

இந்நிலையில் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவுத் தலைவர் மங்கள சமரவீர, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், ஜனநாயக மக்கள் முன்ன ணித் தலைவர் மனோகணேசன் ஆகியோர் கூடி ஆராய்ந்துள்ளனர் என்று தெரியவருகிறது.

இந்த உயர்மட்ட ஆலோசனைக் கூட் டத்தில் ஐ.தே.க. பிரதித் தலைவர் கரு ஜய சூரியவும் கலந்துகொண்டார் என்று தெரி விக்கப்படுகிறது.

ஜே.வி.பியினர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிரான பொது வேட்பாள ராக முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்த லில் நிறுத்துமாறு எதிர்க்கட்சிகளை மீண் டும் மீண்டும் வலியுறுத்தி வருவது குறித்து இக்கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

சரத் என் சில்வாவை பொதுவேட்பாள ராக நிறுத்துவதன் மூலம் ஜே.வி.பியின் ஆதரவை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்த லில் பெறமுடியுமென அங்கு ஆராயப்பட் டது எனத் தெரியவருகிறது. ஆனால், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவுத் தலை வர் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாள ராக அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் சரத் என் சில்வாவை நிறுத்துவதைக் கடுமை யாக அங்கு ஆட்சேபித்திருக்கிறார் என்றும் தெரியவருகிறது.

சரத் என் சில்வாவை எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக நிறுத்தக்கூடாது என்று தெரிவித்து மங்கள சமரவீரவால் முன்வைக் கப்பட்ட கருத்துக்களை ரவூப் ஹக்கீம், மனோகணேசன் ஆகியோர் மனப்பூர்வ மாக அங்கு ஏற்றுக்கொண்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க மங்கள சமரவீரவின் கடும் ஆட்சேபனைகளையும், ரவூப் ஹக் கீம், மனோகணேசன் ஆகியோரின் நிலைப் பாட்டையும் ஏற்றுக்கொண்டார் என்று தெரியவருகிறது.

இதையடுத்து ஐ.தே.கவுடன் கூட்டுச் சேர்ந்து எதிர்க்கட்சிகளால் அமைக்கப்பட விருக்கும் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளராக சரத் என் சில்வாவை போட்டி யிட வைக்கும் திட்டம் கைவிடப்பட்டது என ஐ.தே.க. வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## கொழும்பு குற்றத்தடுப்பு பொறுப்பதிகாரி பொலிஸ் தலைமையகத்திற்கு மாற்றம்

கொழும்பு, குற்றப்புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பதிகாரி வாஸ் குணவர்த்தன பொலிஸ் தலைமையகத்திற்கு மாற்றப் பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச் சாளர் ரஞ்சித் குணசேகர தெரிவித்துள்ளார்.

வாஸ் குணவர்த்தன இரு சர்ச்சைக்குரிய விடயங்களில் சிக்கியிருந்தார்.

ஒன்று, அவருடைய மகனுடன் பிரச்சி னைப்பட்ட மாணவன் ஒருவரைத் தாக்கு வதற்கு குற்றப்புலனாய்வுப் பிரிவு அதிகாரி களைப் பயன்படுத்தியமை.

மற்றையது, மன்னாரில் வெடி மருந்துடன் வான் ஒன்று பிடிக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புபட்ட பிரச்சினை. இவரது இடத் துக்கு இதுவரை புதிய ஆட் கள் நியமிக் கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

## நேபாளம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிலர் கல்கிஸைக் கடற்கரைக்குச் சென் றுள் ளனர். இவர்களில் ஒருவரின் சடலமே மீட் கப்பட்டிருக்கிறது என பொலிஸார் குறிப் பிட்டுள்ளனர்.

## மக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பினர் மாவை சேனாதிராசாவிடம் அவர் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

வவுனியாவில் தொடரும் மழை, வெள் ளம் காரணமாக மக்கள் பெரும் ஆபத்தை எதிர்நோக்கியிருக்கின்றனர். அவர்கள் நிலைமை சீராக மாற்று ஏற்பாடு உடன் மேற்கொள்ள வேண்டியதன் அவ சியத்தை நாடாளுமன்ற உறுப்பினர் கேட்டிருந்தார்.

இதேவேளை -

வன்னி மக்களின் நிலைமை தொடர் பாக இந்தியத் தூதுவர் அலோக் பிரசாத் துடன் மாவை சேனாதிராசா தொடர்பு கொண்டு எடுத்துக் கூறினார்.

இலங்கை அரசின் உயர் மட்டத்துடன் இது தொடர்பாக தொடர்பு கொண்டு பேசி யுள்ளதாகவும் வன்னி நிலைமை தொடர் பாக அறிக்கை கேட்டுள்ளதாகவும் இந்தி யத் தூதுவர் நாடாளுமன்ற உறுப்பினரிடம் தெரிவித்தார். (அ-1)

## 3 தசாப்தகால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திற்கு வழங்கிய செவ்வி ஒன்றின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

13 அரசியல் கட்சிகள் சர்வகட்சிதெரிவுக் குழு அமர்வுகளில் கலந்து கொண்டுள்ளன எனவும், 20 முக்கிய விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளன எனவும் அவர் தெரி வித்துள்ளார். அநேகமான பிரச்சினை களுக்கு தீர்வுத் திட்டங்கள் முன்வைக்கப் பட்டன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உலகில் எந்தவொரு நாட்டையும் விட வும் இலங்கையில் தீர்வுத் திட்டங்கள் துரித கதியில் முன்வைக்கப்பட்டு வருகின்றன என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையின் தேசியப் பிரச்சினைக்கு உள்நாட்டுக்கு பொருந்தக் கூடிய தீர்வுத் திட்டமொன்று முன்வைக்கப்பட வேண் டும் என்பதே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வின் உறுதியான நிலைப்பாடு என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சாவகச்சேரி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சர் கே.எஸ்.டக்ளஸ் தேவானந்தா பாதையைத் திறந்த பின்னர் உத்தியோக பூர்வமாக அவற்றை நகர சபையிடம் கைய ளித்தார்.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தினர் சாவகச்சேரி நகர சபையினர் உட்பட பெருமளவு மக்கள் இந்த நிகழ் வில் கலந்துகொண்டனர்.

சேதமடைந்துள்ள மயானத்தை புனர மைப்பதற்கும், விளையாட்டு மைதானத்தை புனரமைப்பதற்கும் உரிய மதிப்பீட்டுடன் வரைபடத்தினை சமர்ப்பிக்குமாறு நகர சபையினருக்கு அமைச்சர் உத்தரவிட்டார்.

1999 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 13 ஆம் திகதி சாவகச்சேரி - தனங்களப்பு வீதி யூடானபோக்குவரத்து தடைசெய்யப் பட்டது. அத்துடன் அந்த வீதியில் உள்ள மயானம், மைதானம் ஆகியவற்றின் பாவனைக்கும் தடை விதிக்கப்பட் டிருந்தது. (அ-1-207)

## வெடிகுண்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அக்கட்சியின் எம்.பி. பாலித ரங்கபண்டார இது தொடர்பாகக் கூறியவை வருமாறு:-

கொழும்புக்கு கொண்டுவந்து வெடிக்க வைப்பதற்குத் தயாரான நிலையில் குண்டுகள் பொருத்தப்பட்ட வாகனம் ஒன்றை பொலிஸார் மன்னாரில் வைத்துக் கைப்பற்றினர் என்று அரசு தெரிவித்துள்ளது.

புலிகளின் முக்கியஸ்தர் கே.பி. வழங் கிய தகவலை அடிப்படையாக வைத்தே இந்த வாகனம் கைப்பற்றப்பட்டது என்று பொலிஸார் கூறுகின்றனர். உண்மையில் கே.பியின் தகவலையடுத்து இது கைப்பற் றப்பட்டதா அல்லது பொலிஸார் பதவி உயர்வு பெறுவதற்காக இந்தச் சந்தர்ப்பத் தைப் பயன்படுத்தினரா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

ஆனால், அப்படியானதொரு வாகனம் கைப்பற்றப்படவில்லை என்று அப்பிர தேசத்துக்குப் பொறுப்பான பொலிஸ் அதிகாரி லஹுகே தெரிவித்துள்ளார். இதனால் சந்தேகம் வலுத்துள்ளது.

அதுமாத்திரமன்றி, அந்த வாகனத்தின் சாரதி குற்றப்புலனாய்வு அதிகாரியால் விடுதலை செய்யப்பட்டுள்ளார். உண்மை யில் அந்த வாகனத்தில் குண்டுகள் இருந்தன என்றால் அதன்சாரதியை விடுவிக்கமுடியுமா?

நீதிமன்றம் செய்யவேண்டிய வேலையை பொலிஸ் அதிகாரியால் எப்படிச் செ ய்ய முடியும்?

அந்தப் பொலிஸ் அதிகாரி இப்படிச் செய்து அரசுக்கு அவப்பெயரைப் பெற்றுக் கொடுக்க முற்படுகிறாரா அல்லது வாக னம் கைப்பற்றப்பட்டமை பொய்யா? இந் தச் சம்பவம் குழப்பமாகவுள்ளது.- என் றார். (அ-சி)

## மருமாதா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக் காலையில் இருந்து நாட்டின் சகல பகுதிகளிலும் இருந்து அலைஅலை யாக பக்தர்கூட்டம்ஆலயத்தைவந்தடைந்தது.

இன்று காலை 6.30 மணிக்கு கொழும்பு பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தலை மையில் கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக் கப்படும்.

ஆலயத்தை சூழவுள்ள பிரதேசங்களில் மக்கள் மீளக்குடியமர இதுவரை அனுமதி வழங்கப்படாததால் வெறிச்சோடிக்கிடந்த பிரதேசத்தில் மக்கள் தங்கியிருந்தனர்.

காடு கரம்பையாக காட்சியளித்த அப் பிரதேசங்களில் எங்கும் திருவிழாவை யொட்டி மக்கள் கூட்டம் நிரம்பி வழிகிறது.

அதேவேளை, இன்று மருதமடுமாதா வின் திருசொருப பவனியும் மருத மடு தாயாரின் திருச்சொருப ஆசீர்வாதமும் இடம்பெறவுள்ளன என மன்னார் மாவட்ட குருமுதல்வர் தெரிவித்தார்.

இதே நேரம், மடு தேவாலயத்திற்கு வருகை தந் திருக் கும் பக்தர்கள் நாளை மாலைக்குள் அங்கி ருந்து வெளியேற வேண்டும் என பாதுகாப்புத் தரப் பினர் அறிவுறுத் தியிருக் கின்றனர் எனவும் அவர் கூறி னார். (அ-சி)

## இன்று இந்தியாவின் 63ஆவது சுதந்திரதினம்

கொழும்பு, ஓக. 1569

இந்தியாவின் 63 ஆவது சுதந்திர தினம் இன்றாகும்.

இதனையொட்டி கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தில் தூதுவர் அலோக் பிரசாத் தலைமையில் சுதந்திரதின நிகழ் வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இதில் பல நாடுகளின் தூதுவர்களும், இராஜதந்திரிகளும் கலந்துகொள்வார்கள்.

## அங்குலான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்போது அந்தப் பகுதியில் அமைதி நில வுகின்றது எனப் பொலிஸார் தெரிவித்துள் ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் இரண்டு பொலிஸ் குழுவினர் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். இதுவரை 15 பேரி டம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது

நேற்றுமுன்தினம் அங்கு இடம்பெற்ற கலகத்தினால் ஏற்பட்ட சேத விவரங்கள் தொடர்பான மதிப்பீடு ஒன்றை பெறு வதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்துள் ளனர். (சி)

## இரண்டு முகாம்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியாவின் பல பகுதிகளிலும் வியாழக் கிழமையும் நேற்றும் கடும் மழை பெய்து வருகின்றது. குறிப்பாக செட்டிக் குளம் பகுதியில் நேற்று முற் பகல் பத்து மணிமுதல் நண்பகல் வரை சுமார் மூன்று மணித்தியாலயங்கள் பெருமழை தொடர்ச் சியாகப் பெய்தது.

அதனால் இராமநாதன், 'அருணாசலம் அகதி முகாம்களின் பின்புறத்தே தாழ்ந்த நிலப்பரப்பில் அமைந்துள்ள கூடாரங் களுக்குள் வெள்ளம் புகுந் ததாகவும்-

அதனால் சுமார் பத்தாயிரம் பேர் அவசர அவச ரமாக உயர்ந்த நிலப்பரப்பில் உள்ள பாடசாலைகளுக்கு இடம்மாற்றப்பட்ட னர் என்றும் தகவல்கள் தெரிவித்தன.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மல சல கூடங்கள் வெள்ளம் நிறைந்து இடிந்து வீழ்ந்துள்ளன. ஆற்றிலிருந்து குளிப்பதற் கும் மற்றும் பாவனைக்கும் குழாய்கள் மூலம் எடுத்துவரப்படும் தண்ணீர் கலங்க லாக வருவதால் அதனை பாவிக்க முடிய வில்லை என்று முகாம் வாசிகள் தம்மிடம் தெரிவித்ததாக வன்னி மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

மழை, வெள்ளம் காரணமாக நிலம் ஊறல் அடைந்துள்ளதால் கூடாரங்களுக் குள் படுக்கவோ இருக்கவோ முடியாத நிலை உருவாகி உள்ளது. வாகனங்கள் முகாம்களுக்குள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டிருப்பதால் உணவு விநியோகம், குடிதண்ணீர்விநியோகம்என்பனநேற்றுநண்பக லுடன் தடைப்பட்டுள்ளது. இதனால் மக் களுக்கு குடிதண்ணீரை, உணவை பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது - என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந் தன் உதயனுக்கு நேற்றிரவு தெரிவித்தார்.

மழை தொடர்ந்து பெய்தால் பாதிக்கப் பட்ட மக்களின் நிலை மேலும் மோசம் அடைந்து இக்கட்டு நிலைக்குச் செல்லும் ஆபத்து உருவாகலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

அகதிகளின் தற்போதைய பாதிப்பான நிலை குறித்து உயர் மட்டத்துக்கு அறிவித் துள்ளதாகவும் அவர் கூறினார். (அ-1)


LAVA HOSPITAL
75, TEMPLE ROAD, JAFFNA.
(ICR சந்திக்கு அருகாமையில்) T.P. 021 222 4333
* சத்திர சிகிச்சை நிபுணர்
தினமும் காலை 7.00 மணி
* பெண் நோயியல் மகப்பேற்று நிபுணர்கள்
வியாழன் பிற்பகல் 4 மணி, திங்கள் பிற்பகல் 1.00 மணி
* பொது வைத்திய நிபுணர்
வியாழன் பிற்பகல் 4.00 மணி
* பற்சிகிச்சை கிளினிக் - தினமும் பிற்பகல் 4.00 மணி
SCAN, ECG, இரத்த சலப் பரிசோதனைகள்
No: 151, Kannathiddy Road 021 222 7251
71, Sivapiragasam Road, Vannarpannai
90/7, Potpathy Road, Kokuvil.

GEOGRAPHY
Paper Class
செவ் - வியாழ. 4.30-6.00
2010 A/L
* கடந்தகால் வினாக் களும் மாதிரி வினாக் களும்.
ஆரம்பம் - 18/08 2009
செவ் - 4.30
SCIENCE HALL
யாழ்ப்பாணம்.

Personal Class
Ms Office, DTP, Web Design, Internet & E-mail ஆகிய கற்கைநெறிகள் உங்கள் வீடுகளிற்கு வந்து கற்பிக்கப்படும்.
★ பயிற்சியின் பின் உரிய சான்றிதழ்கள் வழங்கப்படும்.
குறிப்பு:- கணனி இல்லாதவர்களுக்கு எமது "Laptop" மூலமாகப் பயிற்சியளிக்கப்படும். T.P - 077-9672038

வெளிநாட்டு அழைப்புக்கள் 3/- முகம் பார்த்துக் கதைப்பதற்கு
அஸ்வினி மல்ரி பிளாசா
74, பலாலி வீதி, கோண்டாவில்
அழையுங்கள் : 021 567 7777

யாழ் மண்ணிலும் ஒலிக்கிறது...
வெளிநாட்டு அழைப்புக்களுக்கு 7/-
உள்வரும் வெளிநாட்டு அழைப்புக்களுக்கு 50 சதம் வழங்கப்படும்
லங்கா பெல்
முகவர் : அஸ்வினி மல்ரி பிளாசா
அழையுங்கள்: 021 567 7777

தேவை
எமது காமன்ஸுக்கு
* தையல் தெரிந்த பெண்பிள்ளைகள்
* கணனி இயக்குநர்கள்
(கணக்குப்பதிவுகள் மேற்கொள்ளக்கூடிய பெண்பிள்ளைகள்) தேவை
தொடர்புக்கு - றொசானி காமன்ஸ்
263/1, இராஜ காரியர்லேன், மானிப்பாய் வடக்கு, மானிப்பாய்.
கிளை - சபாபதிப் பிள்ளை வீதி, உடுவில் கிழக்கு, சுன்னாகம்.
(87891)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.08.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




ஆசிரியர்:-
திரு.வே.அன்பழகன்
யாழ் முன்னணி ஆசிரியர்.
தொ.இல -0773068999,



## விசேட புமைப்பரிசில் பரீட்சை வெளியீடு - 05


Model Examination For Grade Five Students for Selection to School and for the
**Award of Bursaries, August 2009.**
மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும், உதவிப்பணம் வழங்குவதற்குமாக தரம்-05 மாணவர்களுக்கு நடத்தப்படும்
**புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சை, ஓகஸ்ட் 2009.**

**வினாத்தாள் - I** **நேரம்: 45 நிமிடங்கள்**

**எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடையளிக்குக.**

✱ 01 - 33 வரையான வினாக்களுக்கு சரியான விடையின் கீழ்க்கீறிடுக.
✱ தரப்பட்டுள்ள முதற் படத்தினை மேலிருந்து பார்க்கின்றபோது எவ்வாறு தோற்றமளிக்கும் என்பதைக் காட்டும் சரியான வடிவத்தினைத் தெரிவு செய்க.


01.



1) 2) 3)

✱ பின்வரும் உருவில் முதலில் தரப்பட்ட தோற்றத்தினை எந்தப் பொருளினை மேலிருந்து பார்க்கும்போது காணலாம்.

02.



1) 2) 3)

✱ கீழே தரப்பட்டுள்ள உருக்களின் பெறுமதிகளைக் கொண்டு விடையைத் தெரிவுசெய்க.


03.
△ × △ = ○
○ ÷ △ = △
○ + △ = □

□ இதன் பெறுமத யாதாக இருக்கலாம்?
1) 2 2) 6 3) 12


✱ ஆரம்பத்தில் கூறப்படும் சம்பவத்தை நன்கு விவரிக்கின்ற விடையைத் தெரிவுசெய்க.

04. பிரபு எனது நல்ல நண்பன் என்பதனை எச் சந்தர்ப்பத்தில் அறியலாம்?
1) பிரபு பிறந்த நாளுக்கு இனிப்புத் தந்தமை.
2) பிரபு ஆபத்து வேளையில் எனக்கு உதவியமை.
3) பிரபு வகுப்பில் நண்பர்களுடன் ஒற்றுமையாக விளையாடுவதால்.


✱ கீழே தாயக்கட்டை ஒன்றின் முகங்களில் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளிகளைக் கொண்ட எண்களைக் காட்டும் வரிப்படங்கள் சில தரப்பட்டுள்ளன. அதற் கமைய கேட்கப்பட்டுள்ள வினாவுக்குரிய விடையை தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவுசெய்க.



05.



இதன் எதிர்ப்பக்கத்தில் உள்ள பெறுமதி எவ்வளவு?



1) 2) 3)

06. பாதை ஒன்றை அமைப்பதற்கு 6 மனிதர்களுக்கு 6 நாட்கள் தேவை எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இதே வேலையை 4 மனிதர்களைப் பயன்படுத்தினால் எத்தனை நாட்களில் முடிப்பர்?
1) 8 நாட்கள் 2) 9 நாட்கள் 3) 10 நாட்கள்

07. எனது தம்பியிடம் நான்கு வகையான 12 நாணயங்கள் உள்ளன. அவற்றின் மொத்தம் ரூபா 46 ஆகும். தம்பியிடம் இருக்கும் நாணயங்கள் யாவை?
1) ரூபா 10 நாணயங்கள் 2, ரூபா 5 நாணயங்கள் 3, ரூபா 2 நாணயங்கள் 4, ரூபா 1 நாணயங்கள் 13.
2) ரூபா 10 நாணயங்கள் 3, ரூபா 5 நாணயங்கள் 1, ரூபா 2 நாணயங்கள் 3, ரூபா 1 நாணயங்கள் 1.
3) ரூபா 10 நாணயங்கள் 2, ரூபா 5 நாணயங்கள் 2, ரூபா 2 நாணயங்கள் 1, ரூபா 1 நாணயங்கள் 3.

08. இந்த மூன்று எண் கூற்றுக்களும் உண்மையானவை. அதற்கேற்ப தரப்பட்ட விடைகளில் எது சரியான கூற்று எனத் தெரிவுசெய்க.

| ○ + □ 13 | ○ + 1 = △ | ○ - □ = 3 |
|---|---|---|

1) △ + □ = 16 2) △ + 3 = 11 3) ○ + △ = 17

✱ 09ஆம், 10ஆம் வினாக்களுக்குச் சரியான விடைகளை அடைப்புக்குறிக்குள் உள்ள சொற்களிலிருந்து தெரிவுசெய்க.

09. ஒரு விளையாட்டுக்கு எப்பொழுதும் ................................................
(விதிகள், பார்வையாளர்கள், வெற்றி, மைதானம்) உண்டு.

10. ஒரு புத்தகத்துக்கு எப்பொழுதும் ................................................
(பாடங்கள், படங்கள், பக்கங்கள், கட்டுரைகள்) உண்டு.

✱ சரியான விடையைத் தெரிவுசெய்க.

11. இராசன் தனது காணியில் பயறோ அல்லது உழுந்தோ அல்லது கடலையோ விதைத்திருக்கிறான். அவனுடைய மகன் அங்கு கடலை விதைக்கவில்லை எனக் கூறுகிறான். ஆகவே அக்காணிக்குள்,
1) பயறு விதைக்கப்பட்டிருக்கிறது.
2) பயறு அல்லது உழுந்து விதைக்கப்பட்டிருக்கிறது.
3) பயறும், உழுந்தும் விதைக்கப்பட்டிருக்கிறது.

12. "பருவத்தே பயிர் செய்" எனும் பழமொழிக்குப் பொருத்தமான வேறோர் பழமொழியைத் தெரிவுசெய்க.
1) காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்.
2) இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை.
3) வளரும் பயிரை முளையிலே தெரியும்.

13. எனது வகுப்பு மாணவர்களில் அதிகமானோர் எனக்கு வயதில் இளையவர்கள். இதன் கருத்து,
1) நான் எனது வகுப்பு மாணவர்கள் எல்லோரிலும் மூத்தவன்.
2) எனது வகுப்பு மாணவர்களிற் பலர் எனக்கு மூத்தவர்கள்.
3) எனது வகுப்பு மாணவரில் பலர் எனக்கு இளையவர்கள்.

✱ ஒரு வட்டமான வீதியில், ஒரே இடத்திலிருந்து சண்முகம் ஒரு திசையில் ஓட, அச்சுதனும் அபயனும் எதிர்த் திசையில் ஓடுகிறார்கள். சண்முகம் பாதி வட்டம் ஓடுவதற்கு முன்னரே அபயனைச் சந்திக்கின்றான். சண்முகம் பாதி வட்டத்தைக் கடந்த பின்னர் அச்சுதனைச் சந்திக்கிறான். இதன்படி 14ஆம், 15ஆம் வினாக்களுக்குரிய விடைகளைத் தெரிவுசெய்க.

14. மிக மந்தமாக ஓடுபவர்கள்
1) அச்சுதன் 2) அபயன் 3) சண்முகம்

15. மிக வேகமாக ஓடுபவன்
1) அச்சுதன் 2) அபயன் 3) சண்முகம்

16. நத்தையானது 4 மணித்தியாலத்தில் 1.5 *m* நீளம் பயணம் செய்யும. இது 160 நிமிடங்களில் எவ்வளவு தூரம் செல்லும்?




1) 60 *cm* 2) 100 *cm* 3) 150 *cm*

17. எந்த உருவத்தில் 3 சதுரங்களும், 2 வட்டங்களும் உள்ளன?



1) 2) 3)

✱ கீழேயுள்ள உருக்கள் ஓர் இயந்திரத்தில் பொருத்தப்பட்டுள்ள பற்சில்லுகள் ஐந்தைக் காட்டுகின்றன. அதன்படி, பின்வரும் வினாக்களுக்குரிய விடைகளைத் தெரிவு செய்க.




18. "X" சில்லு சுழலும் வேகத்தைவிட கூடிய வேகத்தில் அதே திசையில் சுழலும் சில்லு எது?
1) C 2) B 3) A


19. "X" சில்லு சுழலும் வேகத்தைவிடக் குறைந்த வேகத்தில் "x" சில்லு சுழலும் திசைக்கு எதிர்த்திசையாகச் சுழலும் சில்லுகள் யாவை?
1) A யும் C யும் 2) B யும் D யும் 3) Aயும் D யும்

20. தாரகாவினதும் சித்ராவினதும் வயதின் கூட்டுத்தொகை 32 வருடங்கள ஆகும். சித்ராவின் வயது தாரகாவின் வயதைப் போல் 3 மடங்கு எனின், தாரகாவின் வயது யாது?
1) 6 வருடங்கள் 2) 8 வருடங்கள் 3) 9 வருடங்கள்


21. கமல் தனது வீட்டில் இருந்து புறப்பட்டு கிழக்குத் திசையாகச் சிறிது தூரம பயணஞ் செய்து, அதன்பின் தனது வலது கைப்பக்கமாகத் திரும்பிச் சிறிது தூரம் பயணஞ் செய்தார். இவ்வாறு சிறிது தூரம் பயணஞ் செய்து தனது இடது கைப்பக்கமாகத் திரும்பிச் சிறிது தூரம் பயணஞ் செய்து, அதன் பின் மீண்டும தனது இடது கைப்பக்கமாகவே திரும்பிப் பயணஞ் செய்தார். இப்போது அவர எந்தத் திசைக்கு முகத்தைத் திருப்பிக் கொண்டுள்ளார்?
1) வடக்குத் திசை 2) தெற்குத் திசை 3) மேற்குத் திசை

22. எனக்கு 4 நண்பர்கள் உள்ளனர். நாம் ஒவ்வொருவரும் புதுவருட வாழ்த்து மடல்களைப் பரிமாறிக்கொண்டோம். நாம் பரிமாறிக்கொண்ட வாழ்த்துமடல்கள் எத்தனை?
1) 16 2) 18 3) 20


✱ தரப்பட்டுள்ள திண்ம உருக்களின் நிறைகளைக் கொண்டு விடையைத் தெரிக.




23. எந்தப் பொருட் கூட்டம் 2kg 50g நிறையைக் கொண்டது?




24. அருகில் காட்டப்பட்டுள்ள A,B தகடுகள் மை பூசப்படவுள்ளன. அதன்படி கீழுள்ள வெளிப்பாட்டில் பிழையற்றதைத் தெரிவுசெய்க.




1) A தகட்டுக்கு அதிகமாக B தகட்டிற்கு அதிக மை பூச வேண்டும்.
2) B தகட்டுக்கு அதிகமாக A தகட்டிற்கு அதிக மை வேண்டும்.
3) தகடு இரண்டிற்கும் சமமான மை (அளவு) வேண்டும்.

✱ பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

மழைக் காற்றைத் தாங்கிடும்
வாழும் குஞ்சைக் காத்திடும்
வலிமையான கூடுதான்
வடிவம் கூட அழகுதான்


சின்னக் குருவி முயற்சியால்
சிறிய கூடு கட்டினால்
உன்னைப் போல சிறுவனால்
ஊரை வெல்ல முடியுமே!

25. இப்பாடலுக்குப் பொருத்தமான பழமொழி யாது?
1) காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்.
2) ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.
3) முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்.


26. ஊரை வெல்ல முடிவது எப்படி?
1) சிறிய கூடு கட்டுவதால். 2) குருவிபோல் முயற்சி செய்வதால்.
3) வலிமையான கூடு கட்டுவதால்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27. முதலில் தரப்பட்டுள்ள இரண்டு உருக்களுக்கிடையிலான தொடர்பை அவதானித்து மூன்றாவதாக வரும் உருவிற்கு அடுத்து வரும் உருவைத் தெரிவுசெய்க.



28. ஒரு கடதாசித் துண்டு நான்காக மடிக்கப்பட்டு அதில் துளைகள் இடப்பட்டன. அதனை விரிக்கப்படும்போது தோன்றும் விதத்தைக் காட்டும் உரு முதலில் தரப்பட்டுள்ளது. அதில் எவ்வாறு துளைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கும் என்பதனைத் தெரிவுசெய்க.




- 29ஆம், 30ஆம் வினாக்களுக்கு பின்வரும் பந்தியை வாசித்து விடையைத் தெரிவு செய்க.

பசியால் வருந்திய வேடன் ஒருவன் வேட்டை ஆடுவதற்கு ஆயத்தமாகக் கையில் வில் ஏந்தியவனாய் கானகத்தைச் சுற்றி அலைந்தான். அலைந்தவன், எதிர்பாராத விதமான ஒரு மானைக்கண்டு, அதனை வேட்டையாடிக் கொன்றான். கொன்ற மானை எடுத்துக்கொண்டு வருகையில் பயங்கரமான உருவத்தையுடைய ஒரு காட்டுப்பன்றியைக் கண்டான். கண்டதும் மானை நிலத்தில் வைத்து விட்டு அதனை அம்பு எய்து நிலத்தில் வீழ்த்தினான். அதுவும் இடிமுழக்கம் போன்ற கொடிய சத்தத்துடன், வேடனைத் தாக்கிவிட்டு கால்களை உதறியவண்ணம் பூமியில் உருண்டது. தாக்குண்ட வேடன் அடியற்ற மரம்போலத் தரையில் துடிதுடித்து விழுந்தான்.

29. வேடன் கையில் வில் ஏந்தியவனாய் அலைந்தது எதற்காக?
1) காட்டைச் சுற்றிப் பார்ப்பதற்காக. 2) பசி தீர்ப்பதற்காக.
3) உணவுக்கு வேட்டை ஆடுவதற்காக.


30. பன்றி இடிமுழக்கம் போன்று சத்தமிட்டது எதனால்?
1) தான் இறந்துவிடுவேன் என்ற பயத்தினால்.
2) தன் உடலினுள் அம்பு பாய்ந்ததால்.
3) வேடனையும், வில்லையும் கண்டமையால்.


- 1,2,3 ஆகிய இலக்கங்களில் மூன்று வாக்கியங்கள் காட்டப்படுகின்றன. அவ் ஒவ்வொரு வாக்கியமும் பிள்ளைகளின் முகங்கள் மூலம் சொற்களின்மேல் காட்டபபடுகின்றன. ஒரு சொல் ஒரு முகத்தின் மூலம் காட்டப்படினும் முகங்கள் சொற்களின் ஒழுங்கிலே காட்டப்படவில்லை.
இதன்பிரகாரம் கீழே காட்டப்பட்டுள்ள 31ஆம், 32ஆம் வினாக்களுக்கு சொல்லுக்கு ஏற்ற முகத்தைத் தெரிவுசெய்க.

1)

நாளை நான் வீட்டுக்கு போகிறேன்

2)

நாளை வீட்டுக்கு வருகிறேன்

3)

நாளை பாடசாலைக்குப் போகிறேன்

31. நாளை 1) 2) 3)


32. வீடு 1) 2) 3)


- இந்த உருவங்களிடையே பிழையாகக் கீறப்பட்ட உருவம் ஒன்றுள்ளது அதைத் தெரிவுசெய்க.

33. 1) 2) 3)


- 34ஆம், 35ஆம் வினாக்களுக்கு தரப்பட்டுள்ள கூற்றை வாசித்து விடையளிக்குக.

நான்கு சிறுவர்கள் செய்யும் வேலையை 3 பெண்கள் செய்வார்கள்.
6 பெண்கள் செய்யும் வேலையை 4 ஆண்கள் செய்வார்கள்.

34. இவர்களில் நன்கு வேலை செய்யக்கூடியவர் யார்? (...............................)


35. ஒரு ஆண் செய்யும் வேலையை எத்தனை சிறுவர்கள் செய்து முடிப்பார்கள்? (...............................)

- தரப்பட்டுள்ள சொல் இடம்மாற்றி முறைப்படுத்திக் கருத்துடைய வசனமாக எழுதுக.

36. எடுத்தது / வெள்ளம் / பொழிந்து / பெருக்கு / மழை

.......................................................................................


37. அடுத்த கோலத்தில் எத்தனை புள்ளிகள் இருக்கும்? (.............)




38. சரத் நின்ற வரிசையில் அவருக்கு முன் 5 பேர் நின்றனர். வரிசையில் கடைசியில் நின்றவர் முதலாவதாக வரும்படி எல்லோரும் திரும்பி எதிர்த்திசை நோக்கி நிற்குமாறு வரிசை திருப்பி அமைக்கப்பட்டபோது சரத் முன்னால் 30 பேர் நின்றனர். ஆகவே வரிசையில் நின்ற முழு மக்கள் தொகை எத்தனை?
(.....................................)

39. கொழும்பிலிருந்து குருநாகல் வரை செல்லும் பஸ்ஸில் ஆரம்பத்திலேயே 56 ஆசனங்களில் பயணிகள் நிரம்பியிருந்தனர். முத[illegible] வாசிப் பயணிகள் இறங்க இருவர் ஏறினார்கள். அடுத்த [illegible] இறங்க ஒருவர் ஏறினார். இப்போது பஸ்ஸில் எத்தனை பேர் உள்ளனர்? (.....................................)

40. கமலா, விமலா ஆகியோர் வீட்டிலிருந்து பாடசாலைக்குச் செல்லும் பாதையானது வரிப்படத்தில் காட்டப்படுகிறது.




அவர்கள் இருவரும் வீட்டிலிருந்து பாடசாலைக்குச் செல்லும்போது இடது பக்கம் கூடுதலாகத் திரும்பியவர் யார்? (.............................................)

## வினாத்தாள் - II நேரம்: 1மணி 15 நிமிடங்கள்

**எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடையளிக்குக.**

01. பின்வரும் பந்தியை வாசித்து 1 - 10 வரையான வினாக்களுக்கு விடை எழுதுக.

நான் மிருகக் காட்சிச்சாலைக்குச் சென்றேன். அங்கே பல பறவைகளையும், மிருகங்களையும் பார்த்தேன். பல அபூர்வப் பறவைகளையும் மிருகங்களையும் அங்கு காண முடிந்தது. அபூர்வ வகைப் பாம்பினங்களைக் கண்டு ஆச்சரியமடைந்தேன். மிருகக்காட்சிச்சாலையில் உள்ள குரங்குகளைப் பார்க்கப் போனபோது எனக்கு அருகில் ஒரு சிறுமி நின்று கொண்டிருந்தாள். சற்று நேரத்தில் குரங்குகள் உள்ள கூட்டிற்கு அருகில் சென்றாள். திடீரென ஓவென்று கத்தத் தொடங்கினாள். மிருகக் காட்சிச்சாலைக்கு வந்தவர்கள் எல்லோரும் கூடிவிட்டனர். சிறுமி அழுகையை நிறுத்தவே இல்லை. என்ன நடந்தது? யாருக்கும் புரியவில்லை. நான் குரங்குகளைப் பார்த்தேன். ஒரு குரங்கின் கையில் இனிப்புப் பை இருந்தது. எனக்கு உடனே என்ன நடந்தது என்று புரிந்துவிட்டது.

01. இப் பந்தியில் எந்த இடத்தைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது?
.........................................................
02. அஃறிணைப் பன்மைப் படர்க்கைப் பெயர்ச்சொல்லைத் தருக.
.............................................
03. சிறுமி திடீரென அழுததன் காரணம் யாது?
.........................................................
04. "நான் பார்த்தேன்;" என்பதிலுள்ள "நான்" என்பதன் பன்மை வடிவம் யாது?
..............................
05. "கண்டு ஆச்சரியமடைந்தேன்" என்பதன் கருத்து யாது?
.........................................................
06. "குரங்குகள் உள்ள கூட்டிற்கு அருகில் சென்றாள்" என்பதன் எழுவாய் யாது?
.........................................................
07. உயர்திணை, தன்மை, ஒருமை பெயர்ச்சொல் யாது? .............................
08. "நான் குரங்குகளைப் பார்த்தேன்" என்பதை எதிர்கால பன்மை வாக்கியமாக எழுதுக. ..................................................
09. பெயர் அடைமொழிச் சொல் ஒன்று தருக. .............................
10. பந்தியிலுள்ள சினைப்பெயர் ஒன்று தருக. .............................

02. ஒழுங்குபடுத்தி எழுதுக.
தேடிச் / பயத்தினால் / சென்றோம் / நாங்கள் / இடத்தைத் / பாதுகாப்பான
.......................................................................................

03. "ஆறின கஞ்சி பழங்கஞ்சி" என்ற பழமொழியின் கருத்தை எழுதுக.
.......................................................................................

04. பின்வருவனவற்றின் தனிச்சொல்லை எழுதுக.
1. ஒரே நேரத்தில் பத்து விடயங்களை அவதானிக்கும் ஆற்றலுள்ளவன்
.........................................................
2. தாய், தந்தை யாருமற்றவன் .............................................

05. சரியான சொல்லின் கீழ்க் கோடிடுக.
கடல்பயணம், கடற்பயணம், கடல்ப்பயணம், கடற்ப்பயணம்

06. பின்வரும் வாக்கியங்களில் இடப்படவேண்டிய குறியீடுகளை இடுக.
ஐயோ வீடு எரிகிறதே என்று கமலா சத்தமிட்டாள்

07. வெங்காயத்தின் இலை தாள் போல பனையின் இலை .............................

08. நெருப்பு, தீ, தழல், அனல் என்பவற்றைக் குறிக்கும் வேறு ஒரு சொல் யாது?
.............................................

09. "தலை கவிழ்தல்" என்னும் மரபுத் தொடரின் கருத்து யாது?
.............................................

10. தரப்பட்டுள்ள தமிழ்ச்சொற்களுக்குரிய ஆங்கிலச் சொல்லை எழுதுக.
1. புகையிரத நிலையம் - .............................................
2. வயிறு - .............................................
3. இலைகள் - .............................................

11. பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்க்கருத்தை எழுதுக.
I am watering the plants .............................................

12. 
He is ................................ ( eating, writing, reading )

13. [illegible] என்பதன் தமிழ்க்கருத்தை எழுதுக.
.............................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. "மண்டும் வாருங்கள்" என்பதன் சிங்களச் சொல்லின் தமிழ் உச்சரிப்பை எழுதுக. ............................................................

15. பின்வரும் தாவரப் படங்களின் பெயர்களைத் தெரிந்து எழுதுக.
**(கொன்றை, எருக்கலை, தூதுவளை, பருத்தி, முட்கீரை)**

1) 
2) 

.................................... ....................................

16. பின்வரும் குறியீடுகள் எதனைக் குறிக்கின்றன?

1) 
2) 


.................................... ....................................

17. பின்வரும் இலைகள் எத் தாவரத்தினுடையது என எழுதுக.

1) 
2) 

.................................... ....................................

18. புராதன முக்கியம் பெற்ற கலைத்துவப் படைப்புக்களின் பெயரை எழுதுக.

1) 
2) 

.................................... ....................................

✱ **சரியான விடையின் கீழ்க்கோடிடுக.**

19. ஆண்டிற்கு ஒரு தடவை மட்டும் பூத்துக்காய்க்கும் மரம் எது?
1) பப்பாசி 2) தென்னை
3) பனை 4) கறீமுருங்கை

20. புனித வெள்ளரசு மரம் உள்ள இடம் எது?
1) மிகிந்தலை 2) கண்டி
3) பொலன்னறுவை 4) அநுராதபுரம்


21. பச்சை நிறத்தைப் பெறக் கலக்க வேண்டிய நிறங்கள் எவை?
1) நீலம், மஞ்சள் 2) சிவப்பு, மஞ்சள்
3) வெள்ளை, நீலம் 4) நீலம், சிவப்பு

22. நல்ல தரமான தேயிலையினை நீரில் இட்டால் தோன்றும் நிறம் யாது?
1) சிவப்பு 2) கபிலம் 3) இளமஞ்சள் 4) கறுப்பு

23. நீருடன் நன்கு கலக்காத திரவம் எது?
1) தேங்காய் எண்ணெய். 2) பால்
3) வினாகிரி. 4) உப்புநீர்

24. காலில் பாம்பு கடித்தால் உடனடியாகச் செய்ய வேண்டிய முதலுதவி
1) தேங்காய்ப்பாலை குடிக்கக் கொடுத்தல்.
2) காயத்தைச் சவர்க்காரம் இட்டுக் கழுவுதல்.
3) கடித்த இடத்திற்குச் சற்று மேலாக இறுகக் கட்டுதல்.
4) காயத்தின் மீது தேங்காய் எண்ணெய் பூசுதல்.

25. இந்த விளையாட்டுப் பற்றிக் கூற்றுக்களுள் பிழையான கூற்றைத் தெரிவுசெய்க.
1) இந்த விளையாட்டு கரப்பந்தாட்டமாகும்.
2) இதில் ஒரு குழுவில் ஆறுபேர் விளையாடுவர்.
3) இது இலங்கையின் தேசிய விளையாட்டு ஆகும்.
4) இந்த விளையாட்டு ஆண்களுக்கு மட்டும் உரிய விளையாட்டு ஆகும்.







26. மலேசியா, தாய்லாந்து ஆகிய நாடுகள் இலங்கைக்கு எத்திசையில் உள்ளது?
1) வடக்கு 2) கிழக்கு 3) தெற்கு 4) மேற்கு

27. மனதை நெறிப்படுத்தும் செயற்பாடுகளைப் படிமுறை ஒழுங்கில் காட்டும் விடை
1) மனதை தளர்த்துதல், உடலைத் தளர்த்துதல், மனவுறுதி, பிரார்த்தனை, மலர்வு
2) உடலைத்தளரத்துதல், மனவுறுதி, மனதைத் தளர்த்துதல், பிரார்த்தனை, மலர்வு
3) மலர்வு, பிரார்த்தனை. மனவுறுதி, உடலைத்தளர்த்துதல், மனதைத்தளர்த்துதல்
4) உடலைத் தளர்த்துதல், மனதைத்தளர்த்துதல், மனவுறுதி, பிரார்த்தனை, மலர்வு





28. இலங்கையின் தேசியக் கொடியில் உள்ள சிங்கத்தின் நிறம் யாது?
1) நீலம் 2) மஞ்சள் 3) சிவப்பு 4) பச்சை

29. சித்திரை மாதத்தில் மட்டும் பூக்கும் மரம் எது?
1) றம்புட்டான் 2) வேம்பு 3) மா 4) பப்பாசி




30. இந்த உபகரணங்களில் மரத்தை பலகையாக உருவாக்க உதவும் உபகரணம் எது?

1) 
2) 
3) 
4) 

31. மூன்று உலர்மின் கலங்களைப் பயன்படுத்தி மின்குமிழ் ஒன்றை ஒளிரச் செய்வதற்கு மாணவர் ஒருவர் முயற்சி செய்த நான்கு சந்தர்ப்பங்கள் கீழே வரிப்படங்களில் காட்டப்பட்டுள்ளன. மிகப் பிரகாசமாக மின்குமிழ் ஒளிரும் சந்தர்ப்பத்தை எடுத்துக் காட்டும் வரிப்படம் எது?

1) 
2) 
3) 
4) 

32. நான்கு பிள்ளைகள் நத்தையை வரைந்துள்ளமையை கீழே தரப்பட்டுள்ளது. அவற்றில் மிகவும் சரியாக வரையப்பட்ட நத்தைப் படத்தைத் தெரிவுசெய்க.

1) 
2) 
3) 
4) 

33. ஓடிகள் மூலம் இனப்பெருக்கம் அடையும் தாவரம் எது?
1) அன்னாசி 2) சதைகரச்சான் 3) வெங்காயம் 4) வல்லாரை

34. இலங்கைக்கே உரித்தான பிராணியாக அமையாதது எது?
1) கானாங் கோழி 2) பச்சைப்புடையன்.
3) மயில் 4) சருகுமான்

35. "ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை" என்று தொடங்கும் பாடலை இயற்றியவர் யார்?
1) புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை 2) சோமசுந்தரப் புலவர்
3) சின்னத்தம்பி புலவர் 4) சிவசம்புப் புலவர்

36. பின்வரும் விலங்குகளில் அதிகமாக நீரிலும் நிலத்திலும் வாழக்கூடியது எது?
1) தவளை 2) நுளம்பு 3) முதலை 4) நீர்ப்பாம்பு

37. மஞ்சள் நிறப் பின்னணியில் கறுப்புநிறத்தால் வரையப்பட்ட இந்த வீதிக் குறியீடு உணர்த்துவது யாது?
1) முன்னால் இடப்பக்கம் பார்க்கவும்
2) முன்னால் இடப்பக்க வளைவு
3) வலது பக்கம் செல்லவும்
4) முன்னால் வலது பக்க வளைவு



✱ ஒரு விளையாட்டு அரங்கில் 5 நாடுகள் பெற்ற பதக்கங்களின் விவரம் கீழே உள்ளது.

| நாடு | தங்கப்பதக்கம் | வெள்ளிப்பதக்கம் | வெண்கலப்பதக்கம் |
|---|---|---|---|
| இந்தியா | 30 | 40 | 45 |
| இலங்கை | 26 | 25 | 40 |
| மாலைதீவு | 10 | 15 | 50 |
| பிரித்தானியா | 05 | - | 35 |
| நேபாளம் | - | 40 | 35 |


38. இலங்கைக்குக் கிடைத்த முழுப் பதக்கங்களின் எண்ணிக்கை எவ்வளவு? (..........................................)

39. 5 நாட்டுக்கும் கிடைத்த தங்கப்பதக்கம் எத்தனை? (...............................)

40. மாலைதீவுக்குக் கிடைத்த வெள்ளிப்பதக்கமும், வெண்கலப்பதக்கங்களுக்குமிடையே உள்ள வித்தியாசம் எத்தனை? (..........................)

41. 5 நாடுகளும் பெற்ற தங்கப்பதக்கம், வெள்ளிப் பதக்கம், வெண்கலப்பதக்கம் என்பவற்றின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு? (...........................)

42. ஒவ்வொரு நாடும் பெற்ற வெண்கலப்பதக்கத்தையும் வரைபில் குறித்துக் காட்டுக.




✱ **பின்வரும் வினாக்களுக்குரிய விடைகளைக் கணித்து எழுதுக.**

43. ஒரு காணியின் ¼ பங்கின் விலை ரூபா 10,000 ஆகும். எனின் அக்காணியின் 1/5 பங்கின் விலை எவ்வளவு? (.......................................)


44. $1kg$ மிளகாயின் விலை ரூபா 65. 00 ஆகும். $300g$ மிளகாயின் விலை யாது? (.......................)

45. பேருந்து நிலையத்திலிருந்து இரண்டாவது பேருந்து காலை **8.15** இற்குப் புறப்பட்டது. முதலாவது பேருந்தானது இதற்கு **35** நிமிடங்களுக்கு முன்னர் புறப்பட்டது. எனின, முதலாவது பேருந்து புறப்பட்ட நேரம் யாது? (..............................)


46. வானொலிப் பெட்டியொன்றின் விலை ரூபா 2800 ஆகும். தொலைக்காட்சிப் பெட்டியொன்றின் விலை அதன் 6 மடங்காகும். தொலைக்காட்சிப் பெட்டியொன்றையும் வானொலிப் பெட்டியொன்றையும் விலைக்கு வாங்குவதற்கான மொத்தப் பணத் தொகை யாது? (............................)


47. **750*ml*** பாத்திரம் ஒன்றினால் 7 தடவைகளில் பாத்திரமொன்றை நிரப்பக்கூடிய நீரின் கனவளவு யாது? (...........................)

48. தரப்பட்ட உருவில் நிழற்றப்பட்ட பகுதியை தசம எண்ணில் எழுதுக. (..........................)




49. A மணிக்கூட்டில் காட்டப்பட்டுள்ள நேரம் 30 நிமிடம் முந்தி ஓடுகிறது. இதன் சரியான நேரத்தை டிஜிற்றல் கடிகாரத்தில் (நியம நேரத்தில்) B மணிக்கூட்டில் குறித்துக் காட்டுக.



A


B


50. சென்ரிமீற்றர் நாடா இரண்டு இங்கே காட்டப்பட்டுள்ளன. இரண்டிலும் 2 *cm* நீளமான துண்டுகள் வெட்டி எடுத்த பின்பு இரண்டையும் ஒரே நீளமாகப் பொருத்தினால் அதன் மொத்த நீளம் யாது? (.........................)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

51. 

இவ்வுருவின் சுற்றளவு யாது?
(........................)

52. தரப்பட்ட ஆணியின் நீளம் யாது? 


(........................)

53. மீனா முற்பகல் 6.45 இற்கு வீட்டில் இருந்து புறப்பட்டு 25 நிமிடங்களின் பின்னர் பாடசாலையை அடைந்தாள். அவள் பாடசாலையை அடைந்த நேரம் யாது? (........................)

54. இதனைக் கூட்டுக. $\frac{1}{9} + \frac{2}{3}$

55. கீழேயுள்ள எண்ணைச் சொற்களில் எழுதுக.
50508 - ..............................................................................

56. தரப்பட்டுள்ள திண்ம உருவின் பெயர் என்ன?
(..................................................)
இதன் முகங்கள் எத்தனை?
(..................................................)



57. "ஒரு நாள் அதிகாலையில் நானும் நண்பன் தேவசுதனும் வழக்கம்போல எங்கள் சனசமூக நிலையத்தின் மைதானத்தைச் சுற்றி மும்முறை ஓடிவிட்டு பார்வையாளர் 'மண்டபத்தில் சிறிது நேரம் ஓய்வெடுத்தோம். அப்பொழுது மண்டபத்தின் சுவரோரமாகச் சிறியதொரு நாய்க்குட்டி கிடப்பதைக் கண்டோம். அது மிகவும் நலிந்த குரலில் குரைத்துக் கொண்டிருந்தது... " என்னும் 'சம்பவத்தைத் தொடர்ந்து ஆக்கபூர்வமான ஆறு வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் நான்கு சொற்களுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலை தொடர்பு திருத்தமானதாக இருத்தல் வேண்டும்.)

1) ..............................................................................
..............................................................................
2) ..............................................................................
..............................................................................
3) ..............................................................................
..............................................................................
4) ..............................................................................
..............................................................................
5) ..............................................................................
..............................................................................
6) ..............................................................................
..............................................................................

-நிறைவுற்றன-

## கடந்த 14.08.2009 உதயன் நாளிதழில் வெளியான விசேட புலமைப்பரிசில் பரீட்சை வெளியீடு 04 இன் விடைகள்

### வினாத்தாள்-I

01 - 2, 02 - 4, 03 - 3, 04 - 4, 05 - 3, 06 - 2, 07 - 3, 08 - 3, 09 - 2, 10 - 2,11 - 3,12 - 4, 13 - 1, 14 - 2, 15 - 2, 16 - 2,17 - 2, 18 - 2, 19 - 3, 20 - 3, 21 - 3, 22 - 4 ,23 - 3, 24 - 4, 25 - 2, 26 - 4, 27 - 1, 28 - 2, 29 - 3, 30 - 4, 31 - 4, 32 - 3,33 - மது, மரை, திரை, 34 - செண்பகம், 35 - 4, 36 - 2, 37 - 3, 38 - 20, 39 - 37, 40 - பி.ப 3.55

### வினாத்தாள்-II

01. 1 - பிழையுள்ள சொற்களின் கீழ்க்கோடிடுக, 2 - ஆராச்சி - ஆராய்ச்சி, முயற்ச்சி - முயற்சி, தசாப்ததத்தில் - தசாப்தத்தில், சழைக்காது - சலைக்காது, 3 - பத்து வருடங்களைக்கொண்ட காலப்பகுதி, 4 - மேதை/அறிவியல் மேதை, 5 - வயிற்றெரிச்சல் - பொறாமைப்படுதல், முன்னுக்கு வருதல் - வாழ்க்கையில் முன்னேறுதல், 6 - அறிவியல், 7 - ஊக்கமும் விடா முயற்சியும் வெற்றிக்கு ஏணிப்படிகள், 8 - ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது.

02. பசுக்கள் தினமும் பால் சுரக்கும், நான் இரவில் பாடங்களைக் கற்பேன், பறவைகள் ஆகாயத்தில் பறந்து செல்கின்றன.

03. மாணவர் பாடசாலைக்கு வந்தனர், அவர் அழகான நடனம் ஆடினார்,

04. இ.ம.வ - இலங்கை மத்திய வங்கி, இ.ஒ.கூ - இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்.

05. 1 - This is my Book, 2 - Snake/ SNAKE

06. 1 - இங்கே வா /இங்கே வாருங்கள், 2 - இரவு வந்தனம் /இரவு வணக்கம்.

07. 1 - லமாய் செல்லம் கரணவா.

08. 1 - நாம் பாடசாலைக்குச் செல்வோம், 2 - நான் பாடம் படிக்கின்றேன்.

09. ஒயாகே வயச கீயத?

10 - 3, 11 - 2, 12 - 3, 3 - 4, 14 - 2, 15 - 3, 16 - 3, 17 - 4, 18 - 1, 19 - 1, 20 - 2, 21 - 1, 22 - 3, 23 - 3, 24 - 2, 25 - 1, 26 - 3, 27 - 3, 28 - 4, 29 - 3, 30 - 2

31. 1 - மின் உற்பத்தி, 2 - எண்ணெய்க்கல், 3 - கர்ப்பு, 4 - பெரிய வாயன்.
32. வெட்டியெடுக்கப்பட்ட கம்பி - 25 x 10 = 250cm மிகுதி → 15m - 250cm → 15m - 2 1/4m = 12 1/2m

33. 85 + 165 + 63 = 313km அல்லது 228 + 85 = 313km

34. (12 + 6 + 4) x 2 = 22 x 2 = 44km


35. தாய் : மகள், 4 மடங்கு : 1 மடங்கு, 60kg 600g : 15kg 150g, 15kg 150g

36.
- ❋ நிசார் குளவிக் கூட்டிற்கு கல்லால் எறிந்தபோது குளவிக்கூடு உடைந்தது.
- ❋ குளவிக் கூட்டிலிருந்து ஏராளமான குளவிகள் எங்களை நோக்கி வந்தன.
- ❋ நாங்கள் இருவரும் தப்பினோம் பிழைத்தோம் என ஓடினோம்.
- ❋ அவ்வேளை சரத்தின் கால் கல்லில் மோதி விழுந்து விட்டான்.
- ❋ குளவிகள் சரத்தை கொட்டத் தொடங்கின.
- ❋ சரத் வலி தாங்க முடியாது அலறினான்.
- ❋ நான் சரத்தை தூக்கிக்கொண்டு ஓடினேன்.

மாணவர்களே! இவ் விடைக்குறிப்புகள் தொடர்பான தெளிவின்மைகளை நிவர்த்தி செய்ய எமது கல்விச்சுடர் ஆசிரியர் **என்.சந்திரகுமார்,** *மட்டக்களப்பு* தொ.இ- 0778795767 அவர்களை தொடர்புகொண்டு விளக்கங்களைப் பெறமுடியும்.



யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற முத்தமிழ் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மேற்படி கல்வியியற் கல்லூரியின் முன்னாள் பீடாதிபதியும் தற்போது கல்வியமைச்சின் நிபுணத்துவ ஆலோசகருமான கலாநிதி தி.கமலநாதன் அவரது பாரியார் திருமதி இராஜாம்பிகை கமலநாதன் ஆகியோருக்கு கல்லூரி பீடாதிபதி நினைவுக் கேடயத்தை பரிசாக வழங்கியபோது எடுக்கப்பட்ட படம்.



வலி.வடக்குப் பிரதேச சபையின் தெல்லிப்பழை பொது நூலகத்தில் அண்மையில் கொண்டாடப்பட்ட தேசிய நூலக வாரத்தின்போது நடைபெற்ற புத்தகக் கண்காட்சியை பிரதேச சபையின் செயலாளர் இ.அருணகிரி மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப் பதைப் படத்தில் காணலாம்.



பண்டத்தரிப்பு வை.எம்.சி.ஏ.முன்பள்ளியின் விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றபோது விருந்தினர்கள் சிறார்களின் 'பான்ட்' வாத்திய அணிவகுப்புடன் அழைத்து வரப்படுவதைப் படத்தில் காணலாம். (50-38)



மயிலிட்டி றோ.க.த.க.வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்ட தெல்லிப்பழைக் கோட்டப் பணிப்பாளர் ச.கைலாசநாதன் உரையாற்றுவதையும், பாடசாலை அதிபர் திருமதி லீ.அருளையா, முன்னாள் அதிபர் செ.அன்றன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org